469

# கிராம நலம்

கதிர் - 14 நெல் - 2


நவம்பர் - 1968

J2
Y31m211,N58
N68.14.2
158402



நவம்பர்-'68
MADRAS RAFFLE TICKET
ரூ1 A 383152
GAZETTEER
RECORD OFFICE BUILDINGS
முதல்
குலுக்கலில்---
லட்சாதிபதிகள்


REW கரும்பு ஆலைகள்

SUGARCANE CRUSHERS



VERTICAL





ரோலர்களும், பல் சக்கரங்களும் நவீன முறையில் பிரத்யேக வார்ப்படம் செய்யப்படு வதால், நீண்ட நாட்கள் உழைக்கக் கூடியவை.

பினடோசாமான்கள்

HORIZONTAL

ராஜா இன்ஜினிரிங் ஒர்க்ஸ்
குருவராஜபாளையம் PO. (via) ஒடுகத்தூர், N. A. Dt.

தந்தி : மெஷினரி. தொலைபேசி : 235 தபால் பெட்டி எண் : 32

பாபுலர் இண்டஸ்டிரியல் டிஸ்டிரிபியூட்டர்ஸ்,
24, டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

கிளை :
119, நம்பர் 2 ரோடு, மாயூரம்.

கிளை :
7 சி. ராமலிங்க முதலியார் தெரு, விஜயபுரம், திருவாரூர்.

தந்தி : மெஷினரி
தொலைபேசி : 456.

கி ர் லோ ஸ் க ர்

ஆயில் இஞ்சின்கள், மின்சார மோட்டார்கள், பம்பு செட்டுகள், ஸ்பேர் பார்ட்டுகளுக்கு சென்னை, எம்/எஸ் பாரி கம்பெனியாரின் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள். எங்களிடம் எல்லா வகை பைப் பிட்டிங்குகளும், கலாய் பைப்புகள், ரப்பர் பாலிதின் ஹோஸ்களும், இன்ஜின் ஆயில்களும் கிடைக்கும்.

எங்கள் தொழிற்சாலையில் எல்லாவித லேத் வேலைகளும், ஆயில் இன்சின்கள், பம்பு செட்டுகள் சர்வீஸும் செய்யப்படும்.

குறிப்பு :—எங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் ஆயில் இன்சின், மின்சார மோட்டார், பம்பு செட்டுகளுக்கு, இரண்டு ஆண்டுகளுக்கு இலவச மேற்பார்வையும், சர்வீஸும் செய்து தரப்படும்.

என்றும் தங்களுக்குப் பணி செய்யவே காத்திருக்கும் எங்கள் விற்பனை நிலையத்திற்கு ஒருமுறை வருகைத் தரக் கோருகிறோம்.

# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 14 நவம்பர் 1968 நெல் 2

GAZETTEER UNIT
2/6/69
MADRAS RECORD OFFICE BUILDINGS, M

## வான்புகழ் வள்ளுவரின் 2000-ம் ஆண்டு விழா

உலகப் பொதுமறையாம் 'திருக்குறள்' தந்த வள்ளுவப் பெருந்தகையின் 2000-ம் ஆண்டு விழா, தைத் திங்களில் (69 ஜன-வரியில்) நடைபெறவிருக்கிறது. தனி மனிதனின் நல்வாழ்வுக்கும், சமுதாய அற நெறிக்கும், உள்ளங்களின் இன்ப, அன்பு வாழ்வுக்கும் அடிப்படையான கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டும் தனிப் பெருமை, திருக்குறளுக்கு உண்டு. எல்லாப் பொருளும் திருக்குறளின்பால் உண்டு. அதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை.


எம்மதமும் சம்மதமாய் ஏற்றுக்கொள்ளக்கூடிய திருக்குறள், தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல; அகில உலகம் ஏற்கும்பொது நூலாகும். அத்தகைய தனிச் சிறப்பு பெற்ற திருக்குறளைத் தந்த வான்புகழ் வள்ளுவரின் 2000-ம் ஆண்டு விழா, சீருடனும், சிறப்புடனும், ஏற்றத்தோடும் எழிலோடும், உலகமெங்கும் கொண்டாடப்படவேண்டும்.

இவ்விழா, தைத் திங்கள் தொடங்கி தமிழ் நாடெங்கிலும் கொண்டாடப்படவேண்டும். தமிழகத்தின் தலைநகராம் சென்னையிலும், மாவட்டங்களிலும், தமிழகமெங்கிலும் இவ்வாண்டு தைத் திங்கள், வள்ளுவர் விழாத் திங்களாக அமைய வேண்டும். "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும்" என்றார் அமரகவி பாரதி. ஊர்களெல்லாம், பட்டி தொட்டிகள் எல்லாம், குறள் நெறியின் மணம் வீச வேண்டும். இவ்விழாவினை ஒட்டி ஊர்வலங்கள், கலை நிகழ்ச்சிகள், குறளில் கூறப்படும் கருத்துக்களை விளக்கும் பொருட்காட்சிகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், கவியரங்குகள், பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டி முதலியன ஆங்காங்கு நடத்தப்பெறல் வேண்டும்.

இவ்விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு, நமது மாண்புமிகு முதலமைச்சரின் விருப்பத்திற்கிணங்க, மற்ற அமைச்சர்கள் அடங்கிய செயற் குழுக்கள் விரைவில் அமைக்கப்படும்.

இவ்வாண்டுப் பொங்கல் திருநாள், தமிழ்ப் பெருமக்களுக்கே தனிச் சிறப்பளிக்கும் திருநாளாகும். பொங்கல் திருநாளிலிருந்து ஒருமாத காலம், வள்ளுவரின் 2000-ம் ஆண்டு விழா கொண்டாடும் ஏற்பாடுகள் நடைபெறும். இது தமிழ்க் குலத்திற்கே பெருமை தரும் பெருவிழாவாகும். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட" தமிழ்ச் சமுதாயம், தன்னுடைய ஒப்பற்ற புலவர் பெருமகனுக்கு, தமிழகத்திற்கே உரித்தான தனிப்பண்பு மிளிர விழாவெடுக்க வேண்டுமென அன்புடன் நினைவூட்டுகிறோம்.

முதல் அட்டைப் படம் : தமிழக அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ், முதல் குலுக்கலில் பரிசு பெற்ற லட்சாதிபதிகள்.




# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மகாநாடு

## மாண்புமிகு உணவு அமைச்சரின் உரை

[5—11—... சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மகாநாட்டில், மாண்புமிகு உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் ஆற்றிய உரையின் சாரம்.]

15402

1968 ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை, நாம் 5¾ லட்சம் டன்கள் அரிசி கொள்முதல் செய்ய திட்டமிட்டு இருந்தோம். 5·1 லட்சம் டன்கள் அரிசியைத்தான இதுவரை நாம் கொள்முதல் செய்துளளோம். பருவ மழை பல இடங்களில் பொய்த்ததன் காரணமாக, விளைச்சல் சற்று பாதிக்கப்பட்டிருந்தது என்பதையும் நாம் மனதிற்கொண்டு பார்த்தால், கொள்முதலில் நாம் இதுவரை அடைந்துள்ள சாதனை திருப்திகரமானதுஎன்றே கூறலாம். அண்மையில் அனைத்திந்திய உணவு அமைச்சர்கள், முதலமைச்சர்கள் மாநாடு டெல்லியில் கூடியபோது, மற்ற எல்லா மாநிலங்களையும்விட தமிழகம் 1967-68 கரீப் ஆண்டிலே கொள்முதலில் சிறந்த சாதனையைச்செய்து அனைத்திந்தியாவிலும் முதலிடம் பெற்றிருந்தது என்று மத்திய உணவு அமைச்சர் பாராட்டினர். அந்தப் பாராட்டுதல், உங்களுக்கும் உங்கள் தலைமையின்கீழ் பல்வேறு வட்டங்களில் பணியாற்றிய ஊழியர்களுக்கும் உரியது. கொள்முதலின் அவசியத்தைத் உணர்ந்து, மனமுவந்து ஒத்துழைக்க முன்வந்த வேளாளப் பெருமக்களுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.



மாண்புமிகு உணவமைச்சர்

தமிழகத்தில் விளைச்சலைப் பெருக்க இரு போக விளைச்சல் திட்டம், சாகுபடி பெருக்கத்திட்டம் போன்ற பற்பல தீவிர முயற்சிகளைப் பேரறிஞர் அண்ணா தலைமையில் தமிழக அரசு உறுதியுடனும் ஊக்கத்துடனும் சென்ற ஓராண்டுக் காலமாக மேற்கொண்டு வந்துள்ளது. இதன் பயனாக, விளைச்சலிலே கணிசமான உயர்வு ஏற்பட்டுள்ளது. பருவ நிலை நமக்குச் சாதகமாக இருந்திருந்தால், இன்னும் அதிக அளவில் நாம் வெற்றி கண்டிருக்கமுடியும். இம்முயற்சிகளில் நாம் மேலும் உற்சாகத்துடனும், உறுதியுடனும் ஈடுபடுவதற்கு ஆதரவு அளித்து நம்மை உந்தும் வகையிலே நாம் இதுவரை கண்டுள்ள சாதனை அமைந்துள்ளது.

### படி அரிசித் திட்டத்தால் பயன்பெறும் மக்கள்

தமிழகத்தின் மக்கள் தொகையில் 46 சதவிகிதத்தினர் இப்போது சட்ட பூர்வமான பங்கீட்டு முறை, குடும்பக் கார்டு முறை ஆகியவற்றினால் பலன் அடைந்து வருகின்றனர். 45 லட்சம் மக்கள் ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தின் பலனை அடைந்து வருகின்றனர். எஞ்சிய 128 லட்சம் பேருக்கும் வெளிச் சந்தையில் கிடைப்பதைவிட மிகக் கணிசமாகக் குறைந்த விலையில் நாம் அரிசி வழங்கி வருகின்றோம். சென்னை, கோவை, சென்னை சார்புப்பகுதிகள் ஆகிய இடங்களில் படி அரிசி ஒரு ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றால், மற்ற 9 மாவட்டங்களில் படி அரிசி ரூ. 1·17-க்கும், இன்னும் 3 மாவட்டங்களில் படி அரிசி ரூ. 1·22-க்கும் வழங்கி வருகின்றோம். இந்த மலிவு அரிசித் திட்டத்தின் நன்மைகளை உணர்ந்துள்ள மக்கள், இத்திட்டம் இன்னும் புதிய பல பகுதிகளுக்கு விரிவாக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றனர்.

### ஆக்கப் பணியில் வெற்றி காண்போம்

பொது மக்களின் கோரிக்கைக்கு இணங்க, புதிய இடங்களுக்கு இத்திட்டத்தை விரிவாக்க வேண்டுமெனறால், கொள்முதலை இன்னும் குறிப்பிடத்தக்க அளவு உயர்த்துவது அவசியமாகிறது. இந்த நிலைமையை உணர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மட்டுமல்ல; கொள்முதலில் தொடர்பு கொண்டுள்ள பணியாளர் அனைவருமே தங்களைச் சார்ந்திருக்கின்ற பெரும் பொறுப்பினை அறிந்து கொள்முதலை தீவிரமாக்க திறமையாகப் பணியாற்றுவது இன்று முக்கிய கடமையாகின்றது. அரசின் அழைப்பை ஏற்று, இந்த ஆக்கப்பணியினை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வரும் மாதங்களில் இன்னும் அதிகக் கவனம் செலுத்தித் தீவிர முயற்சி மேற்கொண்டு, மக்களும் அரசும் போற்றிப் பாராட்டத் தக்க வகையிலே வெற்றி காண்பார்கள் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கையுண்டு.

இந்த ஆண்டு இதுவரை கொள்முதலில் தஞ்சை மாவட்டமும் தென்ஆர்க்காடு மாவட்டமும் மிகச் சிறந்த முறையில் வெற்றி கண்டுள்ளன. அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நம் பாராட்டுதல்கள் உரியவை. செங்கற்பட்டு, திருச்சி, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களிலும் கொள்முதல் மொத்தத்தில் திருப்திகரமாகவே இருந்துள்ளது. வட ஆர்க்காடு, மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களிலே கொள்முதலில் பெரும் துண்டு விழுந்துள்ளது. இதை வருகின்ற மாதங்களிலாவது ஈடு செய்ய அந்த மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் தீவிர முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறேன். கொள்முதலில் துண்டு விழுந்துள்ள மாநிலங்களிலும் இக்குறை ஏற்பட்டதற்கு முக்கிய காரணம், பருவ நிலை பாதகமாக இருந்ததுதான் என்பதை நான் உணர்கின்றேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கவனக்குறைவோ முயற்சிக் குறைவோ இதற்குக் காரணம் அல்ல என்பதில் நாம் ஆறுதல் கொள்ளலாம். இருந்த போதிலும் மாநிலம் முழுவதும் 173 லட்சம் பேருக்கு நாம் மலிவான விலையில் அரிசி விநியோகம் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் நேரத்திலே, எந்த ஒரு மாவட்டத்திலாவது துண்டு விழுந்து விட்டால், அது திட்டம் முழுவதையுமே பாதிக்கும் என்பதை உணர்ந்து, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் சிறப்பான கவனம் செலுத்தித் மிகச் சீரிய முறையிலே கொள்முதலை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

பேரறிஞர் அண்ணா பொறுப்பை ஏற்றவுடன் முதன் முதலில் அவர்கள் செய்த காரியம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரையும் அழைத்து, உணவுக் கொள்கை பற்றி விவாதித்ததுதான். வசதி படைத்தவர்களை நன்கு பயன்படுத்தி வசதிக் குறைவானவர்களை தட்டிக் கொடுத்துக் கொள்முதல் செய்ய வேண்டுமென்றும் மக்களுக்கு மனக்கசப்போ, ஆத்திரமோ, அதிருப்தியோ ஏற்படாத வகையிலே கொள்முதல் அமைய வேண்டுமென்றும் அவர் தெளிவான ஒரு கொள்கையை நமக்கு வகுத்தளித்தார். அந்த அடிப்படையில்தான், நம்முடைய கொள்முதல் முயற்சிகள் தொடர்ந்து தீவிரமாகச் செயல்படவேண்டும். இதையொட்டித்தான் ஓர் ஏக்கராவும், அதற்கும் குறைந்த அளவும் நில உடைமை கொண்டவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டாமென்று நாம் நம் மீதே கண்டிப்பாக தடை ஒன்றை விதித்துக் கொண்டோம். மொத்தத்திலே சென்ற ஓராண்டாக நடந்து வந்த கொள்முதல் முயற்சிகளின் போது, மக்கள் குறைபட்டுக் கொள்ளவோ புகார் செய்யவோ அதிருப்தி அடையவோ இடமில்லாமல், கண்டிப்பாக, ஆனால் கடுமையில்லாமல், உறுதியுடன், ஆனால் உபத்திரவம் செய்யாமல், கொள்முதல் வேலை நடந்து வந்துள்ளது என்பதற்காக, நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பாராட்ட விரும்புகின்றேன்.

[42-ம் பக்கம் பார்க்கவும்]

**மக்களுக்குச் செய்யும் மகத்தான சேவை**

# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மகாநாடு



மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்

**[5-10-68-ல் சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மகாநாட்டில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஏ கோவிந்தசாமி அவர்கள் ஆற்றிய உரையின் சாரம். ]**

"தமிழ்நாட்டில் வேளாண்மை மிக்க நல்ல முறையிலே நடந்து வருகிறதென்று பலராலும் பாராட்டப்பெற்று வந்துள்ளது. சென்ற ஆண்டு தமிழ் நாட்டுக்கு வந்த மத்திய உணவு விவசாயத்துறை அமைச்சர் திரு ஜகஜீவன்ராம், தமிழ் நாட்டில் விவசாயத் திட்டங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் குறித்து மிகவும் பாராட்டினார். அது உங்கள் யாவருக்கும் தெரியும்.

**நமது குறிக்கோளை அடைவதற்குப் பேருதவியாக இருந்தவை, உயர் விளைச்சல் ரகத் திட்டங்களும், சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களுமே என்றால், அது மிகையாகாது.**

இந்தத் திட்டங்கள் வெற்றிபெறுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய நீங்கள் மிக்க ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் உழைத்தீர்கள். சென்ற ஆண்டு தஞ்சையில் குறுவை மகசூலில் இருந்து மட்டும் ஒரு லட்சம் டன் அரிசி சென்ற ஆண்டினைவிட அதிகமாகக் கொள்முதல் செய்யப்பட்டது. இதிலிருந்து உற்பத்தி வெகுவேகமாக உயர்ந்துள்ளது என்பது தெரிகிறது. தஞ்சையில் மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களிலும் உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிட்டதில், நமக்கு அமோக வெற்றி கிடைத்துள்ளது.

பருவ மழை முதலில் சற்று திருப்திகரமாக இல்லை. மேட்டூர்த் தேக்கத்தில் தண்ணீர் அளவு குறைந்திருந்தது என்றாலும், மிகவும் தைரியமாகவே நாம் சாகுபடியை ஆரம்பித்தோம். பருவமழை சற்றுத் தாமதமாகவே பெய்துவந்ததால், தஞ்சையில் முதல் போகத்தை மூன்று லட்சத்திலிருந்து ஐந்து லட்சம் ஏக்கராகக் கடந்த ஆண்டு உயர்த்துவது சாத்தியமாயிற்று. மற்ற மாவட்டங்களிலும் உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிட்டதைச் சேர்த்துக்கொண்டால், சுமார் 8 லட்சம் ஏக்கர்களில் உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிடப்பட்டன.

இரண்டாவது போகத்திற்குத் தேவையான நீர் இறுதிக் கட்டத்தில் சில பகுதிகளில் கிடைக்காத போதிலும், மொத்தத்தில் தமிழகத்தில் உணவு உற்பத்தி மிகவும் உன்னத நிலையை அடைந்திருந்தது. இதற்கு உயர் விளைச்சல் ரகங்கள் மட்டுமல்ல, நாம் கையாண்ட கட்டுக்கோப்பான சாகுபடி முறைகளும் காரணமாகும்.

### இன்றியமையா நீர்ப்பாசனத் திட்டங்கள்

தேவையான தண்ணீர் இருந்தால்தான், கட்டுக்கோப்பான சாகுபடி முறைகளை வெற்றிகரமாக அமுல்செய்ய முடியும். அதற்குச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மிகவும் முக்கியமானது எனக் கருதுகிறேன். கங்கை நதி பாயும் வடக்கு மாநிலங்களில் கூட சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் முக்கியத்துவத்தை இப்பொழுது உணர்ந்துள்ளார்கள். பல்லாயிரக் கணக்கான கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் இந்த ஆண்டு தோண்டப்பட்டுள்ளது. தமிழகத்திலும் பருவநிலைக் கோளாறுகளை நாம் சமாளிக்க வேண்டுமென்றால் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைத் தீவிரமாகச் செயலாக்க வேண்டும். இதற்காகப் போதிய நிதி வசதி அளிக்க அரசாங்கம் எப்பொழுதும் தயாராக உள்ளது.

### விவசாயிகளுக்கு உடனுக்குடன் கடன் வழங்கல்

இந்த நிதி ஆண்டு முதல் கிணறு வெட்டவும் பம்பு செட்டுகள் அமைக்கவும் விவசாயிகளுக்கு வேண்டிய கடன்கள் அரசாங்கத்தால் நேரிடையாக வழங்காமல் மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு நிறுவனங்கள் மூலமாக வழங்க, அரசாங்கம் கொள்கை மாற்றம் செய்ததை, நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். தொடக்கக் காலத்தில், கூட்டுறவு நில அடமான வங்கி, வேளாண்மைக் கழகம் முதலியவை ஏற்கனவே அனுசரித்து வந்த முறைகளாலும் சட்டத்தாலும் சில இடர்ப்பாடுகள் இருந்ததினால், விரைவாக கடன்களை வழங்க இயலவில்லை. ஆனால், தற்போது அரசாங்கம் சில சட்ட திருத்தங்களைக் கொண்டுவந்து அதையொட்டி கூட்டுறவுப் பதிவாளர் அவர்கள் விளக்கமான அறிவுரைகளைக் கூட்டுறவு நில அடமான வங்கிகளுக்கு வழங்கி உள்ளதை, நீங்கள் நன்கு அறிவீர்கள். இதன் காரணமாக, ஏற்கனவே இருந்து வந்த சிக்கல்கள் நீக்கப்பட்டுத் துரிதமாகக் கடன் வழங்குவதற்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. இவை செய்தும், சென்ற ஆண்டு இதே காலத்தில் வழங்கப்பட்ட கடன் தொகையைவிட, இந்த ஆண்டு வழங்கப்பட்ட கடன்தொகை குறைவாக இருப்பதை அறிகிறோம். இந்த ஆண்டு புதிய கிணறுகள் வெட்டவும், பம்புசெட்டுகள் அமைக்கவும் கூட்டுறவு நில அடமான வங்கிகள் மூலமாக 12 கோடி ரூபாய் கடன் வழங்க வேண்டுமென்று அரசு திட்டமிட்டுள்ளது. இன்றைய வரையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கடன் வழங்குதலில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறதென்ற விவரம் மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்து கிடைக்கவில்லை. இருப்பினும், கூட்டுறவுப் பதிவாளரிடமிருந்து கிடைத்த விவரப்படி, ஏறக்குறைய 3 அல்லது 4 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பது தெரிகிறது. இந்த நிதி ஆண்டு முடிய இன்னும் சில மாதங்களே இருப்பதினால், எல்லா மாவட்ட ஆட்சியாளரும் இதில் தீவிர கவனம் செலுத்தித் தக்க முன்னேற்றம் காட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். முன்னேற்றம் அடையச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

### பாசன வசதிகள் பாமர விவசாயிக்குக் கிட்ட. . .

பம்பு செட்டுகள் வழங்குவதிலும், அவைகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்குவதிலும் தாமதம் ஏற்பட்டிருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். அதற்கு விவசாயிகளுக்கும் இதைத் தெரிவித்து, மேல் நடவடிக்கை எடுத்துத் தக்க முன்னேற்றம் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு உரம் கிடைப்பதிலும் சில கஷ்டங்கள், பற்றாக்குறை ஆண்டின் துவக்கத்தில் இருந்து வந்தன. இப்பொழுது நிலைமை மிகவும் சீர்திருந்தி இருக்கிறது. உர விநியோகத்தில் பல புதிய முறைகளைப் புகுத்தியுள்ளோம். இந்த உரங்களை நல்ல முறையில் உபயோகித்தால் விவசாய உற்பத்தியை இந்த ஆண்டு பெருக்குவதற்கு மிகவும் உதவியாக இருக்கும். உரங்கள் வாங்குவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொடுக்கும் கடன்கள், தீவிர உரத்திட்ட கடன்களையும் முழுவதும் உபயோகிக்க, நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு பயிர்ப் பாதுகாப்பில் ஒரு புதிய முறை கையாளப்பட்டது. நெற்பயிரில் ஒரு லட்சத்து அறுபத்தி ஏழாயிரம் ஏக்கர்களில் பூச்சிகள் தாக்குதலிலிருந்து விமானம் மூலம் மருந்து தெளித்து காப்பாற்றப்பட்டது. இது தமிழக விவசாய சரித்திரத்திலேயே ஒரு புரட்சி என்றும் சொல்லலாம். விமான மூலம் மருந்து தெளிப்பதை இந்த ஆண்டும் தொடர்ந்து செய்ய தமிழக அரசு உதவும்.

### உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை

இந்த ஆண்டு உயர் விளைச்சல் ரகத் திட்டங்களை மிகத் தீவிரமாக அமுல்செய்ய வேண்டுமென்று உத்தேசித்திருந்தோம். ஆறு லட்சம் ஏக்கர்களில் தஞ்சையில் இருபோக சாகுபடியாக ஆக்கவேண்டுமென்று திட்டமிட்டோம். ஆனால் பருவக் கோளாறினால் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதில் காலதாமதம் ஏற்பட்டதாலும் நாம் எதிர்பார்த்த பரப்பளவில் குறுவை சாகுபடி செய்ய இயலாது போயிற்று. இருப்பினும், இந்த ஆண்டு நல்ல மேனி பேரவதால், குறுவை மகசூல் அதிகமாக இருக்கும் என எண்ணுகிறேன். வடக்கு மாவட்டங்களில் பருவ மழை மிகவும் குறைந்து விட்டதால், மிகவும் கஷ்டமான நிலை தோன்றியுள்ளது. புஞ்சை விதைப்புகள் மிகவும் குறைந்துள்ளது. கிணறுகளிலும், ஏரிகளிலும் நீர்வற்றிப் போன காரணத்தால், நெல் நடவும் இந்த மாவட்டங்களில் சூழ்நிலை அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் நாம் உற்பத்தியைப் பெருக்க என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதை ஆராய்வது மிகவும் நன்மையாக இருக்கும்.

[46-ம் பக்கம் பார்க்கவும்]

## "உணவுத்துறையில் காணும் வெற்றிதான் எல்லா வெற்றிக்கும் அடிப்படை"

# சிறப்புக் கட்டுரை

[திரு கே நடராசன்]

## முதல் குலுக்கலில் லட்சாதிபதிகள்

மாண்புமிகு சட்டம், கூட்டுறவு அமை

அக்டோபர் திங்கள் 14–ஆம் நாள். கோவை, ரெயில்வே குடியிருப்பில் வாழும் 'பெயிண்டர்' (வர்ணம் பூசுபவர்) திரு எட்வர்ட், தனது குடும்பத்தின் அன்றைய வயிற்றுப்பாட்டுக்கு ஏதாவது பணம் கிடைக்காதா என்று வேலைக்குச் செல்கிறார். அதே பாட்டாளி எட்வர்ட், மாலையில் தனது குடிசைக்குத் திரும்பிவரும்போது, அவர் ஒரு லட்சாதிபதி !

மதுரை மாவட்டம், கல்லுப்பட்டியில் பள்ளிக்கூடத்தில் கீற்றுக் கொட்டகை வேய்ந்து கொண்டிருக்கிறார் திரு என். கருப்பையா. அவர் லட்சத்திற்கு அதிபதி ஆகிவிட்டதாக அறிவிக்கிறது வானொலி !

சென்னை மயிலாப்பூரில் ஒரு பட்டாணிக் கடை. பத்து காசுக்கும் பதினைந்து காசுக்கும் பட்டாணி விற்றுக்கொண்டிருக்கிறார் திரு கண்ணுதல். மாலை வேளையில் வீடு தேடி வந்து அவர் லட்சாதிபதி ஆகிவிட்டதாக அறிவிக்கிறார் ஓர் அம்மையார் !

கும்பகோணத்தில், தாய்வீட்டிலிருந்த திருமதி ரங்கநாயகியிடம், அவர் கணவர் திரு ரங்கநாதன் ஆவலோடு சொன்ன செய்தி "நாம் லட்சாதிபதி ஆகிவிட்டோம்" என்பது !

இதுபோல், தாராபுரம் ராஜேந்திரா எண்ணெய் நிலைய உரிமையாளர் திரு சண்முகசுந்தரம், சிங்காநல்லூர் மாவு அரவை நிலைய உரிமையாளர் திரு என். வி. பழனியப்பன், திருச்சி ரெயில் நிலையப் பாதுகாப்புப் படை உதவி சப்-இன்ஸ்பெக்டர் திரு டி. வி. அலெக்சிஸ், ஏழை சலவைக்கடைக்காரர் கரூர் ... லிங்கம் ஆகியோர் 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 14-ம் தேதி ... லட்சத்துக்கு அதிபர்கள் என்ற நிலைமைக்கு உயர்த்தப்பட்டார்கள் !

இவர்களெல்லாம், அல்லாவுதீனின் அற்புத விளக்கு வைத்திருந்தார்களா? அல்லது மாயாஜால மந்திரக்கோல் வைத்திருந்தார்களா ? அல்லவே அல்ல!

அவர்கள் செய்ததெல்லாம், தமிழக அரசு பரிசுச் சீட்டுகள் வாங்கி வைத்திருந்ததுதான். அவர்களில் ஒரிருவர் நடுத்தர வாழ்க்கைத் தரம் ... வர்கள். மற்றவர்களெல்லாம், ஏழ்மை நிலையில் உள்ளவர்கள். இன்று தமிழக அரசின் இப்புரட்சித் திட்டத்தினால், புதுவாழ்வு பெற்று உள்ளார்கள்.

இவர்கள் தவிர, பத்தாயிரம் ரூபாய் பரிசு பெற்றோர் 40 பேர்கள். ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றோர் 400 பேர்கள். நூறு ரூபாய் பரிசு பெற்றோர் 4,000 பேர்கள்.

(மக்களாட்சியிலே, அரசுப் பணிகளிலே மக்களுக்கு முழுப் பங்கும் உரிமையும் உண்டு. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவதோடு மட்டும் தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று மக்கள் யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. அரசின் செயல் திட்டங்களிலே மக்கள் அவ்வப்போது பங்கு கொள்ளவேண்டும். "நமக்கென்ன" என்று இருந்து விட்டால், நல்வாழ்வுப் பணிகளின் வேகம் வெகுவாகக் குறைந்துவிடும்.

மக்களாட்சியில், அரசின் நடவடிக்கைகளில் மக்களுக்கு முழுப்பங்கு உண்டு என்ற தத்துவத்தின் இலக்கணமாகத் திகழ்வதுதான், தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் திட்டம். இது முழுக்க முழுக்க ஒரு மக்கள் தொடர்பு திட்டமேயாகும். தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் திட்டத்தின் வெற்றி, இன்று பாரத நாட்டின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு எதிரொலிக்கிறது.

—ஆசிரியர்.)

### புதிய திட்டம்

மேலும் மேலும் வரி விதித்து மக்களை வரிப் பளு வுக்காளாக்காமல ஏழைகள் வாழ்வு மலரவும் அரசின் வருவாய் பெருகவும் ஒரு திட்டம் வேண்டும் என்று விழைந்தார், தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள். அதன் பயனாய் உருவானதுதான், இப்புதிய திட்டம். மக்கள் பரம தரித்திரராயிருப்பினும், மனம் நோகாமல் விரும்பிப் பணம் தரும் திட்டம், இது. போனால் ஒரு ரூபாய். மிகச் சிறிய தொகை. வந்தாலோ ரூபாய் ஒரு லட்சம். அதோடு, இதில் அரசுக்குக் கிடைக்கும் நிதி, கல்லூரிகள், மருத்துவ மனைகள், தொழிற் கூடங்கள் போன்ற நல் வாழ்வுத் திட்டங்களுக்குப் பயன்படும்.

இத் திட்டம் உருவாகும் துவக்க நிலையில், பரிசுச் சீட்டு ஒன்று ரூ. 2-க்கு விற்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால், ஏழைகளின் நிலையை நன்கு அறிந்திருந்த தமிழக முதல்வர் "இரண்டு ரூபாய் என்பது சற்று அதிகம். ஒரு சீட்டு ஒரு ரூபாய் என்ற அளவில் இருந்தால் தான், ஏழ்மை நிலையில் உள்ளவர்களும் பங்குபெறமுடியும்" என்று கூறி, அப்படியே சீட்டு ஒன்று ஒரு ரூபாய் என்று மாற்றி அமைத்தார்கள்.

அடுத்த கட்டம், விற்பனையாளர்களை (ஏஜெண்டுகளை) நியமிப்பது. எந்த வரையறையில் விற்பனையாளர்களை நியமிப்பது ? எவ்வளவு முன் தொகை கட்டக்கூடியவர்களை ?

இதற்கும், ... எளிதான முறையைக் கடைப்பிடிக்கச் செய்தார், முதல்வர். அதாவது பரிசுப் பெறுபவர்களைக் குலுக்கி எடுப்பது போல், விற்பனையாளர்களையும் குலுக்கல் மூலம் எடுப்பது என்று. அத்திட்டம் பிறர் எந்தவிதக் குறையும் சொல்லுவதற்கு இடமில்லாததாக அமைந்தது. அதன்படி, சென்னையில் 120 (மாநகராட்சி வட்ட, கோட்ட அமைப்புப் படி) விற்பனையாளர்களும், தமிழகம் முழுவதும் 2,691 விற்பனையாளர்களும், நியமிக்கப்பட்டார்கள்.

### துவக்க விழா

விடுதலை நாளான ஆகஸ்டு 15-ம் நாள், ... ராஜாஜி மண்டபத்தில் மாண்புமிகு தமிழக ... திரு அண்ணாதுரை அவர்கள் தலைமையில், ... ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள், இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். மேதகு ஆளுநர் அ... போது முதலமைச்சரிடமிருந்து, இத்திட்டத்தைத் துவக்கும் முறையில், 20 பரிசுச் சீட்டுகளை வாங்கினார் ...

"ஆளுநர் அவர்கள் 20 சீட்டு வாங்கி இ... அவர்களுக்குப் பரிசு விழவேண்டும் என்று ந... புகிறேன். அவ்வாறு விழுந்தால், அத்தொகையைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அளிக்குமாறு அவர்களைக் ... கிறேன்" என்று வே... விடுத்தார் முதல்வர். ஆளுநர் அவர்களும் அதற்கு இசைந்தார்கள்.

ஆளுநருக்கு வேண்டுகோள் விடுத்தவர், அடுத்து அமைச்ச... கினார். விழாவுக் ... "அமைச்சர்கள் இந்தப் பரிசுச் சீட்டு வாங்கவேண்டாம் என்று நான் கேட்டுக்கொண்டேன்" என்று முதலமைச்சர் அன்புக் கட்டளையிட்டார். காரணம் "அவர்களே ... கள். அவர்களே எடுத்துக்காலா டார்கள்" என்று "நல்லவர்கள் சொல்லமாட்டார்கள். ஆனால், அவ்வாறு சொல்லுகிறவர்கள் நாட்டிலே இருக்கிறார்கள் என்ற கா...ல் தான், இவ்வாறு கேட்...கிறேன்" என்று விளக்கமும் தந்தார்.

பொது மக்களுக்கும் வேண்டுகோள் விடுக்க மறக்கவில்லை முதலமைச்சர். "நீங்கள் விழா ... வீடு திரும்பும்போது, பரிசுச் சீட்டுத் துவக்க ...ச் சென்றிருந்தீர்களே. எனக்கு என்ன வாங்கி வந்தீர்கள் என்று உங்கள் துணைவியார் கேட்பார்கள். இதோ பார் நீ இன்னின்ன கேட்டாயே. அதற்காக உன... சீட்டு வாங்கி வந்தேன். நீ அதிர்ஷ்டசா...தால், லட்ச ரூபாய் விழுகிறதா பார்ப்போ... அதிர்ஷ்டம் குறைவாக இருந்தால், பத்தாயி... விழும் என்று சொல்லிக்கொடுங்கள். உங்கள் வ...காக இங்கேயே பரிசுச் சீட்டுகளை விற்க ஏற்பாடு செய்திருக்கிறோம்" என்றார், தமக்கே உரிய நகைச்சுவையுடன்.

அதைத் தொடர்ந்து, முதலமைச்சரிடமிருந்தே பரிசுச் சீட்டை வாங்கவிரும்பிய பலர், மேடையை முற்றுகையிட்டனர். எஞ்சியவர்கள் வெளியில் ஏஜெண்டுகளிடம் விலைக்கு

வாங்கினார்கள். அன்று தொடங்கிய அந்த விற்பனை, அரபுக் குதிரைபோல் பாய்ந்து சென்று, முதல் குலுக்கலுக்கே சுமார் 78 லட்சத்து 15 ஆயிரம் சீட்டுகள் வரை விற்பனை ஆகின. அரசு வெளியிட்ட 80 லட்சத்தில் விற்காமல் மிஞ்சியவை, சுமார் ஒரு லட்சத்து 85 ஆயிரம் டிக்கட்டுகள்தாம். துணைக் கருவூலங்களிலிருந்து (Sub-Treasuries) ஏஜெண்டுகளுக்கு பரிசுச் சீட்டுகள் விற்பனையை 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் தேதியுடன் நிறுத்திவிட்டதாலும், முதல் முறையான படியால் கடைசி நேரத்தில் பொதுமக்களின் ஆர்வம் எப்படி இருக்கும் என்ற அனுபவம் ஏஜெண்டுகளுக்கு இல்லாத காரணத்தினாலும், சென்னை உட்பட 6 மாவட்டங்கள் தவிர, மீதி பகுதிகளில், ஆங்காங்கே சிறிதளவு சீட்டுகள் துணைக்-கருவூலத்தில் விற்பனை ஆகாமல் நின்றுவிட்டன. ஆனால், விற்பனை நின்றபின் பரிசுச் சீட்டுகளுக்குப் பெருமளவில் கிராக்கி இருந்தது. தமிழகத்தில்மட்டுமின்றி, பெங்களூர், பம்பாய், கல்கத்தா, மற்றும் பிற மாநிலப் பகுதிகளிலிருந்தும் விற்பனையாளர்களுக்கும், அரசுக்கும், டிக்கட்டுகள் கோரி, பெருவாரியான கோரிக்கைகள் வந்த வண்ணமிருந்தன.

விற்பனையில் சென்னை நகரம் முன்னணியில் நின்றது. துணைக் கருவூலத்திற்கு கொடுக்கப்பட்ட 1,099,996 சீட்டுக்கள் அத்தனையும் விற்பனை ஆகிவிட்டன. அடுத்து விற்றது கோவை மாவட்டம். கொடுக்கப்பட்ட 1,025,000-ல் எஞ்சியது 20 தான். மதுரை, தஞ்சாவூர், திருச்சி ஆகியவையும சிறப்பாக விற்றிருந்தன.

### சிறந்த முறையில் பரிசு குலுக்கல்

நாட்கள் ஓடின. லட்சக்கணக்கான உள்ளங்கள் ஆவலோடு எதிர்பார்த்த அக்டோபர் 14-ம் தேதியும் வந்தது. சென்னை மவுண்ட் ரோட்டிலுள்ள ராஜாஜி மண்டபமும், பாலர் அரங்கமும் விழாக்கோலம் பூண்டு நின்றன. கண்ணைக்கவரும் காகிதத் தோரணங்கள், அவ்வப்போது குலுக்கல் முடிவுகளை பரிசு பெறும் எண்களை அறிவிக்கும் மாபெரும் பலகைகள் அரங்கிற்கு வெளியேயும் உள்ளேயும் காட்சியளித்தன. பலரது வருங்காலத்தை நிர்ணயிக்கப்போகும் எண்களை வெளியிடப் போகிறோம் என்ற பெருமிதத்தில் கம்பீரமாக பளப்பளப்பாக, மேடை மீது மின்னிக்கொண்டிருந்தன, ஆறு உருளைகள்.

காலை 7 மணி முதல் பொதுமக்கள் குலுக்கல் மண்டபங்களுக்கு வந்தவண்ணமிருந்தனர். காலை 9–30 மணியளவில், இந்த குலுக்கலை மேற்பார்வையிட நியமிக்கப்பட்டிருந்த குழுக்களின் மாண்புமிகு நடுவர்கள் வந்தார்கள். ராஜாஜி மண்டபத்தில், உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு பி. சந்திரா ரெட்டி, மின்சார வாரியத் தலைவர் திரு வி. பாலசுந்தரம், தொழிலதிபர் திரு எம். ஏ. சிதம்பரம், இந்தியன் பாங்கு நிர்வாகி திரு லட்சுமிநாராயணன், திரு ரெங்கா (அக்கவுண்டன்ட்–ஜெனரல்) ஆகியோரும், பாலர் அரங்கத்தில், முன்னாள் நீதிபதி திரு கணபதியா பிள்ளை, சர்வீஸ் கமிஷன் தலைவர் திரு சிவானந்தம், வருவாய்த் துறை வாரியம் உறுப்பினர் திரு கே. எஸ். சிவசுப்பிரமணியம், பஞ்சாப் நேஷனல் பாங்குத் தலைவர் திரு பம்பா, சென்னை நகர ஷெரிப் திரு எஸ். நாராயணசாமி ஆகியோரும், மாண்புமிகு நடுவர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

குறிப்பிட்டபடி 10 மணியளவில், மணியோசை ஒலிக்க, குலுக்கல் ஆரம்பமானது. நடுவர்கள் முன்னிலையில், இதற்காக நியமிக்கப்பட்ட அரசு அலுவலர்கள் உருளைகளை இயக்கினர். நடுவர் மணி அடித்ததும் உருளைகள் நிறுத்தப்பட்டன. அலுவலர் ஒருவர், லட்சம் ஸ்தானத்து உருளையைத் திறந்து, "டோக்"கனை—பிளாஸ்டிக் கூபக்குள் வைக்கப்பட்ட எண் பொறித்த தட்டை எடுத்தார். நடுவரிடம் தந்தார்! அமைதி! மண்டபம் எங்கும் ஒரே அமைதி! என்ன எண் என்று அறியும் ஆவலால் ஏற்பட்ட அமைதி!

ராஜாஜி மண்டபத்தில் நடுவர் திரு சந்திரா ரெட்டி, பையைப் பிரிக்கிறார். மற்ற நடுவர்களிடம் காட்டுகிறார். 'திரி' (மூன்று) என்று ஆங்கிலத்தில் ஒலிபெருக்கியில் அறிவிக்கிறார். அதைத் தொடர்ந்து அறிவிப்பாளர் தமிழில் 'மூன்று' அறிவிக்கிறார். உள்ளே உள்ள கரும்பலகையில் அந்த எண் அறிவிக்கப்படுகிறது. மண்டபத்தில் ஒரே சலசலப்பு! தொடர்ந்து ஒவ்வொரு உருளையிலிருந்து ஒவ்வொரு 'டோக்கன' எடுக்கப்பட்டு பரிசு பெறும் சீட்டின் எண் வ. 383152 என்று அறிவிக்கப்பட்டதும் கைதட்டல் ஒலி மண்டபத்தைக் கிடுகிடுக்க வைக்கிறது! மண்டபம் கலகலக்கிறது!

பரிசு பெற்ற எண்ணை பொதுமக்கள் பார்வைக்காக, வெளியிருக்கும் பலகையில் உடனடியாக பொறிக்கப்பட்டது.

தொடர்ந்து இரண்டாம், மூன்றும், நான்காம் பரிசுகளுக்காக குலுக்கள் நடைபெற்றன. அலுவலர்கள், தம்தம் பணியை ஆர்வமுடன் செய்துகொண்டிருந்தனர். பத்திரிகை நிருபர்கள், நாளிதழ்களுக்கு, ஏவலர் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும், செய்திகளைக் கொடுத்த வண்ணமிருந்தனர். வானொலி நிருபர், ராஜாஜி மண்டபத்திற்கும், பாலர் அரங்கத்திற்கும் சிட்டுக்குருவிபோல் பறந்து, செய்தியைத் திரட்டி, வானொலி நிலையத்திற்கு உடனடியாக கொடுத்துவந்தார். விசேஷ தகவல்கள் தரும் "176" என்ற தொலைபேசிக்கு, அப்போதைக்கு முடிவுகள் தரப்பட்டன. நேரில் வர இயலாதவர்கள், தொலைபேசி மூலம், பரிசு முடிவுகளை அறிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

இந்தத் திருவிழாக் காட்சியை, தமிழக அரசின் செய்திப் படப்பிடிப்பாளரும் புகைப்படக்காரர்களும் படமாக்கி, மண்டபத்தை ஒளி மயமாக்கினர்.

பரிசு பெற்ற சீட்டின் எண்களை தமிழில் உடனுக்குடன் அறிவிக்க சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மக்கள் தொடர்பு அதிகாரி திரு எஸ். வேங்கடசாமி

[45-ம் பக்கம் பார்க்கவும்]





# ஒருமைப்பாட்டின் அடிப்படை

(மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன்)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலக அரங்கில் தலையாய இடம் பெற்றுத் திகழ்ந்தது தமிழ்நாடு. மேற்கே உரோம் முதலாம் நாட்டவரும், கிழக்கே சீனம் முதலாம் நாட்டவரும் வளங்கொழிக்கும் தமிழ்நாட்டின் அகில், ஆரம், முத்து முதலாம் விளைபொருள்கள், உறையூர்ப் பூந்துகில் போலும் செய்பொருள்களின் விலையாகத் தங்கள் நாட்டுப் பொற்காசுகளைக் கப்பல் கப்பலாக கொண்டு வந்து கொட்டிச் சென்றனர். அக்காட்சியைப் "பொன்னோடு வந்து கரியோடு பெயரும் யவனர் இயற்றிய வினைமாண் நன்கலம்" எனப் படம் பிடித்துக் காட்டிப் பாராட்டுகிறது பழந்தமிழ்ப்பா ஒன்று.

### போர் வெறியின் விளைவு

தமிழ் நாட்டின் அப்பீடும் பெருமையும் இன்று இல்லை. ...ருகத் தமிழகம் நனிமிகத் தாழ்ந்துவிட்டது. தமிழ் ...டு, வயல் வளத்திலும் வாணிக வளத்திலும் சிறந்து, ...லக அரங்கின் அவ்வுயர்ந்த இடத்தில் அமரப் பெருந் ...ணை புரிந்தவர், தமிழ் நாட்டை அன்று ஆண்டிருந்த ...ர, சோழ, பாண்டியராம் முடியுடைய மூவேந்தர்களே ...ன்றாலும், அத்தமிழ் நாடு, பிற்காலத்தே நிலைகுலைந்து ...பானதற்கும் அவர்களே முழு முதற்காரணமாவர். அம் ...வேந்தர்கள், மொழியை ...ன்னிறுத்தி, ஒற்றுமை ...ள்ளம் கொண்டு, உலகாள் ...தற்கு மாருகச் சேரர், ...சாழர், பாண்டியர் என்ற ...லப் பெருமையே குறிக் ...காளாய் நின்று, ஒற்றுமை ...யக் குலைத்து வேற்றுமையை ...ளர்த்து வந்தனர். ...வேந்தர் குலத்தில் பிறந்த ...வ்வொருவரும் பிறரை ...டக்கி, ஆளவேண்டும் என்ற ...ண்ணத்தோடு பிறந்தனர். ...ரு குலத்தில் ஒரு காலத்தில் ஆற்றல் மிக்க அரசன் ஒருவன் பிறந்து விட்டால், அவன் பிற இரு குலத்து அரசர்களையும் வென்று அடக்கி, அரசர்க்கு அரசனாய் வாழ, ஆசை கொள்வதும், அவன் பெருமை கண்டு மனம் பொறுக்கமாட்டாத பிற இரு குலத்து அரசர்களும் ஒன்றுபட்டுப் பிற குறுநிலத் தலைவர்களின் துணையையும் பெற்று, அவனை அழிக்க முனைவதும், அக்கால அரசியலின் அழிக்க முடியாத வழக்கங்களாகி விட்டன! அம்மட்டோ? ஒரு குலத்தவர் பிற குலத்தவரோடு போரிட்ட நிலையோடு நின்றுவிடவில்லை. ஒரு குலத்தில் பிறந்தவர்களுக்குள்ளேயே ஒருவர், ஒருவரோடு போரிட்டுக் கொள்ளவும், மகன் தன்னைப் பெற்ற தந்தைமீது போருக்கு எழவும், தந்தை தான் பெற்ற மகனையே போரிட்டு அழிக்கவும், அக்காலத் தமிழ் அரசர்கள்—போர் வெறிப் பிடித்துத் திரிந்தனர். அப்போர் வெறியின் விளைவே, தமிழகத்தின் சீர்குலைவு.

அச்சீர்குலைவைத் தடுத்து நிறுத்தும் முயற்சி அன்றே மேற்கொள்ளப்பட்டது; நாடழிவு தடுக்கப்படவேண்டுமாயின், போர் தடுக்கப்படவேண்டும்; போர் தடுக்கப்படவேண்டுமாயின், வேந்தர்களிடையே நிலவும் அவ்வேறுபாட்டுணர்வு அகன்று, ஒற்றுமை உணர்வு உயிர்ப் பெறல் வேண்டும் என்பதை உணர்ந்த அக்கால ஆன்றோர் பலரும், அவ்வேந்தர்களுக்கு ஒருமைப் பாட்டுணர்வை, வாய்க்கும் போதெல்லாம் எடுத்துக் கூறிவந்துள்ளனர்.

**["ஒருமைப்பாடு" "ஒருமைப்பாடு" என்ற ஒலி, இன்று நாடெங்கும் எதிரொலிக்கிறது. 8—10—68-ல் "ஒருமைப்பாட்டு நாளை" நாடு கொண்டாடியது. இப்படிப்பட்ட முழக்கங்கள், கொண்டாட்டங்கள் மட்டும் ஒருமைப்பாட்டை நாட்டில் உண்டாக்கிவிட முடியுமா? இதனால் மட்டும், நம்முடைய இலட்சியம் முழுக்க முழுக்க நிறைவேறிவிடுமா? இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும் மாண்புமிகு சட்ட மன்றப் பேரவையின் துணைத் தலைவர் உயர்திரு புலவர் கோவிந்தன் அவர்கள், "பொருளாதாரத் துறையில் ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்பட்டால்தான், உண்மையான ஒருமைப்பாட்டை நாம் அடைய முடியும்" என்று இலக்கியச் சான்றோடு விளக்குகிறார். வானொலிப் பேச்சில். ஒருமைப்பாட்டின் அடிப்படை பொருளாதார நிலை தான் என்று அவர் கூறும் கருத்து, அனைவரின் சிந்தனைக்கும் அரியதொருவிருந்தாகும்.**

**—ஆசிரியர்.]**

### காரிக்கண்ணனார் ஒருமைப்பாட்டுக்கு வகுத்த வழி

தமிழகம் தான் பெற்றிருந்த பெருநிலை இழந்து இன்று தாழ்ந்து கிடப்பதற்குக் காரணம் தமிழ் வேந்தர்கள் தம்முள் ஒற்றுமையின்றி ஒருவரோடொருவர், பகை கொண்டு, ஒருவரை ஒருவர் கொன்றும் ஒருவர் நாட்டை ஒருவர் அழித்தும் வாழ்ந்த அறிவிழந்த வாழ்க்கையினாலேயே ஆம் என்பதை உணர்ந்த காரிக்கண்ணனார் என்ற புலவர், தம் காலத்தில் சோழ நாடாண்டிருந்த குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவனும் பாண்டிய நாடாண்டிருந்த வெள்ளியம் பலத்துத்துஞ்சிய பெருவழுதியும் ஒருவரோடொருவர் பகை கொண்டு போரிட்விரும்பாது, நட்பு பூண்டு கலந்து வாழக் கண்டு களிமகிழ்வெய்தினார். அவர்கள் எப்போதும அவ்வாறே ஒருமைப் பாடுடையராய் வாழின், அவரையோ, அவர் நாட்டையோ, அழிப்பார் எவரும் இரார்; மாறாக, அவர்கள் விருமபினால் விரும்பும் நாடுகளிலெல்லாம் அவர்கள் வெற்றிக் கொடியே பறக்கும்.

ஆகவே, அவ்வொருமைப்பாடு நெடிது வாழ விரும பினார். அதே நிலையில், அவர்களிடையே நிலவும், அவ்வொருமைப்பாடு பொறுத சிலர், அவ்வேந்தர்களின் அவ்வொருமைப் பாட்டுணர்வை அழித்து மீளவும் பகையுணர்வை மூட்டி விடுவரோ என்ற அச்சமும் உடன் எழவே, அவ்வேந்தர்களை அணுகி, " வேந்தர்காள்! உங்கள் நண்பர்களைப் போலவும், உங்களுக்கு நல்லனவே செய்வார் போலவும், உங்கள் முன்னோர் நடந்து காட்டிய நல்வழியைக் காட்டுவார் போலவும், உம்மோடு கலந்து உரையாடி, உங்களிடையே நிலவும் இந்நட்புணர்வை அழித்து, உங்களிடையே மீளவும் பகைவரப் பண்ணி விடுவரோ நும் பகைவர் என்று அஞ்சுகிறது. என் உள்ளம்! அன்னார்—உரைகளை உம் செவியுட் புகவிடாது இன்றேபோல இணைந்து வாழ்வீர்களாக " என்று வாழ்த்தி ஒருமைப் பாட்டிற்கு அன்றே வழி வகுத்துள்ளார்—

" இன்னீ ராகலின்
இனியவும் உளவோ?
இன்னுங் கேண்மினும்
இசை வாழியவே
ஒருவீர் ஒருவீர்க்கு
ஆற்றுதி; திருவி நும்
உடனிலை திரியீ ராயின், இமிழ்திரைப்
பௌவம் உடுத்தஇப் படுங்கெழு மாநிலம்
கையகப் படுவது பொய்யா காதே;
அதனால், நல்ல போலவும், நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காதல் நெஞ்சின்நும் இடைபுகற்கு அலமரும்
ஏதில் மாக்கள் பொதுமொழிகொள்ளாது
இன்றே போல்க நும் "புணர்ச்சி"

ஒருவர்க்கு ஒருவர் துணையாக இன்றே போல் என்றும் ஒன்றி வாழுங்கள் என்று அன்று கூறிய அறவுரை, இன்றும் இன்றியமையாது தேவைப்படுவதாக உளது; வடவேங்கடம் தென்குமரி ஆகிய அவ்வெல்லைக்குட்பட்ட தமிழகத்தில் வாழ்ந்திருந்த தமிழரசர்கள் எவ்வாறு ஒற்றுமை உணர்வு இழந்து வேற்றுமையுணர்வில் திளைத்துத் தமிழக வாழ்வில் தாழ் நிலையை உண்டாக்கி விட்டார்களோ, அதைப் போலவே, இமயம் முதல் குமரி வரையான, இந்தியப் பெருநாட்டில் வாழ்ந்திருந்த அரசர்களும் மொழியாலும் இனத்தாலும், சாதியாலும் சமயத்தாலும் வேறுபட்டு காலமெல்லாம் போர் செய்து வந்த காரணத்தால் நாடு, பல அந்நியப் படையெடுப்புகளுக்கு உள்ளாகிப் பல நூறு ஆண்டுகள் அடிமை நாடாகி அழிவுற்றது.

### இந்திய வரலாற்றில் இவர் ஒருவரே

" காலத்தின் தூசி படிந்து, வறண்டு, தரிசு நிலமாக இருந்த ஒரு நிலத்தில் புத்துயிர் ஊட்டும் புதுநீரை காந்தியடிகள் கொண்டுவந்தார். பல நூற்றாண்டு உறக்கத்திலிருந்து அவர் இந்தியாவைத் தட்டி எழுப்பினார். மக்கள் வாழ்விலிருந்து வாழத் துவங்கிய அவர் அதிலிருந்து பிரிக்கமுடியாமல் ஒன்றிவிட்டார். மிகத் தாழ்ந்தவர்களது சிந்தனை முறையை அவர் அறிந்திருந்த விதம், மக்கள் கூட்டத்தின் ஒன்றுபட்ட முயற்சியைத் திரட்டும் வல்லமை, நோக்கத்தில் ஈடுபாடு கொண்ட கடமைப் பற்று ஒருபோதும் கலையாத அவரது மனப்பக்குவம் ஆகியவை எவரையும் கவர்ந்துவிடும். கடந்த காலத்தின் விளைவுகளால் அழுத்தப்பட்ட திரள் திரளான மக்களின் நீண்ட போராட்டத்திற்கு வழி காட்டி, அதை உருவாக்குவதற்காக நாகரிக மனிதனின் வரலாற்றில், இதைவிட அதிகமாய் எவரும் சாதனை புரிந்ததில்லை என்றே சொல்ல வேண்டும். வேறு எவரையும்விட அதிக உண்மையான விதத்தில் அவர் இந்தியாவின் பிரதிநிதியாக இருந்தார். வேறு எவரையும்விட அதிகமான தீர்க்கதரிசனம் தெளிவான பார்வை அவருக்கு இருந்தது. நம் நாட்டின் ஆத்மாவினுடைய திருவுருவமாக அவர் திகழ்ந்தார். இந்திய வரலாற்றில் இப்படி எவரும் இருந்ததில்லை. மாக்ஸ்மில்லர் ஒரு தடவை கூறியதைப்போல, "இந்தியாவில் மாபெரும் கடந்த காலத்துக்கும், ஒரு மாபெரும் வருங்காலத்துக்கும் இடையே ஒருவர் சிக்கிக்கொண்டிருந்தால். நம் காலத்தில் அந்த இடைவெளியை நிரப்பும் தகுதி, மகாத்மா காந்தி ஒருவருக்குத் தான் உண்டு."

—குடியரசுத் துணைத் தலைவர் திரு வி. வி. கி



### வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அந்நியர் ஆட்சியால் அவல நிலைக்குள்ளாகி கிடந்த நாட்டிற்கு அண்ணல் காந்தியார் அறப்போர் ஆற்றி உரிமை பெற்றுத் தந்து விட்டுப் பெற்ற உரிமையைப் பேணிக் காக்கும் பொறுப்பைப் பின் வந்தார்க்கு ஒப்படைத்து மறைந்து விட்டார். இப்போது மன்னர்கள் இல்லை; ஆட்சிப் பீடத்தில் மக்கள் தலைவர்கள் உள்ளனர். அம்மக்கள் ஒரு மொழி பேசுவோர் அல்லவர், ஓர் இனத்தைச் சேர்ந்தவர் அல்லர்; ஒரு சமயத்தவர் அல்லர்; மொழியாலும், இனத்தாலும், சாதியாலும் சமயத்தாலும், உணவு, உடை உறையுள் ஆகிய பழக்க வழக்கங்களாலும் ஒருவர்க்கு ஒருவர் முற்றிலும் வேறுபட்டவராவர்.

இவ்வேறுபாடுகள் உள்ளவரை, அவர்களிடையே, ஒற்றுமை—ஒருமைப்பாடு—எங்கே தோன்றப் போகிறது என்றே எவரும் எண்ணி மலைப்பர்.

ஆனால் அண்ணல் காந்தியார் அவ்வாறு எண்ணி மலைத்தாரல்லர்.

ஒரே இனத் தொடர்புடையவரும், ஒரே மொழி பேசுவோரும், ஒரே கடவுளை வணங்குவோரும் ஆகிய அம்மக்களிடையே மட்டும் ஒருமைப்பாட்டினைக் காணலாம்; இனத்தால் வேறுபட்டவரும், மொழியில் வேறுபட்டவரும் வணங்கும் கடவுள் நெறியால் வேறுபட்டவரும் ஆகிய அம்மக்களிடையே ஒருமைப் பாட்டினைக் காண்பது இயலாது என்ற தத்துவத்தைத் தகர்த்து எறிந்தார்.

ஆரியர், திராவிடர் என்றும், ஆந்திரர் தமிழர் என்றும், இந்து முஸ்லீம் என்றும் வேறுபட்டிருந்த நம்மிடையேதான் ஒருமைப் பாட்டினைக் கண்டார் காந்தியார்.

### வேற்றுமைக்கு வித்தாக அமைந்தது எது?

ஒரே இனத்தவர் பகைக்கின்றனர். வேறுபட்ட இனத்தவர் கூடி வாழ்கின்றனர். ஒரே மொழி பேசுவோரில் வேறுபடுகின்றனர். பல மொழி பேசுவோர் ஒன்றுபடுகின்றனர், ஒரே கடவுளை வணங்குவோர் பகைக்கின்றனர்—பல சமயத்தவர் கலந்து வாழ்கின்றனர்.

மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்க, இனம், மொழி, மதம் இவற்றின் ஒற்றுமைமட்டும் போதாது. உண்மையான ஒற்றுமையை உண்டாக்க, இவற்றின் ஒற்றுமையால் மட்டும் ஆகாது; உண்மையான ஒற்றுமையை உண்டாக்குவனவும் அவை அல்ல, அவை [illegible] உண்டாக்குவது வேறு [illegible] எது ?

அது போலவே, இன வேற்றுமை, மொழி வேற்றுமை மத வேற்றுமை இருப்பதினாலேயே அவற்றை மேற்கொண்ட மக்களிடையே வேற்றுமை வளர்ந்து விடும் என்பதும் உண்மையாகாது. அவ்வேற்றுமை இருக்கும் மக்கள் இடையேயும் ஒற்றுமையை உண்டாக்கும் ஆற்றல் ஒன்றிற்கு உண்டு. அது எது?

அண்ணனும் தம்பியும், ஒரே தாயிடத்தில் பிறக்கின்றனர்; ஒரே மொழி பேசுகின்றனர்; ஒரே கடவுளை வணங்குகின்றனர். இன ஒற்றுமை, மொழி ஒற்றுமை, மத வொற்றுமை, அவ்வளவும் அவர்களிடத்தில் உள என்றாலும், அண்ணன் தம்பிகள் சண்டை அன்றாட நிகழ்ச்சியாகி விடக் காண்கிறோம். இன ஒற்றுமை அவர்களிடையே ஒருமைப் பாட்டினை உண்டாக்கவில்லை. அவர்கள் பேசும் ஒரே மொழி, ஒற்றுமை குலைவதைத் தடுக்கவில்லை. அவர்கள் வணங்கும் ஒரே கடவுள், அவர்கள் பகைத்துக் கொள்வதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்; தடுக்க முடியவில்லை அவராலும்.

இந்தியாவில் எத்தனையோ இனம்; எத்தனையோ மொழிகள்; எண்ணித் தொலையாத மதங்கள் இருந்தும் விடுதலைப் போராட்டக் காலத்தில் அவ்வளவு பேரும் ஒன்றுபட்டிருந்தனர்; இன வேற்றுமையோ, மொழி வேற்றுமையோ, மத வேற்றுமையோ, அவர்கள் ஒன்றுபட்டதைத் தடுக்கவில்லை.

அண்ணன் தம்பிகளுக்கிடையே வேற்றுமை ஏன் உண்டாகிறது? பகை ஏன் வளர்கிறது? ஒருவரை யொருவர் ஏமாற்றி விட்டமை; ஒருவன் உழைப்பது; ஒருவன் ஊர்

### இருபதாம் நூற்றாண்டுக்கு ஓர் அறைகூவல்

" இருபதாம் நூற்றாண்டின் போக்குக்கு காந்தி ஒரு சவாலாக இருந்தார் என்பதுதான், அவரது வெற்றியின் இரகசியம் என்று நான் கருதுகிறேன். இது வன்முறை யுகம் என்று தெரியாமலா சொன்னார்கள்? பொருள் ஈட்டும்பொருட்டு தனிப்பட்ட நிர்ப்பந்தங்களையும், பொது நிர்ப்பந்தங்களையும் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, எல்லா உத்திகளையும் கையாளும் யுகம் இது.

மகாத்மா காந்தி உண்மையான முறையில் இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டார் என்று உலகம் உணர்ந்ததாகவே நான் கருதுகிறேன். வன்முறையை அஹிம்சையால் எதிர்ப்பது என்ற அவரது தத்துவம், ஏதோ மனக்கோட்டை கட்டுபவரின் கற்பனையாக இருக்கவில்லை. அவர் விஷயத்தின் மையத்திற்கே சென்றார். தனி மனிதனின் நடத்தைக்கும் ஆசைக்கும் அழைப்பு விடுத்தார். சுய கட்டுப்பாட்டைப் பின்பற்றினார். இது இல்லாமல், இருந்தால், எவ்வளவு நவீனமாக இருப்பினும் நாகரிகம் இறுதியில் தகர்ந்துவிடும்."

—மவுண்ட் பேட்டன் பிரபு.

சுற்றி வருவது; ஒருவன் பொருள் ஈட்டுவது; ஒருவன் அதை அழிப்பது என்ற இதுதானே காரணம். அண்ணன் தம்பிகளுக்கிடையே பொருளில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டுவிட்டது. ஒற்றுமை இல்லை. இது தவிர்த்து, வேறு என்ன காரணம்? இருவருக்கிடையே பொருள் அளவில் ஒற்றுமை இல்லை; அவ்வொற்றுமையின்மை, அவர்களிடையே ஒற்றுமைக்கான காரணங்கள் எவ்வளவோ இருப்பினும், அவர்களை வேறுபடுத்திவிட்டது. அவ்வளவு ஆற்றல் படைத்தது அந்த பொருள் வேற்றுமை.

### அவருக்கேற்ற வருங்காலம்

''மனித உணர்வு கொடுமைக்குள்ளாகி, தாழ்ந்த நிலைக்குச் செல்ல நேரும்போது, மக்கள் தங்கள் கௌரவத்தை நிலைநாட்டிக்கொள்வதற்காக மகாத்மா காந்திஜியின் அறிவுரையை நாடுவார்கள். மனித குலத்திற்காக அவர் வழங்கிய அஹிம்சை எதிர்ப்பு முறை எனும் ஆயுதத்தை இன்று பல நாடுகளிலும், பல இடங்களிலும் பயன்படுத்துகிறார்கள். காந்திஜியை புத்தருக்குப் பிறகு இந்தியாவின் மகாபுருஷராக உலகம் கருதுவது சரியானதே. புத்தரைப் போலவே அவரும், மேலும் உயர்ந்த நாகரிக நிலையை அடைவதற்கான முன்னேற்றத்தில் மனிதகுலத்திற்குத் தொடர்ந்து ஊக்கம் அளித்தார். இந்தியாவில் அவரது சிறப்புக்கு ஏற்ற ஒரு வருங்காலத்தை அமைக்க வேண்டியது நமது கடமையாகும்.''

—இந்தியாவின் தலைமையமைச்சர் இந்திரா காந்தி

### மக்களிடையே ஒற்றுமையை உருவாக்குவது....!

ஆரியர்—திராவிடர் என்றும் ஆந்திரர்—தமிழர் என்றும் இந்து—முஸ்லீம் எனறும் வேறுபட்டிருந்தோம் நாம். இருந்தும் ஒன்று பட்டோம், அந்நியன் ஆட்சிக் காலத்தில். ஆரியர்—திராவிடர் இன வேற்றுமையோ, ஆந்திரர்—தமிழர் என்ற மொழிவேற்றுமையோ, இந்து—முஸ்லீம் என்ற மத வேற்றுமையோ, நாம் ஒன்றுபட்டதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. வேறுபாடுகளையெல்லாம் மறந்து நம்மை ஒன்றுபடச் செய்தது எது?

அந்நியன் ஆளுகிறான். நாம் அடிமை, இனத்தால், மொழியால், மதத்தால் நாம் வேறு வேறு என்றாலும் பொருள் நிலையில்—அரசியலால் அடிமைப் பட்டுள்ளோம். பொருள் நிலையால் வறுமைப் பட்டிருக்கிறோம் என்பதில் நம்மிடையே ஒருமைப்பாடு இருந்தது. அந்த ஒருமைப்பாடு, நம்மிடையே இருந்த வேறுபாடுகளையெல்லாம், மறக்கப்பண்ணி ஒன்றுபடச் செய்தது. பொருள், ஒருமைப்பாட்டிற்குக் காரணமாக இருந்தது.

### ஒருமைப்பாட்டின் அடிப்படை

ஆகவே, மக்களிடையே ஒற்றுமைகளை உருவாக்குவது, உண்மையில், இனமோ, மொழியோ, மதமோ அன்று. மாறாகப் பொருள், பொருள், பொருள் ஒன்றே.

பொருளால் ஒரே நிலையில் உள்ளவர்கள் ஒன்றுபடுவர். அப்பொருள் நிலையால் ஏற்றத் தாழ்வு உள்ள மக்கள் வேறுபடுவர். இதுதான் உண்மை.

இந்தியா உரிமை பெற்றுவிட்டது. ஆனால் பெற்றது அரசியல் உரிமை ஒன்றே. வெறும் அரசியல் உரிமையால் மட்டும் ஒரு நாட்டிற்கு வாழ்வு வந்துவிடாது. அரசியல் உரிமையை அடுத்துப் பொருளாதார உரிமையையும் பெற்றால்தான், நாட்டில் வளம் பெருகும். அந்த உரிமையை இந்தியா இன்னமும் அடையவில்லை. அதை அடைய, நாட்டு மக்கள் ஆற்ற வேண்டிய பணிகள் எவ்வளவோ உள்ளன.

அவற்றை ஆற்றும் நிலையில் அவர்களிடையே, மொழி பற்றிய வேறுபாடோ, இனம் பற்றிய வேறுபாடோ, மதம் பற்றிய வேறுபாடோ ஒரு சிறிதும் தலை தூக்க விடக் கூடாது; அது சிறிது தலை தூக்கினாலும், மக்கள் அவ் வேறுபாட்டுணர்ச்சிக்கு அடிமையாகி, ஆக்கப் பணிகளை அறவே மறந்துவிடுவர்.

### உலக ஒருமைப்பாடு உருவாகிட !

ஆகவே, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்போர் எந்த ஒரு மொழிக்கோ, எந்த ஒரு இனத்திற்கோ, எந்த ஒரு மதத்திற்கோ, தனி ஆதிக்கம் உண்டாக்கக்கூடிய சூழ்நிலையை, எக்காரணத்தை முன்னிட்டும் உருவாக்காது, அனைத்து மொழிக்கும் சம வாய்ப்பும், எல்லா இனத்தவர்க்கும் சமநிலையும், எல்லா மதத்திற்கும் சம உரிமையும் வழங்குதல் வேண்டும் என்பதில் விழிப்பாயிருந்து முழுமிய ஆட்சி மேற்கொள்வாராயின் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற உலக ஒருமைப்பாட்டு நிலையினை எளிதில் எய்து விடலாம். வாழ்க அவ்வுலக ஒருமைப்பாடு!

வளர்க அவ்வொருமைப்பாடு!





# காலத்தால் செய்த உதவி

[திரு. வி. ஜி. நாயர்]

தமிழ் நாட்டில் வாழும் சமண சமயத்தைச் சேர்ந்த மக்கள், தென்னக மக்களின் பொருளாதாரம், சமூக வாழ்க்கையில் ஓர் அங்கமாகத் திகழ்கிறார்கள். பண்டு தொட்டு தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் சமணர்கள் 'காலத்தால் செய்த உதவி' எவ்வளவு கனிவானது என்பதை, சென்னையில் சமண சமயத்தவர் திருநாளில் கலந்து கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார். அந்த நிகழ்ச்சியை படம் பிடித்துக் காட்டும் சுருக்கமான கட்டுரை இது.

—ஆசிரியர்.

**1968**-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ம் நாள். சென்னையிலுள்ள சமணர் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் வாழ்விலே மறக்க முடியாத நாள்.

அன்றுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி.என். அண்ணாதுரை அவர்கள் சமணர்களின் ஆலயத்திற்கு வருகை தந்து, ஆச்சார்யாக்கள், இதர சன்னியாசிகள், நோன்பிருந்து வரும் சன்னியாசிகள் ஆகியோருக்கு தமது மரியாதைகளைத் தெரிவித்து, அவர்களை உள்ளம் பூரிக்கச் செய்த நாள்.

அன்றுதான், நோன்பிருந்து வரும் சமண சன்னியாசிகளும் தமது நோன்பை முடித்துக்கொண்ட நன்னாள். சமண ஆலயத்திலே, ஸ்வெதம்பரா சமணர்களால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஓர் உளமார்ந்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

அங்கிருந்து இறை வணக்கம் செய்யும் பெரிய அறை ஒன்றிற்கு முதலமைச்சர் அவர்கள் அழைத்துச்செல்லப் பட்டார்.

அங்கு குருமஹராஜ், சன்னியாசிகள் மற்றும் பொது மக்கள் அடங்கிய கூட்டம் ஒன்று, தங்களது பெருமை வாய்ந்த விருந்தினரான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்று பேராவலுடன் வரவேற்கக் காத்திருந்தது.

நீண்ட நாட்களாக உண்ணா நோன்பிருக்கும் ஐந்து சன்னியாசிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் உளங்கனிந்த பாராட்டை தெரிவித்துக்கொண்டார். தமது மத சங்கற்பங்களை நிறைவேற்றுவதற்கான விரதம் மேற்கொண்டுள்ள அவர்களின் எல்லையில்லாப் பொறுமை, இறை வணக்கம், அறிவாற்றல், சுய தியாக உணர்ச்சிகள் மற்றும் மக்களின நல்வாழ்விற்கென அவர்கள் மேற்கொண்டுள்ள பணி ஆகியவை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டிப் பேசினார்.

### சமணர்களின் சிறப்பான பணி

சமண சன்னியாசிகள், ஆச்சார்யாககள் பற்றி அவர் குறிப்பிடுகையில், சமணர்களின் பழம் பெரும் கலாச்சாரம், தமிழ் மொழிக்கு, அதன் இலக்கணம், இலக்கியம், நன்னெறி நூல்கள், அரும்பதவுரைகள் ஆகியவற்றிற்கு அவர்கள் ஆற்றியுள்ள பெரும் தொண்டைப் பற்றி எடுத்துரைத்தார்.

சமணப் பெரியார்கள், மதத்தலைவர்கள் ஆகியோர் அரும்பணியாற்றி, அவர்கள் வகுத்துச்சென்ற நல்வழிப் பாதைகள், எல்லோரும் ஏற்று பின்பற்றத் தக்கதென்றும் அவையனைத்தும் குறுகிய கொள்கைகளுக்கு அப்பாலிருப்பதால், தென்னக மக்களின் நல்வாழ்விற்கு அவை பெரிதும் அவசியமாகிறது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வரவேற்று, திரு ஹிம்மதமல் மார்டியா அவர்கள் ஆற்றிய ஒரு சிறிய

சொற்பொழிவின்மூலம் சமணர்களின் நோன்புகள், திரு விழாக்களின் புனிதத்தன்மையைப் பற்றி விளக்கினர். அவர் மேலும் கூறியதாவது: “விழாக்காலங்களில் கூட்டப் பெறும் கூட்டங்களிலெல்லாம், வணக்கத் திற்குரிய ஆச்சாரியார்கள், சன்னியாசிகள் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். கடந்த ஆண்டில் தாம் செய்ய வேண்டியதைச் செய்யாது, செய்யக்கூடாததை செய்தமைக்காக குற்றத்தை ஒப்புக்கொண்டு, அதற்காக இரங்கி வருந்தும் நாட்களாகவும், பிழை பொறுத்து, மன்னிப்பு வழங்கும் புனித நாட்களாகவும் அவை அமைந்தன. ஒருவருக்கொருவர் நன்கு அறிந்து கொண்டு சமணர்கள் இடையே மட்டுமின்றி, பிறருடனும் அன் பாக, சகோதர பாசத்துடன் கலந்துறவாடும் நாட்களாக வும் அவை அமையும்” என்றார்.

### தொன்மையான கலாச்சாரம்

ஆசார்யாவிக்ராம சூரிஜி மஹராஜ் மாண்புமிகு முதலமைச்சருக்கு தமது ஆசிகளைவழங்கி, அவரைவாழ்த்தினர். முனி ஸ்ரீராஜ்யாஸ்ஜி, சுவாமி ரிஸாபாதாஸ்ஜி ஆகிய இருவரும் தூய்மை, சமாதானம், மனத்திடம் போன்றவற்றை விளக்கும் வகையில் அமைந்துள்ள சமண விரதம், விழாக்களின் தன்மைகளைப் பற்றி எடுத்தியம்பினார்கள்.

இவ்விழாவில் பங்குபெற்று, கௌரவித்தமைக்காக திரு லால்சந்த் தாதா அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

[சென்னை மாநகரில் வசிக்கும் சமணர் சமுதாயம் தென்னிந்திய மக்களின் பொருளாதார, சமூக வாழ்க்கையில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. வணிகத் துறையில் பெரும்பான்மையாக ஈடுபட்டுள்ள சமணர்கள், தொடக்கக் காலத்தில் இராஜஸ்தான், குஜராத் மாநிலங்களிலிருந்து தமிழகத்தில் குடியேறியவர்கள். சட்ட வரம்புகளுக்குட்பட்டு, அமைதியான வாழ்க்கையை நாடி, மதத்தில் பெரும் பற்றுடன் வாழ்பவர்கள் சமணர்கள். அவர்களின் கலாச்சாரம் மிகப் பழமையானது.

அனேக சமண நிறுவனங்களை அவர்கள் தமிழகத்தில் நிறுவி, மதம், கல்வி, சுகாதாரம், கலாச்சாரத் துறைகளில் அரும்பணியாற்றி வருகின்றனர். சமணர்கள் இன்றளவும் தமிழக மக்களுடன் ஒன்றிணைந்து வாழ்ந்து, வாழ்ந்து வரும் சமுதாயத்தினர் ஆவர். தமிழர்களின் பல்வேறுபட்ட வாழ்விலும் பங்கு பெற்று, அவர்களின் வளர்ச்சியுடன் ஒன்றிய வாழ்வு நடத்துகின்றனர்.]


விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானதல்ல.

## கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

- கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது,
- உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற

• கதர் • கதர்ப்பட்டு • சோப் • தேன் • செக்கெண்ணெய் • தோல் பொருள்கள் • பனைவெல்லம் • சர்க்கரை • மண்பாண்டம் • வார்ப்படங்கள் • பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் • பனைப் பொருள்கள்—இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
சென்னை “குறளகத்”தில் இயங்கும்
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை,
2, எர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4




உணவு உற்பத்தித் துறையில் இன்று தமிழகம் ஏறுநடை போடுகிறது. தமிழக அரசின் உணவு உற்பத்தித் திட்டமே, இந்தப் பெருமித நிலைக்குக் காரணம்.

உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான எல்லா வேலைத் திட்டங்களும் உடனுக்குடன், செம்மையான முறையில் நிறைவேற்றப்படுகின்றன. அவற்றில் ஒன்று, “விசையேற்றங்களை நிறுவுதல்.” (Installation of pumpsets).

பாசன வசதிகளைப் பெருக்க பாடுபடும் நமது அரசு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, பாசன வசதிகளை அளிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. தமிழகத்தில் இன்றுவரை கிட்டத்தட்ட மூன்றரை இலட்சம் விசை யேற்றங்களுக்கு (Pumpsets) மின் தொடர்பு கொடுக்கப்பட்டுள்ளது. இது அனைவருமே பெருமிதம் கொள்ளக்கூடிய சாதனையாகும்.

விசையேற்றங்கள், பாசன வசதியைப் பெருக்குகின்றன. இன்றைய விவசாயிக்கு உறுதுணை அவை. அவற்றை (Pumpsets) எப்படி நிர்மாணிப்பது, எப்படிப் பொருத்துவது, எப்படிக் கண்காணிப்பது என்பன பற்றியெல்லாம் மிக அழகாகவும், மிகத் தெளிவாகவும், விஞ்ஞான ரீதியாகவும் அலசி ஆராய்ந்து, வடித்துக் கொடுத்துள்ளார் இக்கட்டுரை ஆசிரியர். விவசாயிகளுக்கு நடைமுறையில் மிகமிக உபயோகமான கட்டுரை இது. தொழில் நுணுக்க விஷயங்களை, தெளிந்த தமிழில், அனைவருக்கும் புரியும்படி எழுதியுள்ளார். அனைவரும்—குறிப்பாக, விவசாயப் பெருமக்கள் படித்துப் பயன் பெறுவர் என நம்புகிறோம்.

'கட்டுரை ஆசிரியர், திரு ஜி. ஆர். தாமோதரன், பட்டங்கள் பல பெற்ற பெரியார். சிறந்த தொழில் மேதை. கோயமுத்தூர் பி.எஸ்.ஜி. நிறுவனங்களின் நிர்வாக அதிபர். விவசாயம், தொழில் துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தொழில் நுணுக்க, விஞ்ஞான விஷயங்களைத் தெளிந்த, எளிய தமிழில் மாதந்தோறும் தமிழ் மக்களுக்குத் தந்து, சிறந்த பணியாற்றும் “கலைக்கதிர்” மாத இதழின் ஆசிரியர்.

—ஆசிரியர்


ஒரு பம்பு தண்ணீரைக் கிணற்றிலிருந்து 'உறிஞ்சுகிறது' என்று சாதாரணமாக சொல்லப்படுகிறது. இது உண்மையல்ல. பம்பினுள் இருக்கும் விசிறி (impeller) சுழல்வதால், அதைச் சுற்றியிருக்கும் நீர், வெளிப்போக்குக் குழாய் (delivery pipe) வழியாக வெளியேற்றப்பட்டு, பம்பு மூடியினுள்ளும் (casing), விசிறியைச் சுற்றியும் ஒரு வெற்றிடம் (vacuum) தோன்றுகிறது. இப்பொழுது காற்று மண்டல அழுத்தம் (atmospheric pressure) வேலை செய்யத் தொடங்குகிறது. இதன் காரணமாக கிணற்றில் உள்ளநீர், 'புட் வால்வு' (foot valve) வழியாக உட்போக்குக் குழாயினுள் 'உறிஞ்சு' (suction pipe) நுழைந்து, விசிறியைச் சுற்றி ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நோக்கிப் பாய்கிறது. பிறகு அந்த நீர் விசிறியின் சுழலினால் வெளியேற்றப் படுகிறது. இவ்வாறுதான் கிணற்றி லுள்ள தண்ணீர் வெளிக்கொணடு வரப்படுகிறது.



திரு ஜி. ஆர். தாமோதரன்

கடல் மட்டத்தில் வைக்கப்பட்ட பம்பு 34 அடி உயரமே தண்ணீரை எடுக்கவல்லது என்று நடைமுறையில் ஆராய்ந்து பார்க்கப்பட்டிருக்கிறது. காற்று மண்டல அழுத்தத்தின் திறன் இவ்வளவுதான். கடல் மட்டத்திற்கு மேலே செல்லச் செல்ல, ஒவ்வொரு 1,000 அடிக்கும் காற்று மண்டல அழுத்தத்தின் திறன் 1.2

# விசையேற்றங்களை நிறுவுதல்



அடி தண்ணீர், கம்பத்தைத் தாங்க வல்ல ஆற்றல் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுள்ளார்கள். ஆதலால் கடல் மட்டத்திற்கு 7,000 அடி உயரமுள்ள உதக மண்டலத்தில் வாயுமண்டல அழுத்தம், 25½ அடி தண்ணீர் கம்பத்தைத்தான் தாங்கவல்லது.

இது தவிர, கிணற்றிலுள்ள தண்ணீரானது புட்வால்வு, உட்போக்குக் குழாய் வெளிப் போக்குக் குழாய், குழாய்களில் இருக்கும் வளைவுகள் (Bends), வால்வுகள் (valves) முதலியவற்றின் வழியாய் செல்லும்போது, உராய்வின் காரணமாக, வாயுமண்டல அழுத்தத்தின் ஆற்றலை இழந்து விடுகிறது.

இந்த அடிப்படையில்தான், கிணற்றின் நீர் மட்டத்திற்கும் பம்பின் மையத்திற்கும் உள்ள உயரத்தை நிர்ணயிக்க வேண்டும். சாதாரணமாக பம்புக்கும் நீர் மட்டத்துக்குமிடையே உள்ள தூரம் 20 அடிக்கு மேற்படாமல் இருந்தால்தான், பம்பு செவ்வனே இயங்கி வரும்.

## பம்பை நிர்மாணித்தல்

பம்பை நிர்மாணிக்கும் பொழுது கீழ்க்கண்ட குறிப்புகளை மனத்தில் கொள்ள வேண்டும்:—

1. பம்புக்கும் நீர் மட்டத்துக்குமிடையே உள்ள தூரம் எவ்வளவு குறைவாக இருக்க வேண்டுமோ அவ்வளவு இருக்க வேண்டும்.

2. உட்போக்குக் குழாயில் பொருத்தப்பட்டிருக்கும் புட்வால்வு, நீரில் நன்கு மூழ்கி இருக்க வேண்டும். இல்லையெனில், புட்வால்வு வழியாகக் காற்று உட்புகுந்து, பம்பில் ஏற்படும் வெற்றிடத்தைக் குறைப்பதன் மூலம், பம்பின் வேலைத் திறனைக் குறைத்துவிடும்.

3. தண்ணீர் எவ்விதத் தடங்கலுமின்றிச் செல்ல, புட்வால்வுக்குக் கீழே உள்ள சல்லடையின் பரப்பு, உட்போக்குக் குழாயின் பரப்பைவிட 4 அல்லது 5 மடங்கு அதிகமாக இருக்க வேண்டும். மேலும் இவ்வமைப்பால், சில சமயங்களில், சல்லடையின் கண்களில் ஒரு சில அடைத்துக் கொண்டாலும், போதிய தண்ணீர் உட்செல்ல வாய்ப்பேற்படுகிறது.

4. உட்போக்குக் குழாய், நீர் மட்டத்திற்குச் செங்குத்தாகவோ அல்லது மேல் நோக்கிய சீரான சாய்வாகவோ பொருத்தப்படல் நலம். இவ்வமைப்பு பம்பினுள் காற்றுப் பைகள் ஏற்படாமல் தடுக்கிறது. காற்றுப் பைகள் ஏற்பட்டால், தண்ணீரில் உந்தம் குறைக்கப்பட்டு விடும். எக்காரணத்தைக் கொண்டும், பம்பின் மட்டத்திற்கு மேல் உட்போக்குக் குழாயின் எப்பாகமும் இருக்கக்கூடாது.

5. வெளிப் போக்குக் குழாயை விட, உட்போக்குக் குழாயின் குறுக்கு வெட்டுப் பரப்பளவு அதிகமாக இருக்க வேண்டும். இது உராய்வினால் ஏற்படும் மட்ட இழப்பை ஓரளவுக்குக் குறைக்கிறது.

6. சுற்றி வளைத்துச் செல்வதாக, உட்போக்குக் குழாயோ வெளிப்போக்குக் குழாயோ அமைக்கப்படக் கூடாது.

7. குழாய்களில் அதிக வளைவுகள், வால்வுகள் மற்றும் வேறு அமைப்புகள் ஆகியவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

8. வளைவுகள் உபயோகிக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், முடிந்த அளவிற்குக் குறுகிய வளைவுகளை நீக்கி அகன்ற வளைவுகளை உபயோகப்படுத்த வேண்டும்.

9. உட்போக்குக் குழாய்க்கு அண்மையில் தண்ணீரை இறைக்கக்கூடாது. இவ்வாறு செய்தால காற்று பம்பினுள் புகுந்து அதன் திறனைக் குறைக்க ஏதுவாகும்.

10. அதிக உயரம் தண்ணீரை உயர்த்தும் மிதமான வேகத்தைக் கொண்ட பம்புகளையே தெரிந்தெடுக்க வேண்டும்.

## பம்பு செட்டை அமைக்குமிடம்

நல்ல வெளிச்சம் வரக்கூடியதும், ஈரம் தங்காத வரண்ட, சுத்தமான, இடமாகப் பார்த்து பம்பை அமைக்கவேண்டும். தூசி படியும் இடமாக இருந்தால் கண்டிப்பாக பம்பும், மோட்டாரும விரைவில் கெட ஏதுவாகும். அடிக்கடி பழுது பார்க்கக் கழட்டவோ அல்லது இடையிலேயே பழுது பார்க்கவோ ஏதுவாக, போதிய விளக்கு வசதியும் குழாய்களை கழற்றி மாட்ட உயரமான கூறையை உடையதாகவும் இருத்தல் நலம்.

தண்ணீர் மட்டம் அதிகரிக்கக்கூடிய இடமாக இருந்தால், கீழ்மேல் என இரண்டு மட்டங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும். கீழ் மட்டத்திருக்குத் தண்ணீர் வந்துவிட்டால் பம்பு செட்டைக் கழற்றி தண்ணீர் எட்டாத மேல் மட்டத்தில் வைத்துக் கொள்ளுமாறு இரண்டு மட்டங்கள் தேவை.

## குழாய்கள்


உள் எடுப்பு, வெளி எடுப்புக் குழாய்கள், அவற்றுடன் பொருத்தப்பட்டுள்ள வால்வுகளும் தனித் தனியே நல்ல முறையில் எவ்வித ஆட்டமோ, அசைவோயின்றிப் பொருத்தப்பட வேண்டும். ஆனால் இவற்றின் பளுவோ, விசையோ பம்பு கேசிங்குடன் தொடர்பு இல்லாமல் இருக்க வேண்டும். தொடர்பு கொண்டால் கேசிங் உள்ளிருக்கும் விசிறியுடன் உராய்வுக்கு உட்பட்டு பம்பின் அழிவிற்கு வழிகோலுவதாகும்.

## உள்எடுப்புக் குழாய்

குறைபாட்டுடன் அமைக்கப்பட்ட உள் எடுப்புக் குழாய்தான், பம்பு வேலை செய்யும் பொழுது ஏற்படும் பல்வேறு தொந்தரவுகளுக்கு அடிப்படையாகும். உள் எடுப்புக் குழாய் எவ்வித வளைவுகளுமின்றி உட்பட்ட நேராகவும் குறைந்த நீளத்தையும் கொண்டிருக்க வேண்டும். உள் எடுப்புக் குழாயின் அமைப்பு, சுற்றி



வளைந்த பாதையாக இருக்கக்கூடாது. குழாயின் அதிக நீளம் தவிர்க்க முடியாததாய் இருந்தால், உராய்வினால் ஏற்படும் மட்ட இழப்பைக் குறைக்க பெரிய விட்டத்தைக் கொண்டதாகவாவது இருக்க வேண்டும். அவ்வாறு பெரிய விட்டமுள்ள குழாயை உபயோகிக்கும் பொழுது, பம்பு பிளேஞ்சுக்கும், உள் எடுப்புக் குழாய்க்குமிடையே எக்ஸென்டிரிக் ரெட்யூசர் (eccentric reducer) வைத்து இணைக்கவேண்டும்.



படம் 1.

1. எக்ஸென்டிரிக் ரெட்யூசர்.
2. உறிஞ்சு குழாய்.
3. அகலமான வளைவு.
4. தண்டவாளம்.
5. புட்வால்வு.
6. அடைப்புவால்வு.
7. கண்காணிப்பு வால்வு.

உள் எடுப்புக் குழாய் செங்குத்தாகப் பொருத்தப்பட்டால், தண்ணீர் உறிஞ்சு மட்டத்திலிருந்து நேரடியாக விசிறிக்குள் செல்ல ஏதுவாகும். ஆனால் நடைமுறையில் கிணற்றுப் படுகையிலோ அல்லது கிணற்றுச் சுவற்றிலோ பம்பை வைக்கும் பொழுது உள் எடுப்புக் குழாயைச் செங்குத்தாகப் பொருத்த முடியாது. இத்தருணங்களில், உள் எடுப்புக் குழாயின் மட்டம் எக்காரணத்தைக் கொண்டும் பம்பின் மட்டத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

பம்புக்கும் உள் எடுப்புக் குழாய்க்குமிடையே உள்ள வளைவுகளையும் மற்ற பாகங்களையும் கவனத்துடன் பார்த்து வாங்கவேண்டும். அதாவது வளைவுகள் அல்லது அது போன்ற மற்ற பாகங்கள் வாங்கும்போது, குறுகிய வளைவாக இல்லாமல் அகன்ற வளைவுள்ளதாக இருக்க வேண்டும். இல்லையெனின் தண்ணீரின் ஓட்டம் மிகுவாகப் பாதிக்கப்பட்டு, உறிஞ்சு மட்டம் குறைந்துவிடும். மேலும் பம்பு பிளேஞ்சுக்கும் (Flange) புட்வால்வுக்கும் இடையேயுள்ள குழாய், முடிந்தளவுக்கு ஒரே குழாயாக எவ்வித இணைப்பும் இல்லாமல் இருக்க வேண்டும். இப்படியிருந்தால், சீரான தண்ணீர் ஓட்டம் குழாய்களில் ஏற்பட வாய்ப்புண்டு.

'புட் வால்வை'த் தவிர, உள் எடுப்புக் குழாயில் எவ்வித வேறு வால்வுகளையும் பொருத்தக்கூடாது. வால்வுகள் இடையில் இருந்தால், உராய்வு ஏற்பட்டு உறிஞ்சு மட்டம் மிகவும் குறைந்துவிடும்.

முடிந்த அளவுக்குப் புட்வால்வின் கனம், உள் எடுப்புக் குழாயின் மேல் தொழிற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில், பம்பு குழாய்களின் இணைப்பு நிலையில் மாறுதல் ஏற்பட்டுவிடும். புட்வால்வுக்குச் சிறிது மேல் தண்டவாளத்தைக் கிணற்றின் ஓரத்தில் பதித்து, நீட்டிக்கொண்டிருக்கும் தண்டவாளத்தின் நுனிக்கும் குழாய்க்குமிடையே ஆப்பைச் செருகி, புட் வால்வின் கனம் நேரடியாகப் பம்பின் மேல் தொழில் படாமல் தடுக்கலாம்.

உள் எடுப்புக் குழாயின் கீழ் நுனிக்குப் பக்கத்தில் தண்ணீர் விழ அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் தண்ணீர் விழும் விசையில் காற்றுக் குமிழ்கள் ஏற்பட்டு, அவை உள்ளெடுப்புக் குழாயில் புகுந்து பம்பின் வேலைத் திறனைப் பாதிக்கும்.

## வெளி எடுப்புக் குழாய்

கண்காணிப்பு வால்வும் (Check valve) அடைப்பு வால்வும் பொதுவாக இக்குழாயில் பொருத்தப்படுவதுண்டு. அடைப்பு வால்வு தண்ணீரின் அளவைக் கட்டுப்படுத்தப் பயன்படுகிறது. தண்ணீர் பின் நோக்கி வராமல் தடுக்க, கண்காணிப்பு வால்வு, அடைப்பு வால்வுக்கும் பம்புக்கும் இடையில் பொருத்தப்பட்டிருக்கும். வெளியெடுப்புக் குழாயிலிருக்கும் தண்ணீரை அப்புறப்படுத்தாமலே பம்பைக் கண்காணிக்கவோ, பழுது பார்க்கவோ, ஏதுவாக இவ்வாறு பொருத்தப்பட்டிருக்கிறது. பம்பை ஓட்ட ஆரம்பிக்கும் பொழுதும் நிறுத்துகின்றபொழுதும் அடைப்பு வால்வு மூடியபடி இருக்க வேண்டும்.

[43-ம் பக்கம் பார்க்க]

உனக்கு
என்ன கொண்டு வந்திருக்கிறேன்
பார்த்தாயா?
பாரி மிட்டாய்கள்.



பாரி மிட்டாய்களைப் போன்று
குழந்தைகளை மகிழ்விப்பது வேறு
எதுவுமில்லை என்பதை
பெற்றோர்கள் நன்கு அறிவார்கள். அவற்றில்
எத்தனையோ சுவைகள் உள்ளன.
எத்தனையோ வகைகள் உள்ளன.
எல்லாம் சத்துள்ள மிட்டாய்கள்.

Parry's

பாரிஸ் - உயர்தர மிட்டாய்
தயாரிப்பாளர்கள்.

பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட்
சென்னை

PRS-4810




# மலேசியாவில் கிராம வளர்ச்சிப் பணிகள்



திரு கே. எஸ். இராமானுஜம்

[மலேசியா நாட்டில் நடைபெற்று வரும் கிராம வளர்ச்சிப் பணிகள் பற்றி ஆராயும் இக்கட்டுரையை "கிராமநலம்" இதழிற்கென்றே எழுதியுள்ள திரு கே. எஸ். இராமானுஜம் அவர்கள், "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" என்ற ஆங்கில நாளிதழின் சென்னை நிருபராக உள்ளார். பத்திரிகை உலகில் கனிந்த அனுபவம் பெற்றவர். அன்னாருடைய இக்கட்டுரை "கிராம நலம்" வாசகர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை—ஆசிரியர்.]

ஆசியாக் கண்டத்திலுள்ள முக்கியமான நாடுகளில் இன்று மலேசியாவும் ஒன்றெனத் திகழ்ந்து வருகிறது. 1,28 000 சதுர மைல்களை உள்ளடக்கிய இந்நாட்டின் மக்கள் தொகை 120 லட்சத்திற்கு சற்று குறைவேயாகும். ஆசிய நாடுகள் அனைத்திலும் அதிக சராசரி வருவாயைக் கொண்டது மலேசியா ஒன்றுதான். இங்குள்ள மக்களின் சராசரி ஆண்டு வருவாய் ரூ. 2,400 அல்லது மாதம் ரூ. 200 ஆகும்.

தென் கிழக்கு ஆசியாவிலேயே வளமான மக்களாட்சியை அமைத்துக்கொண்டு, முன்னேற்றப் பாதையில் வெற்றி நடைபோட்டுச் செல்வதும் மலேசியாவே.

## 13 மாநிலங்கள் கொண்ட நாடு

பதினோறு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது—1957-ம் ஆண்டில் - மலேசியா விடுதலைப்பெற்று சுதந்திர நாடாக ஒளிவீசத் தொடங்கியது. இங்குள்ள மக்களில் அறுபது சதவீதத்திற்கு அதிகமானவர்கள் 25 வயதிற்கும் குறைவானவர்களாகவே உள்ளனர். எனவே இளைஞர் சமுதாயத்தைபெரும்பான்மையாகக் கொண்டது இந்நாடென கூறலாம். பல இன மக்களை தன்னகத்தே கொண்டு விளங்கும் இந்நாட்டில், 49 சதவீத மக்கள் மலேயர்களாகவும் 11 சதவீதம் இந்தியர்களாகவும் உள்ளனர். எஞ்சிய 40 சதவீதத்தினர் சீனர்களாவார்கள்.

இன்றைய மலேசியா, மேற்கு மலேசியா, போர்னியோ ஆகியவற்றைக் கொண்டது. மலேசியாவில் உள்ள மாநிலங்கள் ஜொஹூர், கெதா, செம்பிலான், கெலண்டன், மலாக்கா, நெகரி, பினாங்கு, பாரிக், பெர்லியா, செலாங்கூர், டிரங்கான் ஆகியவை. போர்னியோவில் உள்ளவை சபா மற்றும் சாராவாக். 13 மாநிலங்களைக் கொண்ட கூட்டரசு அமைப்பைக் கொண்டது மலேசியா.

இந்நாட்டுப் பொருளாதாரம், வேளாண்மையையும் ஏற்றுமதியையுமே அடிப்படையெனக் கொண்டது. மொத்த தேசிய உற்பத்தியில் 40 சதவீத அங்கம் வகிப்பது ஏற்றுமதியே. இதில் ரப்பர் மட்டுமே 30 சதவீதப் பங்கை எடுத்துக் கொண்டுவிடுகிறது. மலேசியாவிலுள்ள ரப்பர் தோட்டங்களே மலேசியாவின் சுகவாழ்விற்கும் மலர்ச்சிக்கும் பின்னணியாக அமைந்துள்ளன.

## வசதிகள் மலிந்த நாடு

மலேசியா முழுவதிலும் முதல்தர சாலைகள், ஏனைய வசதிகள் மலிந்துள்ளன. நாடு அனைத்தையும் ஏராளமான தொலைப்பேசிகள், வானொலி, டெலிவிசன் ஆகியவை சிறந்த முறையில் இணைக்கின்றன. எனவே இவ்வசதிகளைப் பெருமளவில் பெற்றுள்ள இந்நாட்டால், கிராம வளர்ச்சியில் மிக்க ஆர்வம் காட்டி உற்சாகம் நிரம்பிய திட்டங்களை உருவாக்க முடிந்துள்ளது.

வேளாண்மைத் துறையிலும், ரப்பர் தோட்ட வளர்ச்சிக்கெனவும் கடந்த பத்து ஆண்டுக் காலத்தில் ஏராளமான முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

மலேசிய அரசு உருவாக்கிய முதல் மலேசியத் திட்டம், சில முக்கியமான குறிக்கோள்களையும், நல்வாழ்வுத் திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்தனவாகும். அவற்றில் முக்கியமானவை:

(அ) பொருளாதாரத் துறையில் வளர்ச்சியை ஏற்படுத்தி, மக்களையும், மலேசியா மாநிலங்களையும் சமுதாய அளவில் ஒன்றுபடுத்தல்.

(ஆ) குறைந்த வருவாயைப் பெற்று வரும் மக்களின் வருவாயையும், வாங்கும் சக்தியையும் அதிகரிக்க வழிகோலுதல்.

(இ) பெருகி வரும் உழைப்பாளர் சமுதாயத்திற்குப் போதுமான வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்து வேலையில்லா நிலையைக் குறைத்தல்.

(ஈ) கல்வி வசதி, பயிற்சி வசதிகளை அதிகரித்துத் தருதல்.

(உ) ரப்பர், தகரம் ஆகிய இரண்டையுமே சார்ந்திருக்கும் நிலையை குறைக்கும் முறையில் பொருளாதாரத்தை பல்வகைப்படுத்துதல்.

### அரசின் ஆர்வம்

கிராம வளர்ச்சிக்கென பெருமளவில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த செலவினங்களை ஆராய்கையில், கிராமங்களில் வாழ் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டுமென்பதில் மலேசிய அரசிற்குள்ள உறுதி, அக்கறை தெளிவாகத் தெரிகிறது. நிலமில்லாதோருக்கு நிலம் வழங்குதல், மிகு விளைச்சல் தரும் ரப்பர் மற்றும் இதர தானியங்களைப் பெருமளவில் பயிரிடுதல், வசதிகள் அனைத்தும் கொண்டுள்ள புதிய கிராமங்களை உருவாக்குதல் ஆகியவை, இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. தவிர, நிலையான வேளாண்மை முறைகளைக் கையாண்டு, பெருமளவில் ஆதாயத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் இத்திட்டம் வழிகோலுகிறது. வேளாண்மை முறைகளை மாற்றியமைத்தல், மண் வளத்தைப் பெருக்கி, களைச் செடிகளை அகற்றி, பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், வியாதிகளைக் கட்டுப்படுத்தி, சராசரியான விளைச்சல் தரும் நெல், தேங்காய் ஆகிய பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குதல் வலியுறுத்தப்படுகின்றன.

மொத்தமாக 2,000 மைல் நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதையும், தண்ணீர் விநியோகத்தில் 200 மில்லியன் காலன்கள் அதிகரித்துள்ளதையும் காணும்போது, மலேசியாவின் கிராமவளர்ச்சித் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஓரளவு விளங்கும். நீர் விநியோகத்தில் பெருமளவு கிராமப்புறத்திற்கே ஒதுக்கப்பட்டுள்ளன.

### திறன் வாய்ந்த திட்டங்கள்

மத்திய நில வளர்ச்சி நிறுவனமானது, 100-க்கும் மேற்பட்ட புதிய வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இதனால் 2,50,000 ஏக்கர்கள் புதிதாக வேளாண்மையின் கீழ் கொண்டு வரப்பட்டு, 40,000-க்கும் குறைவில்லாதோர் குடியேற்றப்பட்டுள்ளனர். (இவை தவிர பல்வேறு மாநில அரசுகள் மேற்கொண்டுள்ள நிலத் திட்டங்களும் உள்ளன.) இத்திட்டத்தினால் குடியேற்றப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 ஏக்கர் நிலம் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடியிருப்புத் தொகுதியிலும் ஒரு பள்ளி, மசூதி, சுகாதார நிலையம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. குடியேற்றப்பட்டுள்ளோர் தங்களைத் தாங்களே சமாளித்துக்கொள்ளும் நிலையை அடையும் வரை, தங்களைக் காத்துக்கொள்வதற்கு உதவி செய்யும் வகையில், அவர்களுக்கு கடன் அளிக்கப்படுகிறது. இக்கடன்களை அவர்கள் பல ஆண்டுகள் தவணையில் திருப்பிச் செலுத்தலாம்.

மலேசியாவின் உற்பத்திக்கு பெருமளவில் வளர்ச்சியைக் கொண்டு தரும் மற்றொரு திறன் வாய்ந்த செயல் திட்டமென "ஜெங்கா" திட்டத்தைக் கூறலாம். பல்வகையான நிலத் திட்டங்களை ஒருங்கிணைத்து, அவற்றை ஒரு மைய நிர்வாகத்திலும், பிராந்திய நிர்வாகத்திலும் கொணர்ந்து, குடியேற்றப்பட்டிருப்போருக்கு மதிப்பற்ற சேமிப்பை ஏற்படுத்தித் தருவதே இதன் குறிக்கோளாகும். இதற்கென உலகெங்கிலுமுள்ள வளர்ச்சி ஆலோசகர்களின் சேவைகள் கோரப்பட்டுள்ளன. அவ்வாலோசகர்களுக்கு மைய நில வளர்ச்சி நிறுவனத்திடமிருந்தும், அரசுத் துறைகளிடமிருந்தும் முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கிறது. ஐந்தாண்டுகளுக்கு முன்பு முக்கோண வடிவில் அமைந்திருந்த காட்டுப் பகுதியானது, இன்று "ஜங்கா முக்கோணத்" திட்டத்தின் வாயிலாக சுறுசுறுப்பு மிக்க ஓர் இடமாக மாறியுள்ளது. இத்திட்டத்தைச் சார்ந்துள்ள புதிய பண்ணையில், 15 000 குடும்பங்கள் அல்லது 1 00,000 பேர்கள், 1968-ம் ஆண்டின் இறுதியில் நன்மை பெறுவர்.

இத்திட்டம் ஏற்கனவே பல பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டுள்ளது என்றும், கிராம நலத் திட்டங்கள், கிராம உற்பத்தி ஆகியவற்றில் புதிய முறைகள் அனைத்தும் இங்கு சோதிக்கப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது. ஒரு கிராமம், உச்ச அளவில் எவ்வளவு பெரிதாக, எவ்வாறு இருக்க வேண்டும் என்பது மட்டுமின்றி, அதில் வசிக்கும் ஒவ்வொருவரது பண்ணையின் அளவும், அவருடைய வருவாயும் நிர்ணயிக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### நல்வாழ்வு. நல்லாட்சி

வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்று, தமிழகத்திலிருந்து 'ஜங்கா முக்கோணத்திற்கு'ச் சென்று அங்கு நடைபெற்று வருவதைக் கண்டறிந்து கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

கூட்டுறவு இயக்கமும் மலேசியாவில் மகத்தான முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்பதையறிந்து நான் மிக்க வியப்புற்றேன். 1960-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற நில நிதிக் கூட்டுறவுச் சங்கமானது கூட்டுறவு இயக்கத்திற்கு பெருமளவில் ஆற்றியுள்ளது. இன்றளவில், இச்சங்கத்திற்குச் சொந்தமாக 12 எஸ்டேட்கள், 20,900 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளன. இவற்றில் 3,000 பேர்கள் வேலை செய்கின்றனர். வரும் ஆண்டுகளில் மேலும் 'எஸ்டேட்டுகளை' வாங்க சங்கம் முடிவு செய்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் எழு சதவீதம் இலாபமாக பங்கிடுத் தரப்பட்டுள்ளது.

இவ்வாறான பல்வேறு திட்டங்கள் வாயிலாக கிராம மக்களின் பொருளாதார, சமூக நலன்களுக்கும், நகர, கிராம மக்களுக்கிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்காகவும், மலேசிய அரசு தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ளது போற்றத்தக்கதாகும்.




தொலைபேசி : 284

தபால் பை : 18
தந்தி : "குமரி பாங்க்"

**கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட், நாகர்கோவில்.**

(கிளைகள் : மார்த்தாண்டம் & தக்கலை)

திரு எல். ராமச்சந்திர நாடார்,
தலைவர்.

திரு ஜி. டானியல், பி.ஏ.,பி.எல்.,
துணைத் தலைவர்.

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | .. | 30 லட்சம் |
| செலுத்தப்பட்ட மூலதனம் | .. | 27 லட்சம் |
| நடைமுதல் மூலதனம் | .. | 2 கோடிக்கு மேல் |


கரண்ட், சேவிங்ஸ், நிரந்தர டிப்பாசிட்டுகள் வசீகர வட்டிக்குப் பெற்றுக் கொள்ளப்படுகிறது. மேலும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட போகும் நிரந்தர டிப்பாசிட்டுகளுக்கு தமிழ்நாடு அரசாங்கத்தின் உத்தரவாதம் உண்டு.

சகல விதமான பாங்கின் அலுவல்களும் நடத்தப்படுகின்றன.


பி. வானமாமலை, பி.ஏ.,
துணைப் பதிவாளர்—காரியதரிசி.

தமிழக அரசால் பஞ்சாயத்துகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட

**ரேடியோக்கள்**



மாடல் BS 67
6 வால்வுகள் AC
4 பாண்டுகள்
விலை ரூ. 455·80
விற்பனை வரி மற்றும் எக்ஸைஸ் வரி உள்பட



மாடல் TR 67 டிரான்ஸிஸ்டர், 4 பாண்டுகள்
அகில உலக நிகழ்ச்சிக்கு மெயின் செட்டை போலவே இயங்கவல்லது.
விலை ரூ. 455·80
விற்பனை வரி மற்றும் எக்ஸைஸ் வரி உள்பட

தொலைபேசி : 82319

தந்தி : "ASSEMBLER"

**ரீஸா கம்பெனி**

அலுவலகம் : 11, மவுண்ட் ரோடு, சென்னை-2.
தொழிற்சாலை : 829, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-32.

## நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட்,

நெ. கே. 708 "செயிலிங் ஹவுஸ்" N.C.M.S.

உதகமண்டலம்.

தலைமை அலுவலகம் : உதகமண்டலம்
தந்தி : "COOPERATE"
தொலைபேசி : 412

கிளை அலுவலகம் : மேட்டுப்பாளையம்
தந்தி : "COOPERATE"
தொலைபேசி : 87

இச்சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு தரமான கலப்பு உரம், விவசாயக் கருவிகள் முதலியவைகளை குறைந்த விலைக்கு வினியோகம் செய்தும் அவர்களது உருளைக்கிழங்கு மற்றும் இதர மலைக்காய்கறிகளை சாதகமான விலைக்கு விற்றும் வருகிறது.

உருளைக்கிழங்கு விற்பனை இச்சங்கத்தின் மேட்டுப்பாளையம் கிளையிலும், காய்கறிகள் விற்பனை உதகையில் நகராட்சி சந்தையிலுள்ள (மார்க்கட்) மொத்த விற்பனை நிலையத்திலும், மேட்டுப்பாளையம் கிளையிலும் நடைபெற்று வருகின்றன. தரமான உருளைக்கிழங்கு தேவைக்கும், விற்பனைக்கும் மேற்படி சங்கத்தின் மேட்டுப்பாளையம் கிளை அலுவலகத்துடனும், நேர்த்தியான மலைக்காய்கறிகள் தேவைக்கு உதகையிலுள்ள இச்சங்கத்தின் கிளை அலுவலகத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.



அபரிமிதமான விளைச்சலைப் பெருக்க
பயிர் நாச கிருமிகளினின்றும்
பயிர்களை காப்பாற்ற
பூச்சி மருந்து தெளிக்கவும், தூவவும்,

ஆஸ்பி தெளிப்பான்களும் (Sprayers)
தூவு கருவிகளும் (Dusters)
மிகச் சிறந்த சாதனங்கள்

தயாரிப்பவர்கள் :

## அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸிங் ஒர்க்ஸ் (பிரைவேட்), லிமிடெட்

மலாட், பம்பாய் 64 N. B.

மைசூர், சென்னை மாநில வினியோகஸ்தர்கள்

S. V. ரங்கசாமி அண்டு கம்பெனி, பிரைவேட், லிமிடெட்

தலைமை அலுவலகம் :
தொலைபேசி எண் 75071
75, கலாசிபாளையம்,
நியூ எக்ஸ்டென்ஷன்,
தபால் பெட்டி எண் 539,
பெங்களூர்-2,

கிளை அலுவலகம் :
தொலைபேசி எண் 81227
20, Y.M.C.A. கட்டிடம்,
வெஸ்ட் காட் ரோடு,
தபால் பெட்டி எண் 677,
இராயப்பேட்டை, சென்னை-14.






# "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்..."

[திரு வி. வெங்கடாசலம், உள்துறை துணைச் செயலாளர், தமிழக அரசு]

"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்ற வள்ளுவர் வாக்கியம், திருவள்ளுவர் உருவத்தைச் சுற்றிலும் பொறிக்கப்பட்டுள்ள தங்கப் பதக்கங்களைப் பெற்றுக்கொள்ள ஆவலுடன் முன் வரிசையில் ஒன்பது தம்பதிகள் மலர் மாலைகளுடன் வீற்றிருந்த காட்சி, கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அன்று 1968 அக்டோபர் திங்கள், நாள் பதினொன்று, சென்னைமாநகரில் வாலாஜா சாலையிலுள்ள பாலர் அரங்கம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஒளிமயமாய் விளங்கிற்று. அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப்படம் அண்ணலுக்கே உரித்தான புன்னகையுடன் யாவரையும் வரவேற்றது. பொதுமக்கள் திரள்திரளாக வந்து அரங்கத்தினுள் அமர்ந்திருந்தனர். யாவர் கண்களும் முன்வாயிலை ஆவலுடன் நோக்கிய வண்ணமிருந்தன, எப்பொழுது திரு ஜகஜீவன்ராமும், மேதகு ஆளுநர் அவர்களும் ஏனைய அமைச்சர் பெருமக்களும் வருவார்கள் என்று. அவர்களை வரவேற்க மாண்புமிகு அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார் தயாராகக் காத்துக் கொண்டிருந்தார்.

மணி ஆறு அடிக்க ஒரு நிமிட முன்னரே திரு ஜகஜீவன்ராமும் மேதகு தமிழக ஆளுநரும் அரங்கின் முன் வந்திறங்கினர். அவர்களை அமைச்சர் அம்மையார் பேருவகையுடன் வரவேற்றார். பாலர் அரங்கே கொள்ள முடியாமல் குழுமியிருந்த மக்களிடையே எழுந்த ஆரவாரம் வானளாவ எட்டியது.

### அண்ணாவின் அரிய யோசனை

கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குப் பரிசு வழங்க வேண்டும் என்ற அரிய யோசனையை முதலில் வெளியிட்டவர் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள். சென்ற ஆண்டு ஜூன் மாதம் 17-ஆம் தேதி தமிழக அரசின் முதல் வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றத்தில் வெளியிடும்பொழுது, முதல்வர், சாதி வேற்றுமைகளை அகற்றுவதற்குத் தமிழக அரசு, கலப்பு மணம் செய்து கொள்வோருக்குப் பரிசு வழங்குமென்றும், இதற்கென வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 10,000 ஒதுக்கியிருப்பதாகவும் அறிவித்தார். இதன்படி 1967-ம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாள் முதல் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு ஒரு பவுன் அளவில் தங்கப் பதக்கம் வழங்குவதற்கு ஒரு திட்டத்தை அரசு உருவாக்கியது. இத்திட்டத்தின்படி, கலப்பு மணம் செய்துகொண்ட தம்பதிகளில் ஒருவர் அரிசன வகுப்பைச் சேர்ந்திருக்கவேண்டும்; அல்லது ஆதிவாசியாகயிருக்கவேண்டும். இன்னொருவர் உயர் ஜாதியராகவோ, பின்னிலை வகுப்பினராகவோ இருக்கவேண்டும். இத்திட்டம், இந்து மதத்திற்குள் சாதி வேற்றுமைகளை ஒழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளதால், இருதரப்பினரும் இந்து மதத்தைச் சார்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களை, தங்கள் மாவட்டத்திற்குள் பரிசு பெற தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கும்படி, அரசு அறிவித்தது. பரிசுகள் காந்தி பிறந்த தினமான அக்டோபர் 2-ம் தேதியன்று அளிக்க வேண்டுமென்றும் ஆணையிட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்பிய 300-க்கும் மேற்பட்ட மனுக்களைப் பரிசோதித்து, 1967-ம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாள் முதல் 1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிய கலப்புத் திருமணம் செய்து

"சாதிகள் இல்லையடி பாப்பா" என்று முழங்கினன் பாரதி. சாதியற்ற, வறுமையற்ற, சுரண்டலற்ற சமுதாயத்தினை அமைக்கப் பாடுபட்டுவரும் தமிழக அரசு "படியரிசித் திட்டம்" என்ற பெரியதொரு "அரிசிப் புரட்சி"யை தோற்றுவித்தது போல, மற்றொரு புரட்சிகரமான திட்டத்தையும் இன்று செயல்படுத்தியுள்ளது. அதுவே, "கலப்புத் திருமணம் புரிபவர்களுக்கு தங்கப் பதக்கம் பரிசளிப்பது" என்ற திட்டம். சாதிக் கொடுமை, தீண்டாமை என்ற கொடிய நோய் தீர, அருமருந்தாக அமைந்துள்ள இத் திட்டத்தைப் பற்றியும், கலப்புத் திருமணம் புரிந்து கொண்ட தம்பதிகளுக்கு, அரசு, தங்கப் பதக்கம் அளித்துப் பாராட்டியதையும், அழகாக கட்டுரை வடிவில், தீட்டித் தந்துள்ளார், உள் துறை துணைச் செயலாளர்.

—ஆசிரியர்.

கொண்டவர்களில் பரிசு பெறத் தகுதியானவர்கள் 49 பேர்கள் எனத் தீர்மானிக்கப்பட்டது. மாவட்ட ரீதியாக பரிசுபெற தேர்ந்தெடுக்கப்பட்ட கலப்புத் திருமணத் தம்பதிகளின் எண்ணிக்கை வருமாறு:—

திருச்சி 8, கோவை 7, மதுரை 6, ராமநாதபுரம் 5, செங்கற்பட்டு 5, சேலம் 4, சென்னை 4, தஞ்சை 3, கன்னியாகுமரி 3, திருநெல்வேலி 2, நீலகிரி 1, தென் ஆர்க்காடு 1.

காந்தியடிகள் நூற்றாண்டு விழாவான இவ்வருடமே இப்பரிசுத் திட்டத்தைச் சென்னையில் துவக்கி வைக்கவேண்டுமென்றும் இதைத் துவக்கி வைப்பதற்கு மிகுந்த தகுதியுடையவர் காந்தியடிகளின் தீண்டாமையொழிப்புத் திட்டத்தில் தீவிரமாக உழைத்த அவர் வரரிசான மத்திய அரசாங்க விவசாய உணவு அமைச்சர் திரு ஜகஜீவன்ராம் தான் என்று தமிழக அரசு கருதியது. இதற்கென தமிழக அரிசன நலத்துறை அமைச்சர் **மாண்புமிகு திருமதி டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார்** விடுத்த அழைப்பை அன்புடன் ஏற்றுக் கொண்டார், மத்திய அமைச்சரும். மேலும் இத்துவக்க விழாவில் சென்னை—செங்கற்பட்டு மாவட்டங்களில் பரிசு பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் மேதகு ஆளுநர் அளிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.




**புனிதமான நாள்....**

விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தனக்கே உரித்தான பாணியில் வரவேற்றார் "தமிழகத்தில் இது ஒரு புனிதமான புரட்சிகரமான நாள். கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு பலவிதமான எதிர்ப்புகள் இருக்கின்றன. இவற்றை விலக்குவதற்காகவே, இத்திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. கலப்பு மணங்களை ஆதரிப்பதோடு மட்டுமின்றி, அவற்றை ஊக்குவிக்கவும் வேண்டும்" என்றார் அவர். "தீண்டாமை"யை ஒழிக்க அரும்பாடுபட்டார் மகாத்மா காந்தியடிகள் அவரது கொள்கைகளைப் பின்பற்றி வாழும் திரு ஜகஜீவன்ராமே இத்திருவிழாவைத் தொடங்கி வைப்பதற்கு மிகவும் ஏற்றவர். காந்தியடிகள் பிறந்த நூறுவது ஆண்டான இவ்வாண்டில் இந்தத் திருவிழாவை அவரது சீடரே ஆரம்பித்து வைப்பது மிகவும் பொருத்தமே" என்றார் அமைச்சர். "மேலும், இப்பரிசுகளை வழங்குவதற்கு மிகவும் தகுதி பெற்றவர் பல்லாண்டுகளாக மண வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் தமிழக ஆளுநர் என்பதில் சற்றும் ஐயமில்லையென்றும், அவர் கையினால் பதக்கம் பெறும் தமபதிகள் ஆளுநர் காட்டிய வழியே நீண்டநாள் இல்வாழ்க்கை இனிது நடத்துவார்கள் என்பதைத் தான் நம்புவதாகவும்" ஆளுநர் அவர்களை வரவேற்றுப் பேசுகையில் மாண்புமிகு அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார் கூறினார்.

[படங்கள் : எதிர்ப்பக்கத்தில்

**சாதிக் கொடுமையை எதிர்த்துப் போர்**

**மாண்புமிகு திரு. ஜகஜீவன்ராம்** பேச எழுந்ததும் பலத்த கரகோஷம் அவரை வரவேற்றது. "சாதிக் கொடுமைகளை ஒழிக்க எல்லா வகையிலும் முழுமூச்சாகப் போர் தொடுக்கவேண்டும்" என்று கூறினார் அவர். "சாதி முறையால் கீழ்சாதியினர் மட்டுமின்றி, மேல் சாதிக்காரர்களும் துன்புறுகின்றனர். சாதிவிட்டு சாதி திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்து, மீறியவர்களை ஒதுக்கிவைத்து, அவர்களது குழந்தைகளுக்குச் சொத்துரிமை மறுத்து, சாதிக் கொடுமை நிலை நிறுத்தப்பட்டு வந்துள்ளது இந்தச் சமுதாயத்தில் சாதிமுறை இருக்கும்வரை, இந்நாட்டு மக்கள் பல கூறுகளாகவே இருப்பார்கள். கலப்புத் திருமணத்தைச் செய்வதன்மூலம் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும். அதில் சாதிபேதமே இருக்காது" என்று கூறி "கலப்புத் திருமணத்தை" ஊக்குவிப்பதற்காக இத்தகையதொரு திட்டத்தைக் கொண்டுவந்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு அண்ணாதுரையை மிகவும் பாராட்டினார். "காந்தியடிகள் இருந்திருந்தால், மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பார், தமிழக அரசை மெச்சி இருப்பார்" என முடித்தார் தன் பேச்சை.

**மானிட சாதி ஒன்றுதான்**

"சாதியென்ற சொல்லே அகராதியில் கிடையாது. சாதி முறை இடையிலே புகுத்தப்பட்டதுதான்; சாதி முறை, சாதிக் கொடுமையைப் போக்க தமிழக அரசு இப்பொழுது முற்பட்டுவிட்டது. அத்தி மரத்தில் எந்தக் கிளையில் காய் காய்த்தாலும் எல்லாம் அத்திக் காய்தான். அதே போல் எந்த வகுப்பில் பிறந்தாலும் மானிடன் ஒரே சாதிதான்" இவ்வாறு முழக்கமிட்டார் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் **கலைஞர் திரு கருணாநிதி** அவர்கள்.


மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் **திரு மதியழகன்** சாதியின் பெயரால் நடக்கும் கொடுமைகளைக் கண்டித்தார். "இக்கொடுமைகளையகற்றி சமுதாயத்தை ஒன்றுபடுத்த அறிஞர் அண்ணா எடுத்துக்கொண்ட பெரு முயற்சி இத்திட்டம" என்றார் அவர்.

மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் **திரு கோவிந்தசாமி** பேசுகையில் "மற்றவர்களும் கலப்புத் திருமணம் செய்து கொள்ள, இப்பெருவிழா ஊக்கமளிப்பதாக இருக்கும்" என்றார்.


[44-ம் பக்கம் பார்க்கவும்]

















1. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவிலிருந்து நவம்பர் 6-ஆம் நாள் சென்னை திரும்பியபோது மக்கள் மகத்தான வரவேற்பு அளித்தனர்.
2. குடியரசுத் துணைத் தலைவர் திரு வி.வி. கிரி அவர்கள் ஆந்திரகேசரி பிரகாசம் அவர்களின் சிலையை 19-10-1968 அன்று சென்னையில் திறந்து வைத்தார்.
3. வில்லிவாக்கத்திலுள்ள தமிழக மின்வாரியத்தின் அச்சுக் கூடத்தை 25-10-1968 அன்று மாண்புமிகு கல்வி-தொழிலமைச்சர் பார்வையிட்டார்.
4. கூட்டுறவு வார நுகர்வோர் நாள் 3-11-1968 அன்று கொண்டாடப்பட்டபோது சென்னை தாடண்டர் நகர் கூட்டுறவு பண்டகசாலையை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் பார்வையிட்டார்.
5. தமிழகத்தின் ஐந்து மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளை அறிந்து வரச் சென்ற பத்திரிகையாளர்களை 8-11-1968 அன்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் வழியனுப்பி வைத்தார்.
6. ஐக்கிய நாடுகள் நாள் சென்னை பாலர் அரங்கில் 21-10-1968 அன்று கொண்டாடப்பட்ட போது, கலைநிகழ்ச்சி நடைபெற்றது.













## மாவட்டப் பரிசு பெற்ற கிராமங்கள்

**வண்டியூர், இராமன்சேரி, கீழவிடயல்.**

1. மாவட்டப் பரிசு பெற்ற செங்கற்பட்டு மாவட்டம் பூண்டி வட்டாரம் இராமன்சேரி ஊராட்சி மன்ற நூல் நிலையம்.
2. இராமன்சேரி ஊராட்சி மன்றத் தலைவரும் உறுப்பினர்களும்.
3. தஞ்சை மாவட்டம் வலங்கைமான் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழவிடயல் ஊராட்சி மன்றத் தலைவரும் உறுப்பினர்களும்.
4. கீழவிடயல் இளம் விவசாயச் சங்கத் தலைவரும் ஆழ்குழாய்க் கிணறும்.
5. கிழக்கு மதுரை வட்டாரத்தைச் சேர்ந்த வண்டியூர் ஊராட்சி மன்றத் தலைவரும் உறுப்பினர்களும்.
6. வலங்கைமான் ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர் திரு எம். பக்கீர்முகமது.



1. தமிழக அரசு பரிசுச் சீட்டு முதல் குலுக்கலில் முதல் பரிசு, இரண்டாம் பரிசு பெற்றவர்களுக்கு மேதகு ஆளுநர் உஜ்ஜல்சிங் 19-10-1968 அன்று ராஜாஜி மண்டபத்தில் பரிசு வழங்கினார். ஆளுநர், அமைச்சர்களுடன் புதிய இலட்சாதிபதிகள்.



2. 11-10-1968 அன்று ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற முதல் குலுக்கலின் போது நடுவர்களிடம் உருளையிலிருந்து எடுக்கப்பட்ட எண் கொடுக்கப்படுகிறது.



3. பாலர் அரங்கில் 11-10-68 அன்று நடைபெற்ற முதல் குலுக்கலின் போது, நடுவர்களிடம் உருளையிலிருந்து எடுக்கப்பட்ட எண் கொடுக்கப்படுகிறது.



4. முதல் குலுக்கலில் இலட்சம் ரூபாய், பத்தாயிரம் ரூபாய் பரிசு பெற்றவர்கள்.




5. பரிசுச் சீட்டு குலுக்கலில் எண்களை குலுக்கி எடுக்கப்படும் உருளைகள்.

# மாவட்டப் பரிசு பெற்ற கிராமங்கள்

[தமிழகத்தில் முதல் பரிசு பெற்ற கழுகுமலைக் கிராமம், இரண்டாவது பரிசு பெற்ற அனந்தலை கிராமம் பற்றிய விவரங்கள், சென்ற இதழ்களில் இடம் பெற்றிருந்தன. அதுமட்டுமின்றி, ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திற்கும் (Development district) ஒரு கிராமம் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன.

வளர்ச்சி மாவட்டப் பரிசு பெற்ற கிராமங்களில், இரண்டு கிராமங்களைப்பற்றிய விவரங்கள் இவ்விதழில் இடம் பெறுகின்றன. மற்றவை, வரும் இதழ்களில் இடம்பெறும். இத்தொடர் அம்சம், மற்ற கிராமங்களையும் ஊராட்சிகளையும் இத்துறையில் மேலும் ஊக்குவிக்கப் பயன்படும் என நம்புகிறோம்.

—ஆசிரியர்]

[படங்கள்: எதிர்ப்பக்கத்தில்]




தஞ்சை மாவட்டம், வலங்கைமான் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவு பெற்று தனிச்சிறப்புடன் விளங்கி வருவது, கீழவிடயல் கிராமம் ஆகும். சுமார் 785 ஏக்கர் நிலப்பரப்பில் ஆண்டுக்கு ரூ. 18,500 வரி வருமானத்துடன் உள்ள இந்தக் கிராமம், தன்னகத்தே விடயல், துறையூர், கருப்பூர் என்ற மூன்று குக்கிராமங்களைக் கொண்டதாகும்.

இன்றைய கீழவிடயல் ஊராட்சி 10 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. அதன் தலைவர் திரு கே. வி. ஜானகிராமன் அவர்கள், 34 வயதுடைய இளைஞர். கிராம முன்னேற்றத்தில் மிகவும் ஆர்வம் உள்ளவர். அவரது சீரிய முயற்சியால் ரூ. 3,000 செலவில் 13 கைப்பம்புகளும், ரூ. 600 செலவில் இரண்டு கிணறுகளும் அமைத்து குடிதண்ணீர் வசதி பெருகியிருக்கிறது. மேலும் ரூ. 25,000 செலவில் ஒரு மேல் நிலைக்குடிநீர் தொட்டி அமைக்கும் திட்டமும் தீர்மானிக்கப்பட்டு, பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தெருக்கள் தோறும் இருளகற்ற ரூ. 3,600 செலவில் 33 குழாய் விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

ஆண்டு தோறும் ரூ. 1,500 செலவில் குடி மராமத்துப் பணி மேற்கொண்டு நீர்ப்பாசன வசதியை இவ்வூராட்சி பெருக்கியுள்ளது.

ரூ. 1,250 செலவில் இரண்டு வானொலிப் பெட்டிகளை வாங்கி மன்றங்கள் அமைத்தும், தினத்தாள் தருவித்தும் சமூகக் கல்வித் திட்டத்தைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

60 குடும்பங்களைக் கொண்ட அரிசன குடியிருப்பு இடத்திற்கு ரூ. 15,000 செலவில் கப்பிச்சாலை அமைத்து அவர்களுக்கு நல்லதொரு சாலை போக்குவரத்தை செய்து தந்துள்ளது.

ரூ. 7,000 க்கு அரசாங்கக் கடன் பத்திரம்

# கவனிக்கவும் - யானை டிரேட் மார்க்

## யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில் இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்

பாக்ட் கம்பெனியாரின் உரத் தயாரிப்புகள்

பாக்டம்பாஸ்
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)

அல்ட்ராபாஸ்
(மிகவும் பொடியாகத் தூளாக்கப்பட்ட மினரல் பாஸ்பேட்)

அமோனியம் ஸல்பேட்

சுபர்பாஸ்பேட்

N.P.K. கலப்பு உரங்கள்

FACT

பாக்ட் ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன் -சீப்ரோடு எழும்பூர் சென்னை

Criterion-FT-2004


வாங்கி அரசுக்கு உதவியுள்ளது. 15 வாய்க்கால்களுக்கு ரூ. 22,500 செலவில் குழாய்கள் பொருத்தி பாலங்கள் கட்டித்தந்திருக்கிறது.

### சிறப்பான பணிகள்

1,363 மக்களடங்கிய இந்த ஊராட்சியின் ஆண்டு வருவாய் ரூ. 3,400 ஆகும். இந்த ஊராட்சியின் தாழ்வான பகுதியில் குடியிருந்து வந்த விடயல் அரிசன மக்களுக்கு நெடுஞ்சாலைக் கருகில் அரிசன நலத்துறையினரால் குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயத்துறையில் தீவிர விவசாயத்தை தவிர அதி தீவிர விவசாயத்தில் முன்னேறி வருகிறதென்பது மாவட்டத்திலேயே சிறப்பான அம்சமாகும்.

விவசாயத்துறையில் அரசின் எந்தப் புதிய திட்டத்தையும் ஒருமுகமாக ஏற்றுநடத்துவது இக்கிராம விவசாயிகளின் தனிச்சிறப்பாகும்.

இக்கிராமத்தில் இளம் விவசாயிகள் சங்கம் திரு அ. ஜெயராமன் என்பவரின் தலைமையில் இயங்கி வருகிறது. இந்தக் கிராமத்தில் நடக்கும் ஒவ்வொரு விவசாய முன்னேற்றமும், திட்டமும் இந்த இளைஞர் விவசாயக் குழுவின் ஆலோசனையின் பேரிலும் ஒத்துழைப்பின் பேரிலும்தான் நடந்து வருகிறது.

### பலரும் பாராட்டிய கிராமம்

அமெரிக்க போர்டு நிலையத்திலிருந்தும் மற்றும் மாநில, மாவட்டங்களிலிருந்து தீவிர விவசாயிகளும், நிபுணர்களும் இக்கிராமத்தைப் பன்முறை பார்வையிட்டு வேலைத்திட்டங்களைப் புகழ்ந்துள்ளனர்.

வலங்கைமான் ஊராட்சி ஒன்றியத்திலே இவ்வருடம் 1968–69-ல் எதிர்பார்க்கப்படும் குறுவை மகசூல் 4,00,000 மூட்டைகளாகும். அதன் மதிப்பு ரூ. 1 கோடிக்கு மேல். கீழவிடய கிராமத்தில் இந்த ஆண்டு 18,000 மூட்டைகள் விளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது. அதன் மதிப்பு ரூ. 4,50,000 க்கு மேல் இருக்கும்.

எலி ஒழிப்பு இயக்கம்சென்ற 1967–68-ல் நடத்தி கிட்டி வைத்தல், வரப்புகளை வெட்டிப் பிடித்தல், உயிர் கொல்லி மருந்து வைத்தல், இரவில் ஒளிவிளக்குகள் மூலம் பிடித்தல் போன்ற முறைகளைக் கையாண்டு 12,030 எலிகள் பிடிக்கப்பட்டு ஒழிக்கப்பட்டன.

நவீன சாகுபடியில் இக்கிராமம் முழுமையும் பயன் பெறத்தக்க வகையில் கிராம விவசாயிகளில் எண்மர் கூட்டாகச் சேர்ந்து ஒரு "பர்கூசன்" டிராக்டரும் தனித் தனி நபராக ஒரு "எஸ்கார்ட்", ஒரு "இன்டர்நேஷனல்" டிராக்டரும் வாங்கி இந்தக் கிராமத்தைத் தவிர சுற்றுப்புறக் கிராமங்களுக்கும் குறைந்த வாடகையில் கொடுத்துதவி பலனடையச் செய்கின்றனர்.

தஞ்சை மாவட்டத்திலேயே முதன்முதலாக ஆடுதுறை-27 சோதனை முயற்சியாக பயிரிடப்பட்ட ஆறு கிராமங்களில் இந்தக் கிராமமும் ஒன்றாகும். நாளாவட்டத்தில் இன்று 5·2 லட்சம் ஏக்கரில் ஆடுதுறை 27 போடுவதற்கு மூல காரணமாய் இருந்தவற்றுள் இந்த கீழவிடயல் கிராமம் தலையாயது என்றால் மிகையாகாது.

மேலும் விவசாயிகளின் தானியங்களைச் சேமித்து வைப்பதற்கு உரவிநியோகம் செய்வதற்கென கிடங்கு ஒன்று கட்ட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.



இந்தக் கிராமம் மிகச் சிறியதானாலும் 300–க்கு அதிகமான குழந்தைகளைக்கொண்ட தனியார் நடுநிலைப் பள்ளி ஒன்று சிறப்பாக இயங்கி வருகிறது.

முதியோருக்கென வலங்கைமான் கிளை நூலகத்திலிருந்து வழங்கு நூலகம் ஒன்றை பள்ளியில் நடத்தி வருகின்றனர்.

இந்தக் கிராமம் உணவு உற்பத்தியைப் பெருக்க அரும்பாடு படுவதோடு 24 தகுதியுடைய தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ததன் மூலம் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தையும் நல்ல முறையில் அமுல் நடத்தி வருகின்றனர்.

இக்கிராம மகளிரும் தங்கள் முன்னேற்றத்தில் சற்றும் குறைந்தவர்களல்லர் என்ற நிலையில் "கண்ணகி" மகளிர் மன்றத்தை நிறுவி சிறப்புற நடத்தி வருகின்றனர். எல்லா உறுப்பினர்களும் அஞ்சலகச் சேமிப்புக் கணக்குகளைத் திறந்து வளரும் மாதச் சேமிப்பு கணக்குகளில் முதலீடு செய்து வருகின்றனர். தவிர தேசிய சேமிப்பு பத்திரங்கள் வாங்கியும் நாட்டுப்பணியில் பங்கு கொண்டுள்ளனர்.

களிலும் போதிய குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது இராமஞ்சேரியில் தாய்சேய் நலவிடுதி ஒன்றும், மகளிர் மன்றம் ஒன்றும், சமூகக் கல்வி நிலையம் ஒன்றும் நூல் நிலையம் ஒன்றும் உள்ளன. இதர மூன்று குக்கிராமங்களுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டு, சிறப்பாக இயங்கி வருகின்றன. தவிர, கிராமக் கைத்தொழிலை வளர்ச்சி செய்யும் வண்ணம் ஒரு சோப்புத் தொழிற்சாலை வெற்றிகரமாக இயங்கி வருகிறது. இங்கு கால்நடைகளுக்கு முதல்சிகிச்சை நிலையம் ஒன்றும் உள்ளது. எனவே, ஒரு கிராமத்திற்குத் தேவையான எல்லாத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை அனைத்தும் கொண்டு இந்த கிராமத்தின் சிறப்பு பற்றி ஊன்றிப் பார்க்குங்கால் இன்றைய அத்தியாவசிய தேவையான உணவு உற்பத்தியில் ஆற்றியுள்ள பணிதான் மகத்தானது என்று சொல்லவேண்டியுள்ளது.

### உணவு உற்பத்தியில் சீரிய பணி

1965–66-ம் ஆண்டில் இராமஞ்சேரி கிராமத்தில் அடங்கிய நிலங்களின் தாராதரத்தையும், மண்வளத்தையும், சோதனைச் செய்ய பல்வேறு மண் மாதிரிகள் 15 எடுத்து சோதனைக்கு அனுப்பப்பட்டது. சோதனையின் மூலம் கிடைத்த தகவல்களின்படி, அந்தந்த மண் மாதிரி எடுத்த நிலையங்களுக்கு அருகாமையில் உள்ள அத்தனை விவசாயிகளும், உரமிடவும், மண்ணைப் பக்குவப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடவும் ஒத்துக்கொண்டனர். அதனால், ஏற்கெனவே கிடைத்து வந்த மகசூலை விட 30 சதவீதம் அதிகமாக பெற்று பல விவசாயிகள் முன்னேறினார்கள். கீழ்க்கண்ட விவசாயிகள் 1965–66-ம் ஆண்டில் அமோக விளைச்சல் திட்டத்தின்கீழ் திட்டமிட்டபடி ஆடுதுறை—27 நெற்பயிரிட்டவர்கள்:—

1. திரு எம். கே. மோகன்
2. திரு சி. அல்லியப்ப ரெட்டி
3. திரு பி. ஆண்டியப்ப ரெட்டி
4. திரு இராஜகோபால் முதலியார்
5. திரு ஜி. ரங்கப்ப நாயுடு
6. திரு வெங்கிடசாமி நாயுடு

சராசரியாக ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 2,250 கிலோ கிராம் மகசூல் கிடைத்தது. இதன் காரணமாக, 1966–67, 1967–68, 1968–69 ஆண்டுகளில் அமோக விளைச்சல் திட்டத்தின்கீழ் ஐ. ஆர்.—8 எச். பி.—1, சி. எச். எஸ்.—1 ஆகிய வகைகள் நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் சாகுபடி செய்யப்பட்டன. மானிய திட்டத்தில், நீர்ப்பாசனக் கிணறுகள் வெட்டுவதற்காக 10 பேர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. மின்சார இறவை இயந்திரங்கள் பொருத்துவதற்காக மூன்று நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாயக் குடும்பங்கள் ஒவ்வொருவருக்கும் போதிய அளவு வருவாய்க் கிடைக்கும் வகையில் ஒவ்வொருவருக்கும் போதிய நிலவசதி உள்ளது. மேலும், இந்தக் கிராமங்களில் மின்சார வசதிகள் உள்ளதால், 50 இறவை இயந்திரங்களுக்குமேல் நீர்ப்பாசனத்திற்கு என்று உபயோகப்பட்டு வருகிறது. கிராமச் சீரணித் தொண்டர்களின் முயற்சியால் மூன்று குக்கிராமங்களிலும் பள்ளிகள் கட்டி வழங்கி உள்ளனர். ஊராட்சி மன்றம் மக்களுக்குச் செய்துதரவேண்டிய எல்லா வசதிகளையும், ஒழுங்காக சீராக செய்து வருகிறது. ஊராட்சி மன்றத்திற்கு நிலையான வருமானம் கிடைக்கும் வகையில், 5 ஏக்கர் பரப்பில் பழத்தோட்டம் அமைக்கப்பட்டு பலன் அளிக்கும் நிலையில் உள்ளது.

பொதுவாக, இக்கிராமம் எல்லா வகைகளிலும் தன்னிறைவு பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




**செங்கை மாவட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இராமஞ்சேரி கிராமம் செங்கல்பட்டு மாவட்டத்தில் 1965–66-ம் ஆண்டின் சிறந்த கிராமமெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.**

இராமஞ்சேரி, திருமழிசை-திருத்தணி நெடுஞ்சாலையில் திருத்தணி தாலூகாவும், திருவள்ளூர் தாலூகாவும் கூடும் இடத்தில் உள்ளது. பூண்டி வட்டாரத்திலேயே மிகப் பெரிய கிராமங்களில் ஒன்று என்று இதைச் சொல்லலாம். இது, 3,814·16 சதுர ஏக்கர் பரப்பைக் கொண்டது. இதன் மக்கள் தொகை 3,588.

### தேவையான திட்டங்கள் அனைத்தும்

இராமஞ்சேரியில் ஓர் உயர் தொடக்கப்பள்ளியும், இதைச் சேர்ந்த சிற்றூர்கள் எல்லப்பநாயுடுபேட்டை, புதூர். வள்ளியம்மா பேட்டை, காந்தி கிராமம் என்ற நான்கு இடங்களில் தொடக்கப்பள்ளிகளும் இருக்கின்றன. கிராமத்தின் தலைமையிடத்திலும், சிற்றூர்

மணப்பாறை நகராட்சி

அருப்புக்கோட்டை நகராட்சி

சங்கரன்கோவில் நகராட்சி

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

திண்டிவனம் நகராட்சி

மதுரை நகராட்சி

## மணப்பாறை நகராட்சி

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்

மணப்பாறை நகராட்சி 1966-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியுடன் முந்தைய மணப்பாறை பேரூராட்சி, கண்ணுடையாம்பட்டி, கலிங்கப்பட்டி, உசிலம்பட்டி ஆகிய ஊராட்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

மணப்பாறை நகராட்சியின் மொத்த பரப்பளவு 21·38 சதுர மைல்களாகும். முன்பு ஊராட்சியால் கவனிக்கப்பட்டு வந்த 7 பள்ளிகள், ஒரு மருந்தகம், ஒரு தாய்-சேய் நல விடுதி, ஒரு சத்திரம், ஒரு மாட்டுச் சந்தை, ஒரு காய்கறிச் சந்தை ஆகியவை தற்போது நகராட்சியின் மேற்பார்வையில் இயங்குகின்றன.

### புதிய குடிநீர் திட்டங்கள்

நகராட்சியிலுள்ள சாலைகளை தூசி படியாத சாலைகளாக அமைக்கத் தகுந்த திட்டங்கள் தீட்டப்பெற்று, தமிழக அரசின் ஆணைக்காக அனுப்பப்பட்டுள்ளன. நகர மக்களுக்குத் தூய, பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கென, 13 திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அதன்வாயிலாகக் குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது.

இவை தவிர, விடத்திலாம்பட்டி, பஞ்சம்பட்டி ஆகிய கிராமங்களுக்கும் ரூ. 10,000 செலவில் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று, நகராட்சியின் நிதி நிலைத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளது. கடந்த ஆண்டில் 9 கிராமங்களுக்கு மின் விளக்கு வசதி செய்து தரப்பெற்றுள்ளது. இது தவிர, மேலும் 6 கிராமங்களுக்கு மின் விளக்குகள் அமைக்க வேண்டிய தொகை நடப்பாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

### சிறப்பான வரவினங்கள்

இந் நகராட்சியின் வரம்பிலுள்ள காய்கறிச் சந்தை, கால்நடைச் சந்தை ஆகிய இரண்டும் ரூ. 1,20,753-க்கு ஏலம் விடப்பட்டுள்ளது. இத்துடன் புதிதாகத் தொடங்கப்பெற்ற நாளங்காடியின் மூலம் ரூ. 4,521 வருவாய் கிடைக்கிறது.



## சங்கரன்கோவில் நகராட்சி

### திருநெல்வேலி மாவட்டம்

1968-ம் ஆண்டு ஜூலை திங்களில் இந்நகராட்சி 13 வீடுகளுக்குப் புதிதாகக் குடிநீர் இணைப்புகள் அளித்திருப்பதுடன் ரூ. 845 செலவில் ஒரு வடிகாலும் அமைத்துள்ளது. இவை தவிர ரூ. 923 செலவிட்டு, அரிஜன மக்கள்வாழ் பகுதிக்கு தார்ச்சாலையும் அமைத்துள்ளது.

## திண்டிவனம் நகராட்சி

### தென் ஆர்க்காடு மாவட்டம்

இம் மாவட்டத்தில் துரிதமாக வளர்ந்துவரும் பல நகரங்களில் திண்டிவனமும் ஒன்றாகும். இந் நகர மக்களுக்குப் பன்னெடுங்காலமாகத் தேவைப்பட்டு வந்த காய்கறி நாளங்காடி ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டு, 1968-ம் ஆண்டு ஜூலை திங்கள் 2-ம் நாள் அன்று, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களால் திறந்துவைக்கப்பெற்றது. இதனால் சாலைகளின் இருமருங்கிலும் பொது மக்களுக்கு இடையூறாக இருந்த கடைகள் அனைத்தும் அங்காடிக்கு உள்ளே கொண்டு வரப்பட்டன.

### வருவாய் தரும் அங்காடி

பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, நகரின் மத்திய இடத்தில் சுமார் ரூ 20,000 செலவில் ஓர் இடத்தை விலைக்கு வாங்கி, அதில் ரூ. 1,01 000 மதிப்பீட்டில் இந்நாளங்காடி கட்டி முடிக்கப்பட்டது. நகராட்சிக்குப் போதுமான நிதி வசதி இல்லாமையால், அரசிடமிருந்து பெற்ற கடனுதவியுடன் கட்டி முடிக்கப்பட்டது.

இதனால் நகராட்சிக்கு சுமார் ரூ 30,000 வரை ஆண்டு வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மதுரை நகராட்சி

மேகநோய்த் தடுப்புத் திட்டம் 1953-ம் ஆண்டு முதல் மதுரை நகரில் செயல்படத் தொடங்கி, அரும் பணியாற்றி வருகிறது. மேகநீர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, மதுரை நகராட்சி மருத்துவமனைக் கட்டிடம் முழுவதுமே இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் வசதிகள் பெருகியுள்ளன.

சென்னை அரசினர் மருத்துவ மனையின் ஆலோசனைகளைத் தழுவி, நவீன முறைப்படி சோதனைகள் அனைத்தும் செய்யப்படுகின்றன. மேகநீர் நோயினால் அவதியுறக்கூடும் என்று சந்தேகப்படக் கூடிய நோயாளிகள் அனைவரும் தீவிரமாக பரிசீலிக்கப்படுகின்றனர். சென்னை மருத்துவமனையில் பின்பற்றப்படும் அட்டவணையின்படியே "பாசிட்டிவ் கேசுகள்" எல்லாம் இலவசமாக முறைப்படி வைத்தியம் செய்யப்படுகின்றன.

குழந்தைகள் பெறாத பெண்களையும், அவர்களுடைய கணவர்களையும் சோதனை செய்து, வைத்தியம் செய்வதற்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. குழந்தைப் பேற்றைப் பெறாத தாய்மார்கள் அனைவரும் இலவச மருத்துவத்திற்கென, மகளிர் மருத்துவ மனைக்கு செல்லுமாறு தூண்டப்படுகின்றனர்.

மருத்துவ நிலையங்களுக்கு தயங்காமல் சென்று, அங்குள்ள வசதிகளைக் கொண்டு முறையான சிகிச்சை பெறுவதற்கு மக்களைத் தூண்டும் முறையில் மேகநீர் தொடர்பான கட்டுரைகள், நகர்மன்ற செய்தித் தாளில் தமிழிலேயே அவ்வப்போது பிரசுரிக்கப்படுகின்றன. மருத்துவ மனைக்கு வருவோருக்கும் மேகநீர் தடுப்பு பற்றிய சிறு நூல்கள் அளிக்கப்படுகின்றன.

இந்நகராட்சியின் அரிய மேற்பார்வையில் நடைபெற்றுவரும் இந்த நிலையங்களில், 1966-ம் ஆண்டில் மட்டும் 14,398 பேர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது. அவற்றில் 534 பேர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.


ஆரோக்கியமான அறுசுவை உணவு

மிட்டாய்கள், பிஸ்கட்டுகள்

குழந்தைகளுக்கு கொடுத்து,

அதன் குதூகலம் கண்டு

ஆனந்தியுங்கள்

தயாரிப்பவர்கள் :

M/s. V. K. SAMY,

CONFECTIONERS AND BISCUIT MANUFACTURERS,

USILAMPATTI.

(MADURAI DISTRICT)

# கோ 25 பயிரிட சில புதிய முறைகள்

புதிய முறைகளைக் கையாண்டு கோ–25 நெல் ரகத்தை பயிரிடுவதனால், மிகு விளைச்சலைப் பெறப் பெரும் வாய்ப்பிருக்கிறது.

இந்த நெல் ரகம் தாளடிப் பயிராக [செப்டம்பர் முதல் பிப்ரவரி வரை] பிசானம் பயிராக [செப்டம்பர் முதல் அக்டோபர் மற்றும் பிப்ரவரி முதல் மார்ச் வரை] மற்றும் சம்பா பயிராக [ஜூலை முதல் ஜனவரிவரை] உழவர்களுக்கு நல்ல விளைச்சலைத் தந்துள்ளது.

### புதிய முறைகள்

நாற்றங்காலிருந்தே புதிய முறைகளை கவனமாக பின்பற்றவேண்டும்.


நாற்றங்காலை செம்மையாக உழுது, ஒன்று அல்லது இரண்டு வண்டி பண்ணை உரம் அல்லது கலவை உரத்தை தொடக்கத்தில் போடுங்கள். பிறகு ஒரு சென்ட் பாத்திகளை [அதாவது 54 அடிக்கு 8 அடி அல்லது 18 மீட்டருக்கு 2–2/3 மீட்டர்] அமைத்துக்கொள்ளுங்கள். ஓர் ஏக்கர் நிலத்தில் கோ–25-ஐ பயிரிட 12 சென்ட் நாற்றங்கால் தேவை. இதில் 18 கிலோ விதைகளைத் தெளிக்க வேண்டும். விதைகளை தெளிப்பதற்கு முன், அவற்றை 'அக்ரசான்–ஜி என்' அல்லது பெரிசான் கொண்டு கலந்து பக்குவப்படுத்த மறக்கவேண்டாம்.

### விதை தெளித்தல்

ஒவ்வொரு பாத்தியிலும் 1½ கிலோ விதைகளைத் தெளித்துவிட வேண்டும். நாற்றங்கால் செழிப்பாக வளரவில்லையென்றால், அவற்றை பறிப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னால் ½ கிலோ அமோனியம் சல்பேட் இடுதல் மிக நன்று; கலசியமும் கூட.

விதைத்த 40 முதல் 45 நாட்களுக்குள் நாற்றங்காலைப் பறித்து, நடவிற்கு முன் பூச்சி மருந்து கலவையில் நாற்றங்காலின் அடிப்பாகத்தை முக்கி எடுக்கவேண்டும்.

நடவிற்கு பல நாட்கள் முன்னரேயே பசுந்தாளை பயிரிட்டு விடுங்கள். நவீன கலப்பை கொண்டு, வயலை இரண்டு முறை நன்கு உழுது, பசுந்தாள் உரம் நன்கு மக்கியவுடன், 25 செ. மீட்டருக்கு 12. 5. செ மீட்டர் [அதாவது 10 அங்குலத்துக்கு 5 அங்குலம்] அளவில் நாற்றுகளை கவனமாக நடுங்கள்.




### உரம் இடுதல்

கடைசியாக வயலை உழுவதற்கு முன்னால், பசுந்தாள் உரம் இடவில்லையெனின், 10 வண்டி பண்ணை உரமிடலாம். அது தவிர, 130 கிலோ சூப்பர்பாஸ்பேட்டுடன், 23 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டாசும் போடவேண்டும். நடவிற்குப்பின் ஆறு அல்லது ஏழு வாரங்கள் கழித்து, 14 கிலோ நைட்ரஜன் கொண்டு மேலுரமும் இடவேண்டும்.

மேற்கண்ட உரங்களுக்கு மாறாக 6–9–6 கலவையில் உள்ள ஸ்டாண்டர்ட் உரக் கலவையையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நடவிற்கு 15 நாட்களுக்குப் பின் களையெடுக்க வேண்டும். இந்த மாதம் இதுபோல வீதம் சில தடவைகள் செய்ய வேண்டும்.

### பூச்சி மருந்து அடித்தல்

நாற்றங்காலைப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பு, ஓர் ஏக்கருக்கு 0–05 சதவீதம் 'பாரதியான்' அல்லது 0.05 சதவீதம் 'எண்ட்ரின்' தெளிக்கத் தவறக்கூடாது. நடவு முடிந்து 15 நாட்களுக்குப் பின், ஓர் ஏக்கருக்கு 0·04 சத வீத 'பாரதியான்' அல்லது 0·04 சதவீதம் 'எண்டிரின்' கலவையை தெளியுங்கள்.

இரண்டாம் முறை மருந்து தெளிக்கையில், பி. எச். சி. 10 சதவீதம் டி.டி.டி. 5 சதவீதம் ஆகிய இரண்டையும் சமமாக கலந்து தூவ வேண்டும்.

180 நாட்களில் பயிர் அறுவடைக்கு தயாராகும்.



# முப்பெரும் மகிழ்ச்சி

செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டங்களிலுள்ள வயற்புறங்களில் இயந்திரக் கலப்பைகளை (டிராக்டர்களை) ஆங்காங்கே காணுவது அன்றாடப் பழக்கத்தில் ஒன்றாகிவிட்டது. வேளாண்மை சிறந்த முறையில் முன்னேறி வருகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த அறிகுறியாகும். உழவர்களில் பெரும்பாலோர் வேளாண்மைக்கு இயந்திரக் கலப்பைகளைப் பயன்படுத்த தலைப்பட்டு விட்டனர்.

சில உழவர்கள், ஊராட்சி ஒன்றியத்திலிருந்து, இயந்திரக் கலப்பைகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்கின்றனர், சிலர் வேளாண்மைத் துறையினர் அளிக்கும் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு, தவணை முறையில் இயந்திரக்கலப்பைகளை பெற்று பயனடைகின்றனர். மேலும் சிலர் விலைக்கே வாங்கிக்கொண்டு விடுகின்றனர்.

சாத்தமங்கலம் கிராமத்தைச் சார்ந்த கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், திரு. பி. உமாபதி அவர்கள் ஓர் இயந்திரக் கலப்பையை தவணை முறையில் பெற்றுக் கொண்டுள்ளார். ஆடுதுறை-27 நெல் ரகத்தைக்கொண்டு, மிகு விளைச்சலை பெற விழைந்த இவருக்கு, முதலில் தோன்றியது இயந்திரக்கலப்பையை வாங்கவேண்டு மென்பதுதான்.

வேளாண்மைத் துறை இயக்குநருக்கு ஒரு விண்ணப்பம் செய்து, ரூ. 20,000-ஐ கடனாகப் பெற்று இயந்திரக் கலப்பையை வாங்கிக் கொண்டார். அதை அவர் ஏழு ஆண்டுத் தவணையில் திருப்பி செலுத்த வேண்டும்.

இந்த கலப்பையைக் கொண்டு 30 ஏக்கர் நிலத்தை நன்முறையில் உழுது, ஆடுதுறை—27 நெல் ரகத்தை பயிரிட்டார். தொழு உரம், ரசாயன உரம், பூச்சி மருந்துகள் போன்றவற்றிற்கு, ஓர் ஏக்கருக்கு ரூ. 350 வீதம் அவருக்கு செலவாயிற்று. அவருக்கு ஓர் ஏக்கருக்கு 3,000 கிலோ மகசூல் கிடைத்தது. எனவே, அவருக்கு கிடைத்த வருவாய் ஓர் ஏக்கருக்கு ரூ 1,350 ஆகும். சாதாரண நெல் ரகத்தைக் கொண்டு அவர் விவசாயம் செய்கையில், அவருக்குக் கிடைத்த மகசூல், ஓர் ஏக்கருக்கு 1,500 கிலோ முதல் 2,000 கிலோ மட்டுமே. மிகு விளைச்சல் தரும் விதைகளை கையாண்டதால் அவருக்கு கிடைத்த அதிக விளைச்சல் 50 முதல் 100 சதவீதம்.

ஆடுதுறை—27-ஐ பயிரிட்டதால் ஒரு மகிழ்ச்சி: இயந்திரக் கலப்பை இருப்பதால் இரட்டிப்பு மகிழ்ச்சி; மேலும் அறுவடை இயந்திரம் வாங்கவிருக்கிறார் இவர் முப்பெரும் மகிழ்ச்சியுடன் இருக்கிறார் திரு. உமாபதி.

# பழத் தோட்டத்தில் ஊடு பயிர்

கோதுமை, காய்கறிகள், கடுகு போன்ற பயிர்களைப் பழத் தோட்டத்தில் ஊடு பயிராக விளைவிக்கலாம். இதற்கு, மரங்களுக்கும் ஊடு பயிருக்கும் களை எடுத்தல், எருவிடுதல் போன்ற வேலை தனித்தனியான சமயங்களிலிருக்கவேண்டும்.

இவ்வூடுபயிர்களை, பழத் தோட்டம் போடும் போதே மரங்களிலிருந்து ஒரு மீட்டருக்குக் குறையாத தூரத்தில் விதைக்கவேண்டுமென்று கருததறிவிக்கப் படுகின்றது.

அடுத்து வரும் ஆண்டுகளில் ஊடு பயிர் சாகுபடி செய்யும் பரப்பளவைக் குறைத்துக் கொண்டே வந்து, மரங்கள் பலன் தரும் பருவத்தில் இதை முற்றிலும் தவிர்த்துவிடவேண்டும்.

# பயனடைந்தோர் பலர்

மகாராஷ்டிரா மாநிலத்தில், நிலமில்லாத உழவர்களின் பிரச்னை கணிசமாக இருக்கிறது. வேளாண்மையையே சார்ந்து வாழும் ஏறத்தாழ 45 லட்சம் உழவர்கள் நிலமில்லாதவர்களாகவே, உழைத்து வருகின்றனர். உணவு முனையில் சுய தேவையை அடைய வேண்டுமென பேரவா கொண்டு மாபெரும் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வரும் இம்மாநிலம், நிலமில்லாத உழவர்களின் பிரச்னைக்கு அரியதொரு முக்கியத்துவம் அளித்து, அதனைத் தீர்க்க முயல்வது வியப்புக்குரியதன்று.

கடந்த காலங்களில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவை ஓர் ஒருங்கிணைந்த முறையில் செயல்படவில்லை. புதிய மகாராஷ்டிர மாநிலம் உருவாகியவுடன், 43 லட்ச விவசாயப் பணியாளர்களுக்கு நிலமளிக்க மாநில அரசு முன் வந்தது, அரசு வசமுள்ள தரிசு நிலங்களை இவர்களுக்கு அளிப்பதற்கென ஒரு முன்னோடித் திட்டம் ஒன்று தீட்டப்பெற்றது. அதன் வாயிலாக 1961-ம் ஆண்டுவரை 3,77,821 ஏக்கர் நிலங்கள் நிலமில்லாதோருக்கு வழங்கப்பட்டன. இதில், 3,23,142 ஏக்கர்கள், 48,562 பேர்களுக்கும், 54,679 ஏக்கர்கள், 1,101 கூட்டுறவு சங்கங்களுக்கும் அளிக்கப்பட்டன.

ரூ. 3·4 கோடி செலவில் 1,22,814 ஏக்கர்களிலே, 18,035 குடும்பங்களுக்கு இதுவரை நிலங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவை தவிர சுமார் 60,000 ஏக்கர் காட்டு நிலங்களும், மாவட்டங்களிலே வினியோகிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்டவாறு அளிக்கப்பட்ட நிலங்கள் பிரச்னையின் ஒரு சிறு துளியையே தீர்த்து வைத்தது. எனவே ஓர் உயர்மட்ட குழுவை அரசு நியமித்து இப்பிரச்னையை ஆராயுமாறு கேட்டுக்கொண்டது. குழுவின் பரிந்துரைகளின்படி, 1,72,000 ஏக்கர் வனப்பகுதி நிலங்கள், வேளாண்மைக்கென ஒதுக்கப்பட்டன.

நிலங்களை ஒதுக்கியதோடு பிரச்னை முடிவுற்றதாகத் தெரியவில்லை. அவற்றை மட்டப்படுத்தி, மரம், செடி கொடிகளைக் களைந்து, பண்படுத்தும் பிரச்னை தலைதூக்கி நின்றது. எனவே நிலத்தை அடைந்தோருக்கு, நிதியுதவி அளிக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டது. எனவே அவர்களுக்கு உதவித் தொகையும், கடனும் அளிக்கப்பட்டன. இவற்றைக்கொண்டு உழுபடைக்கருவிகள், எருதுகள், விதைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். இத்திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் தொடங்கப்பெற்று, இன்றளவும் நிறைவேறி வருகிறது.

இவ்வாறாக குடியேற்றப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கை நிலை, பெரிதும் முன்னேற்றமடைந்துள்ளது. பெரும்பாலோர் கூட்டுறவு விவசாய சங்கங்களை அமைத்துக்கொண்டுள்ளனர். அனைவரும் சேர்ந்து பணியாற்றி, கிடைக்கும் ஆதாயத்தை பகிர்ந்து கொள்கின்றனர். இதனால் அவர்களிடையே தன்னம்பிக்கை பொங்கியெழும் நிலையில் வளர்ந்துள்ளது.

நிலமும் அளித்து, கருவிகள் போன்றவற்றை வாங்கிகொள்ள நிதியுதவியும் கொடுக்கப்பட்ட பின்னர், உணவு உற்பத்தி பெருக்கத்தைபற்றி கூறவும் வேண்டுமா? அகோலா என்ற மாவட்டத்திலுள்ள 1530 ஏக்கர்களில், 187 குடும்பங்கள் மேற்கண்ட பயனைப்பெற்றன. இவர்கள் உற்பத்தி செய்த உணவு பொருள்களின் மதிப்பு ரூ. 1,47,279 ஆகும். தொலைஹாரி என்ற கிராமத்தில் ரூ. 38,000 மதிப்புள்ள உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இன்னும் எத்தனையோ புள்ளி விவரங்களைத் தரலாம்.

ஆங்காங்கே மக்கள் குறைவாக வசிக்கும் கிராமங்களிலுள்ள நிலங்களை சேகரித்து, அவற்றையும் நிலமில்லாதோருக்கு அளிக்கும் திட்டம் ஒன்று பரிசிலனையில் இருக்கிறது. நாசிக், தூலியா, இயவட்மால் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட நில அளவையில், 14,000 ஏக்கர் நிலங்கள் வேளாண்மைக்குக் கிடைக்கும் என்று தெரியவந்துள்ளது.

---

## உருளைக் கிழங்கிற்கு உரமிடுதல்

பாதியளவு யூரியாவும் சூபர்பாஸ்பேட்டும் பயிரின் மேல் தெளித்தால், உருளைக்கிழங்கு அதிக மகசூல் தருகிறது. அண்மையில் புதுடில்லியிலுள்ள விவசாய ஆராய்ச்சிக் கழகம் நடத்திய சோதனையின் மூலம் தெரியவந்தது.

முழு உரத்தையும் நிலத்திலேயே இட்டபோது ஹெக்டேர் ஒன்றில் கிடைத்த வருமானமான ரூ. 117·29, ஒரு பாதி உரத்தை நிலத்திலும், மறுபாதியைப் பயிரிலுமாக இட்டபோது ரூ. 427·94 ஆக அதிகரித்தது.



## கன்றுகளுக்குச் சீம்பால்

பிறந்த கன்றுக்கு இரண்டல்லது மூன்று முறை சீம்பால் (ஈன்றவுடன் மாட்டிற்குச் சுரக்கும் பால்) கொடுக்கவேண்டும்.

சீம்பாலில், பிறகு சுரக்கும் பாலைவிட அதிக புரதம், உப்புக்கள் முதலியனவுடன் வைட்டமின் 'ஏ' யும் நிறைந்திருக்கிறது. பிறந்த சில வாரங்கள் வரையில் கன்றுக்கு வைட்டமின 'ஏ' மிகவும் அத்தியாவசியமானது.

சீம்பாலில் காணும் புரதத்தில் எதிர்ப்பணுக்கள் நிறைந்திருக்கிறது. இது பிறந்த கன்றுகளை அநேக நோயிலிருந்து காக்கிறது.

* * *



## நான்கு மடங்கு—அதிகப் பருத்தி—மகசூல்

மேம்படுத்தப்பட்ட விவசாய முறையைக் கடைப்பிடித்ததன் பயனாக, வறண்ட பிரதேசங்களில் நான்கு மடங்கு அதிகம்—ஹெக்டேர் ஒன்றுக்கு 1,969 கிலோ—உள்ளூர்ப் பருத்தி மகசூல் கிடைத்திருக்கிறதென்று மகாராஷ்டிரத்தின் அமராவதியிலுள்ள, வட்டார ஆராய்ச்சிக் கூடம் அறிவிக்கிறது.

மேம்படுத்தப்பட்ட முறையின் விதிப்படி, விதைப்பதற்கு முன்னர் நிலத்தை மூன்றுமுறை கொத்தி, மூன்றிலிருந்து நான்குமுறை உழுது, குழிக்குக்குழி, வரிசைக்கு வரிசை 60·9. செண்டிமீடர் இடை வெளி விட்டு, அக்ரோஸான் கலக்கப்பட்ட விதை விதைக்கப்பட்டன. மூன்று முறை களையகற்றி, பயிருக்கு 25 வண்டி தொழு உரமும், 45 கிலோ நைட்ரஜனும், 45 கிலோ பாஸ்வர அமிலம், அதே அளவு பொட்டாஷ் ஆகியவையும் இடப்பட்டன.

பயிருக்கு, முறையாக எண்ட்ரின், ப்ளானோபிக்ஸ் ஹார்மோன் ஆகிய பூச்சிக் கொல்லிகளுடன் யூரியாவும் கலந்து தெளிக்கப்பட்டது.

* * *

## பயிர்க் குழிகளில் – செம்மண் கலந்தால்....

பயிர்க் குழிகளில் செம்மண் கலப்பதால் தென்னம் பிள்ளைகள் செழித்து விரைவாக வளருகின்றன. இது, கேரளத்திலுள்ள காஸர்கோடிலுள்ள மத்திய தேங்காய் ஆராய்ச்சி நிலையம் நடத்திய சோதனையின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டது.

செம்மண் மணலை ஒன்றாகக் கட்டுவதன் மூலம் நிலத்தில் ஈரம் தங்கச் செய்கிறது.

புதிதாக நட்ட தென்னம் பிள்ளைக்கு நிழலிட்டு வாரமிருமுறை பாசனம் செய்வது வழக்கம்.

75 செண்டிமீடர் ஆழமுள்ள பயிர்க் குழியில் 30 செண்டிமீடர் ஆழத்திற்கும் 50 செண்டிமீடர் பரவலாகவும் செம்மண்ணை இடவேண்டும்.

* * *

## மாலைக் கண்

இரவில் பார்வையிழப்பதை, வைட்டமின் 'ஏ' நிரம்பிய உணவை நாள்தோறும் உட்கொள்ளுவதால் தடுக்க முடியும்.



இவ்வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் இரவில் மட்டுமல்லாமல் மங்கிய வெளிச்சத்திலும் பார்வையிழக்கின்றனர். இவ் வியாதியுள்ள சில குழந்தைகள் நிரந்தரமாகவே குருடாகி வருகின்றன.

இவ்வியாதி உணவில் வைட்டமின்களின் பற்றாக் குறையினால் உண்டாகிறது.

கீரை வகைகள், பப்பாளி போன்ற மஞ்சள் நிறப் பழங்கள், தக்காளி, காரட் போன்ற மஞ்சள் நிறக் காய்கறிகள், பால், பாலினாலான பண்டங்கள்,



கூடல், இறைச்சி, மீன் ஆகியவை வைட்டமின் 'ஏ' நிரம்பப் பெற்றவை.

• • •

## பாஸ்வரம் இடுவதால் கம்பு மகசூல் அதிகமாகும்



தமிழ் நாட்டிலுள்ள கோயில்பட்டியிலிருக்கும், வட்டார ஆராய்ச்சிக் கழகம் செய்த ஆராய்ச்சியின் விளைவாக, சென்னையில் செய்த பரிசோதனையின் பேரில், கரிசல் நிலத்தில் பாஸ்வரம் இடுவதால், கம்பு அதிக மகசூல் தருகிறதென்று தெரியவருகிறது. கரிசல் மண்ணில் பாஸ்வரச் சத்து மிகவும் குறைவாக இருக்கும்.

முதற் சாகுபடியான அக்டோபர்-நவம்பர் பயிர், மற்றும் கோடைகாலப் பயிர் இரண்டிற்குமே பாஸ்வரம் நன்மை தருகிறது.

தொழு உரம் மட்டும் பெற்ற முதற்சாகுபடியில் ஹெக்டேர் ஒன்றுக்கு 1,150 கிலோ கம்பு மகசூல் கண்டது. அதே பயிர், தொழு உரத்துடன் சூபர் பாஸ்பேடும் பெற்றபோது ஹெக்டேர் ஒன்றுக்கு 1,400 கிலோ வரையில் மகசூலளித்தது. பாசன வசதி பெற்ற கோடைகாலப் பயிர் தொழு உரம் மட்டும் இட்டபோது ஹெக்டேர் ஒன்றுக்கு 3,200 கிலோ மட்டும் மகசூல் கொடுத்தது. தொழு உரத்தின் சூபர்பாஸ்பேட்டும் இட்டதில் ஹெக்டேர் ஒன்றுக்கு 3,970 கிலோவாக அதிகரித்தது.

முதற் சாகுபடிக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 210 கிலோவும் கோடைப்பயிருக்கு 420 கிலோவுமாக சூபர்பாஸ்பேட் இடப்பட்டது. இரண்டு பயிருக்குமே, ஹெக்டேர் ஒன்றுக்கு 12·35 டன் வீதம் தொழு உரம் இடப்பட்டது.

• • •

## அதிக மகசூல் தரும் கோதுமைகள்

உயர் மகசூல் தரும் கோதுமைகளுக்கு ஏற்ற அளவில் பாசனம் செய்வது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் உரிய காலத்தில் பாசனம் செய்யவேண்டியதும் என்று புது டில்லியிலுள்ள இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்திருக்கிறது.

இதன் படிக்கு, விதைத்த பின்னர் சுமார் 20 நாட்களுக்குள் அதாவது முடி வேர் (crown root) விடும் காலம், துணை நாற்றுகள் முளைக்கும் காலம், கதிர் கட்டும், மற்றும் தானியத்தில் பால்பிடிக்கும் காலங்களே ஸொனோரா 64, எஸ் 227 ரகங்களுக்குப் பாசனம் செய்ய ஏற்ற காலங்கள். முடி வேர் விடும் காலத்தில் பாசனம் செய்யாவிட்டால் மகசூல் கணிசமான அளவு குறைந்துவிடும்.

• • •

## தென்னம் பிள்ளை நட....

தென்னம் பிள்ளை நடுவதற்கான குழியின் ஆழம், நிலத்தின் ஆழத்தையும், கோடை, மாரிக் காலங்களில் பூமிக்கடியிலுள்ள தண்ணீர் மட்டத்தையும் பொருத்திருக்கிறது.

கிராமப் படிக்கு, தென்னம் பிள்ளையை, 60—இலிருந்து 90 செண்டிமீட்டர் ஆழத்தில் நட்டால்தான் மரம் நடு வயதை அடையும்போது வேர்ப்பாகம் பூமியில் புதைந்திருக்கும்.



ஆனால், பூமிக்கடியில் தண்ணீர் மட்டம் மேலிட்டிருக்கும் தாழ்ந்த நிலத்தில். தென்னம் பிள்ளைகளை சுமார் 30 செண்டிமீட்டர் ஆழத்திலோ அல்லது இதற்கென்று உயர்த்தப்பட்ட இடங்களிலோ நடவேண்டும். இம் மாதிரித் தோட்டங்களில் ஆண்டுதோறும் மண், மணல், வண்டல் முதலியவைகளை இடுத் தரைமட்டத்தை உயர்த்தலாம்.

• • •

## கன்றுகளுக்கு ஊட்டு மறக்கடித்தல்

பால் பண்ணை வைத்திருப்பவர்கள், விரைவில் சுத்தமான பால் பெறுவதற்காகக் கன்றுகளுக்கு ஊட்டு மறக்கடிக்கிறார்கள். இப்படிச் செய்வதால், ஒருகால் கன்று இறக்க நேரிடினும் கறவை குறையாது.



ஊட்டு மறக்கடிக்கும் கன்றுகளுக்குச் சுத்தமான பாத்திரத்தில் பால் வைக்கவேண்டும். முதலில் பால் புகட்டுபவரின் பாலில் தோய்த்த விரல்களை நக்கத்துவங்கும் கன்று சிறிது சிறிதாகப் பால் பாத்திரத்தை நோக்கிக் குனிந்து முடிவாகப் பாத்திரத்திலுள்ள பாலை நேரிடையாகக் குடிக்கத் துவங்கும். இக் கன்றுகள் விரைவிலேயே, தாளுகவே பாத்திரத்திலிருந்து பால் குடிக்கக் கற்றுக்கொள்ளும்.

• • •

## சிறு பயறில் அதிக மகசூல் காண....

ஹிஸ்ஸாரிலுள்ள பஞ்சாப் விவசாயப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் விளைவாக, சிறுபயற்றில் அதிக மகசூல் காணப் புது வழி வகைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

விதையை ஜூன் மாதக் கடைசியில் விதைப்பதன் மூலமாகவும், வரிசைக்கு வரிசை குறுகிய இடைவெளி விட்டு, விதையின் அளவையும் அதிகப் படுத்தினுல் கணிசமான அளவு கூடுதலான மகசூல் கிடைக்கிறதென்று தெரியவருகிறது.

ஜூன் கடைசியில் விதைக்கப்படும் பயிர், ஜூன் இடையில் ஜூலை இடையில் விதைக்கப்படும் பயிரைக் காட்டிலும் 10 சதவிகிதம் கூடுதலான மகசூல் தருகிறது.

இப் பரிசோதனையில் ஹெக்டேர் ஒன்றுக்கு வழக்கமாக விதைக்கும் 15 கிலோவிற்குப் பதிலாக 20 அல்லது 25 கிலோவும், வரிசைக்கு வரிசை 30 சென்டிமீட்டர் இடைவெளியும் விட்டு விதைத்ததில் நல்ல மகசூல் கிடைத்தது.

• • •

## புது ஆமணக்கு வகை

புது வகை ஆமணக்கு ஒன்றை ஆந்திரப் பிரதேசத்தில் ராஜேந்திர நகரிலுள்ள வட்டார ஆராய்ச்சிக் கழகம் உருவாக்கியிருக்கிறது. குறுகிய காலப் பயிரான இவ் வாமணக்கு, ஹெக்டேர் ஒன்றுக்கு 3,000 மகசூல் கொடுக்கிறது.

இவ் வாமணக்கு ஆந்திரப் பிரதேசத்தில் நடைமுறையில் இருந்துவரும் எம்.சி—6 வகையைவிட 100 நாட்கள் முன்னதாகவும் 9 சதவிகிதம் அதிகப் பலனும் கொடுக்கிறது. இதன் எண்ணெய்ச்சத்து 40 சதவிகிதமாகும்.

பாசனத்திற்கு மழை நீரை எதிர்நோக்கும் நீண்டகால ஆமணக்கு ரகம் அறுவடை செய்ய அதிக காலமாகலாம். கோடையில் வயலில் இருக்கும் பயிர் வெப்பத்தினுல் தாக்கப்பட்டு மகசூல் குறையலாம். ஆனுல், இப் புதுரக ஆமணக்கு 150 நாட்களில் முதிர்ந்து, மாரிக் காலக் கடைசியிலேயே அறுவடைக்குத் தயாராகி விடுவதுல், வெப்பத்தினுல் பாதிக்கப்படுவதில்லை.

பாசன வசதியுள்ள இடங்களில் இப்புதுரக ஆமணக்கை இரு போகம் விளைவிக்கலாம்.

• • •

## கினிப் புல்

குஜராத்திலுள்ள ஆனந்திலிருக்கும் விவசாயப் பயிற்சிக் கூடத்தின் இரண்டு ஆண்டு பரிசோதனையின்படி, கினிப் புல்லை லூசர்னுடன் சேர்த்து வளர்த்தால், அதிக மகசூலும் சிறந்த தீவனமும் கிடைக்கிறது.


கோடையிலும், மாரிக் காலத்திலும் கினிப் புல் மிக விரைவாக வளர்கிறது. குளிர் காலத்தில் இதன் வளர்ச்சி மந்தமாகி விடுகிறது. இக்காலத்தில் லூசர்னை கினிப் புல்லின் இடையே பயிர் செய்யலாம். இதற்கென்று அதிகப்படி இடம் தேவையில்லை.



சோதனையான முதலாண்டு கினிப் புல்லை தனிப் பயிராகப் பயிரிட்டபோது, ஹெக்டேர் ஒன்றுக்கு 4,082 கிலோ மகசூல் கிடைத்தது. லூசர்னுடன் பயிர் செய்தபோது மகசூல் ஹெக்டேர் ஒன்றுக்கு 7,464 கிலோவாக உயர்ந்தது. இரண்டாவதாண்டு, கினிப் புல் தனிப்பயிராக 8,448 கிலோவும், லூசர்னுடன் கலப்புப் பயிராக 12,137 கிலோவுமாக மகசூல் தந்தது.

இப்புல்லில், சத்துப்பொருள்களான புரதம், கொழுப்பு, சுண்ணும்பு ஆகியவைகளும் லூசர்னுடன் கலப்புப் பயிராகப் பயிரிட்டபோது கணிசமான அளவு அதிகரித்துக் காணப்பட்டது.

[மத்திய அரசு உணவு - வேளாண்மைத் துறை அமைச்சகத்தைச் சேர்ந்த பண்ணைச் செய்திப் பிரிவு வெளியீடுகளிலிருந்து எடுக்கப்பட்டவை.]




இந்தியா கிராமங்கள் நிறைந்த ஒரு பெரிய நாடு. நாட்டு முன்னேற்றத்திற்குக் கிராமங்களின் வளர்ச்சி இன்றியமையாத அடிப்படைத் தேவையாகும்.

கிராம முன்னேற்றம் என்பது கிராம மக்களின் சமூக, பொருளாதார, கல்வி முன்னேற்றங்களோடு மட்டும் நிற்பதல்ல. கிராமங்களின் தோற்றத்தைப் பயனுடைய வகையில் அழகுபடுத்துவதும் ஒரு முன்னேற்றமாகும்.

பண்டைக் காலத்தில் கிராமங்கள் மிகச் சிறியனவாயும், மின்சாரம், போக்குவரத்துச் சாலைகள் முதலான வசதிகள் அதிகமில்லாதனவாயும் இருந்தன. இப்போது பெரிய அளவில் ஏற்பட்டுள்ள போக்குவரத்துச் சாலைகளும், வாகன வசதிகளும் கிராமங்களை ஒன்றோடொன்று அதிகமாக இணைத்திருப்பதால், வெவ்வேறு கிராமங்களிலுள்ளவர்கள், அடிக்கடி தொடர்பு கொள்ளும் வசதியும் இயல்பாக ஏற்பட்டிருக்கிறது. எனவே, ஒவ்வொரு கிராமத்தவரும் தத்தம் இடங்களை மற்றையோர் பாராட்டி மதிக்கத்தக்கவகையில், அழகும் சிறப்புமுடையதாகச் செய்வதற்குத் தம்மாலானவற்றை எல்லாம் செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் குடிநீர் வசதி, பள்ளிக்கூடம் முதலிய வசதிகள் எவ்வளவு அவசியமென்று எண்ணுகிறோமோ, அதே போல் நிழல் தரும் மரங்களும், எழில்தரும் சோலைகளும் அவற்றிற்கு அவசியமென்று அறிவுடை மக்கள் பண்டுமுதல் கருதி வந்துள்ளார்கள். அதனாலேயே அரசு, ஆல், வேம்பு, புளி முதலிய மரங்களைக் கிராமப் பொது இடங்களில் ஆங்காங்கு வளர்க்கும் பழக்கத்தை அவர்கள் கொண்டிருந்தார்கள்.

### அறிவுடை மக்கள் கருத்து

ஆல மரத்தையோ, அரச மரத்தையோ பொது உபயோகத்திற்காக நடடு வளர்ப்பது, பெரிய புண்ணியமென்று நம் முன்னோர்கள் கருதினார்கள். நீர்நிலைகளுக்கு அருகிலெல்லாம் அவர்கள் மாமரம், நெல்லிமரம் முதலானவற்றை நட்டு ஊராருக்குப் பயன்படும்படி வளர்த்து விட்டார்கள். வேப்ப மரத்தையும், மருந்துக்குப் பயன்படும் வில்வம் முதலான மற்றும் பல மரங்களையும் கைக்குக் கிடைத்த இடத்தில் நட்டு வைத்தார்கள். இவையெல்லாம் ஊராரின் பொதுச் சொத்துப்போலப் பலருக்கும் பயன்பட்டு வந்தன. இந்த நல்ல பழக்கம் நாளடைவில் கிராம மக்களிடையே மறைந்து மரங்கள் நடுவாரையோ, பேணுவாரையோ கிராமங்களில் அதிகமாகக் காண முடியவில்லை.

### ஊரின் அழகு மரத்தில்......

மாடமாளிகைகள் நகருக்கு அழகு தருவனவாய் இருக்கலாம். ஆனால் கிராமங்களில் மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும் யாரும் கட்டமாட்டார்கள். கிராமங்களுக்கு அழகு தரும் மாடமாளிகை, கூடகோபுரங்களாக விளங்கக்கூடியவை ஆல், அரசு, வேம்பு, மா, அத்தி, நெல்லி போன்ற பயன்தரும் மரங்கள் மட்டுமேயாகும். ஆகவே, கிராம மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இம்மரங்களைக் கிராமங்களில் வளர்க்க முயற்சி எடுத்துக்கொள்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவற்றின் அழகு சிறந்து ஓங்கும்.

வீட்டுத் தோட்டங்கள், கிராமப் பள்ளிகள், கோயில், ஊராட்சி நிலையம், பேருந்து நிலையம், சந்தை முதலான இடங்களிலும், மற்றும் முக்கியமான சாலைகளிலும் புறம்போக்கு நிலங்களிலும், பூங்காக்களிலும், கிராமத்தின் வாயில் போன்றுள்ள நுழைவு எல்லைகளிலும், நீர்நிலைகளின் அருகிலும் மரங்களை வளர்க்கலாம். கிராமத்தை ஒட்டியுள்ள வயல்களுக்குச் செல்லும் ... வழிகளிலும், வயலைச் சுற்றியுள்ள வரப்புகளிலும், நீர்ப்பாசனக் கிணற்றோரங்களிலும் பொருத்தமும் தகுதியும் அறிந்து மலர் மரங்கள், பழ மரங்கள், மற்றும் பலவித மரங்களை நட்டால் அந்தக் கிராமம் கண்ணுக்கு அழகும், கருத்துக்குக் குளிர்ச்சியும் தருவதாக அமையும்.

தனிப்பட்டோர் வீட்டுத் தோட்டங்களில் மா, பலா, எலுமிச்சை, நாரத்தை, கொய்யா, ஆரஞ்சு, பப்பாளி, வாழை முதலான பழ மரங்களை நட்டு வளர்க்கலாம்.

### எத்தனை எத்தனை மரங்கள்?

பள்ளிக்கூடம், கோயில், ஊராட்சி அலுவலகம் முதலியவற்றின் அருகில் வேம்பு, அரசு, நாவல் முதலான நிழல் தரும் மரங்களை வளர்க்கலாம். கிராமத்தருகே தரிசாகக் கிடக்கும் இடங்களிலும், மேய்ச்சல் வெளிகளிலும் விறகுக்கான சவுக்கு, புளி, கருவேல் முதலான மரங்களை நட்டு வளர்க்கலாம். நீர்நிலைகளின் அருகில் நெல்லி, வேம்பு, அரசு, ஆல், அத்தி, பவளமல்லி, கடம்பு முதலான மரங்களைத் தேவைபோல் வளர்க்கலாம். வயலோர வரப்புகளில் பனை, தென்னை முதலான மரங்களையும், கிளிரிசீடியா போன்ற தழை உரச் செடிகளையும் வளர்க்கலாம். நெடுஞ்சாலைகளின் அருகில் தென்னை மர வரிசைகளையும், வேம்பு, புளி, நாவல் முதலான மர வரிசைகளையும் திட்டமிட்டு வளர்த்தால் கிராமங்களின் அழகு சிறக்கும். பாசனக் கால்வாய்களிலும்கூடப் பயனுள்ள பற்பல மரங்களை வளர்க்கலாம்.

### எங்கே எதை நடுவது?

கிராமங்களில் மரம் வளர்ப்பதிலும் ஒரு சில நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். முள்ளுள்ள கருவேல் முதலிய மரங்களைச் சாலைகளிலோ, தெருக்களிலோ நட்டுவிடக் கூடாது. ஒதுக்குப்புறமான தரிசு நிலங்களில்தான் விறகுக்கும், கால்நடைத்தீவனத்திற்குமான அவ்வித மரங்களை நடலாம். நெல்லி முதலான மரங்களை குளம், கிணறு முதலியவற்றின் அருகில் நட்டால் தாகமாக வருபவர்கள் ஒன்றிரண்டு காய்களைப் பறித்துத் தின்று தண்ணீர் குடிப்பார்கள். நிழல் தரும் மரங்களைச் சாலையோரங்களில் வளர்க்கலாம். தெருக்களிலும், பூங்காக்களிலும், கோயிலருகிலும் சரக்கொன்றை, பவளமல்லி முதலான மலர் மரங்களை நடலாம். ஆல மரமும், அரச மரமும் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்க வேண்டிய பயனுடைய மரங்களாகும். விழுதோடிப் பெரிதாக வளர்ந்துள்ள ஆலமரத்தின் அடியில் சிறிய பள்ளிக்கூடங்களைக் கூட நடத்த முடியும். பொதுமக்கள் பொழுது போக்குவதற்கு ஏற்ற நிழல்தரும் கூடமாக அவை விளங்கும். ஆலமரம் பழுத்துக் குலுங்கும்போது அநேக பறவைகள் அங்கு வந்து தங்குமாதலால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அது ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு வகையில் பயன்படும்.

மரங்கள் நிறைந்த ஒரு சிறு கிராமம் பார்ப்பதற்குக் கண்ணுக்கு இனியதாயும், பற்பலருக்கும் பற்பல வகையில் பயன்தருவதாயும், கோடை காலம் முதலிய பருவங்களின் வெம்மையைத் தணிப்பதாயும், பருவ மழையைக் கவர்ந்து இழுப்பதாயும் அமையும். எனவே கிராம முன்னேற்றத்தில் ஆசையும், நம்பிக்கையுமுள்ள இளைஞர் முதல் பெரியவர் வரை ஒவ்வொருவரும் கிராமங்களில் அதிகமாக மரங்களை நட்டு வளர்ப்பதற்கும் தம்மாலான எல்லாவற்றையும் செய்ய முன் வர வேண்டும். 'மரம் நட்டு வளர்த்தால் குடி தழைக்கும்' என்ற நம் முன்னோர்களது நம்பிக்கையை நாம் ஆதரிப்பது அதற்கு நல்ல வழியாகும்.

ஊர்ப்புறங்களின் அழகு, மரங்கள் அடர்ந்து வளர்வதில்தான் உள்ளது என்பதை கிராமத்துப் பெரியவர்கள் சொல்வது பெரும் உண்மையாகும்.

ஊருக்கு அழகு எழில்மிக்கத் தோற்றத்துடன் இருப்பதல்லவா?

---

“பஞ்சாயத்து ராஜ்”, “இன்டென்சிவ் அக்ரிகல்சர்” போன்ற இதழ்களிலிருந்து இடம் பெறுபவை : பக்கங்கள் : 34, 35, 36, 37, 38, 39, 40, 41.

**Articles reproduced from 'Panchayati Raj' "Intensive Agriculture", etc. Pages 34 to 41 (8 pages).**

நாம் கொள்முதல் செய்யும் அளவில் அதிகக் கவனம் செலுத்துகின்ற அதே நேரத்தில், கொள்முதல் செய்யும் நெல்லின் தரத்தைப் பற்றியும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். குறிப்பாகக் குறுவைக் கொள்முதலில் தரப் பரிசோதனை மிக முக்கியமானது. அதிக ஈரமுள்ள நெல்லை நாம் வாங்கி அதை அரைத்து அரிசியாக்கினால், அரிசியின் அளவு குறைவது மட்டுமல்ல; அரிசியின் தரமும் கெடுகின்றது. இப்பிரச்னையின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் தரப்பரிசோதனை செய்வதற்குத் தகுந்த பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கீழ் மட்டத்தில் கொள்முதல் செய்யும் அதிகாரிகளிடமும், தரத்தை காப்பாற்றுவதன் அவசியத்தை நீங்கள் வற்புறுத்திக் கூற வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

### கள்ளக் கடத்தல்—உடன் பிறந்தே கொல்லும் நோய்

அரிசியின் கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்கு இந்த அரசு தீவிரமாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்துள்ளது. பல்வேறு இடங்களில் தணிக்கை சோதனைச் சாலைகள் ஏற்படுத்தியுள்ளோம். அவற்றுக்கு ஆயிரக் கணக்கான அலுவலர்களை நியமித்து, ஏராளமாக தொகையைச் செலவழித்து வருகின்றோம். இருந்த போதிலும், இவை முழுப்பலனைத் தருகின்றனவா என்பது ஐயத்திற்குரியது. இச்சோதனைச் சாவடிகள் ஊழல்களுக்கும், ஒழுங்கீனத்திற்கும் இடம் தராமல் திறமையாக இயங்கச் செய்வது மிகவும் அவசியமாகிறது.

நம் மாநிலத்திற்குள்ளாகவே அரிசி முழுவதும் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்குச் சென்று விட்டால் கூட, அதில் அவ்வளவு அபாயமும் ஆபத்தும் இல்லை. ஆனால் அண்டை மாநிலங்களுக்கு இது சென்றுவிட்டால் நம்முடைய நிலைமை மிகவும் நெருக்கடியாகிவிடும். கேரளத்தில் இப்பொழுது ரேஷன் அளவை பாதியாகக் குறைத்து உள்ளார்கள். இந்த நிலைமையில் கன்னியாகுமரியிலும் மற்ற மாவட்டங்களிலிருந்தும் கேரளத்திற்கு கள்ளத்தனமாக அரிசியை எடுத்துச் செல்ல மும்முரமான முயற்சிகள் செய்யப்படக்கூடுமென அஞ்சுகின்றோம். இதைத் தடுப்பதற்கு நாம் மிகக் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுப்பது அவசியம்.

### கொள்முதல் குறைவின்றி நடக்கவேண்டும்

குறுவையிலே நாம் ஏறக்குறைய 4·23 லட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்யவேண்டுமென்று திட்டமிட்டிருக்கின்றோம். இதில் ஒரு சிறிதும் குறைந்து விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த 4 லட்சம் டன்களிலும் 3 லட்சம் டன் அரிசியை நாம் தஞ்சை மாவட்டத்திலிருந்து எதிர்பார்க்கின்றோம். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பை, அவர் நிரம்பட நிறைவேற்றித் தருவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தஞ்சையில் கொள்முதல் செய்யும் இந்த 3 லட்சம் டன்களில் 2½ லட்சம் டன்கள் மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படும். இதில் ஏறக்குறைய 1·1 லட்சம் டன்கள் ரயிலிலும், எஞ்சிய 1·65 லட்சம் டன்கள் லாரிகளிலும் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும். ரயிலில் எடுத்துச் செல்வதற்காக உணவுத்துறை அதிகாரிகள் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவருடனும், தென்னிந்திய ரயில்வே அதிகாரிகளுடனும் பேசி விரிவான ஏற்பாடுகள் செய்துள்ளனர். அந்த ஏற்பாடுகள் எந்த விதச் சிக்கலும், தாமதமும் எழாத வண்ணம், செயல்பட வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.


### பசி, பட்டினி மீது தொடுக்கும் போர்

லாரிகளைப் பொறுத்த வரையிலே ஏறக்குறைய 1 லட்சம் டன்களை ஒரு சில மாதங்களுக்குள் எடுத்துச் செல்லும் பொறுப்பு மிகப் பெரும் பொறுப்பாகும். தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரு சில லாரிகளை எதிர்பார்த்து, நாம் இதை நிறைவேற்ற முடியாது. ஆகவே அரிசி எந்தெந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றதோ அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறுகிய காலத்திற்குள் தஞ்சையிலிருந்து அரிசியைத் தாமதமின்றி எடுத்துச் செல்வதற்கு தங்கள் மாவட்டங்களிலிருந்தே லாரிகளை ஏற்பாடு செய்து கொள்வது அவசியம். இந்த ஏற்பாடுகளையெல்லாம் ஆங்கிலத்தில் "on war footing" என்று சொல்வதைப் போல, போர் முயற்சிகள் போலவே அவசரமாகவும், திறமையாகவும் செய்ய வேண்டும். பசியின் மீதும், பட்டினியின் மீதும் நாம் தொடுக்கின்ற போர்தான் இது. இந்தப் போரிலே பண்பட்ட முறையில் நீங்கள் வெற்றி காண்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

> உணவுத் துறையில் நாம் காணும் வெற்றிதான், மற்ற எல்லா முன்னேற்றங்களையும் வரையறை செய்யும். இத்துறையில் நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் நிறைவான, நலமான வாழ்க்கை வாழ்வதற்கு இன்றியமையாதவை. இது அரசாங்க சேவை மட்டுமல்ல; உண்மையில் மக்களுக்குச் செய்யும் மகத்தான சேவை என்ற உணர்ச்சிய உங்களுடைய, இப்பணியை வேண்டுமென்று உங்களை அன்புடன் அழைக்கின்றேன்."

—o—






படம் 2

1. அடித்தள மறையாணி
2. மறையாணி பொருத்தப்படும் வெளிக்குழாய்


அதிர்ச்சிக்கோ, நகர்வுக்கோ அல்லது இடப் பெயர்ச்சிக்கோ படாவண்ணம், பம்பின் அடித்தளம் மிகவும் கனமாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும். 'பேஸ் பிளேட்'க்கும் (Base plate) அடித்தள மேல் மட்டத்திற்குமிடையே உள்ள இடத்தைக் கான்கிரீட் கலவையால் நெருக்கமாக நிரப்பி விட்டால், அடித்தளத்தின் எல்லாப் பாகங்களிலும் ஒரே சீரான பளு தொழிற்படும். இதன் மூலம் அதிர்ச்சியைக் குறைக்கலாம்.

அடித்தள மறையாணியை, அடித்தளத்தில் பொருத்துவதற்கு முன்னர், அவ்வாணியின் விட்டத்தை விட 3 அல்லது 4 மடங்கு அதிக விட்டமுள்ள குழாயை வைத்துக் கான்கிரீட் கலவையைப் போட வேண்டும். அடித்தள ஆணியை இங்கு மங்கும் நகர்த்தி பேஸ் பிளேட்டின் துவாரத்தை நுழையுமாறு செய்த பின் குழாயை அகற்றி விட்டு, ஆணியைச் சுற்றிக் கலவையைப் போட்டு நன்கு இறுக்க வேண்டும்.

### பம்பு செட்டை மாட்டுதல்

பம்பு செட்டுகள் செய்த இடத்தில், செய்யப்பட்ட இணைப்பைப் போலவே மாட்டுமிடத்திலும் இணைப்பு இருக்கும் என்பதில் நிச்சயம் இல்லை. ரயிலிலோ லாரியிலோ வைத்துக் கொண்டு வரும் பொழுதோ, தூக்கும் பொழுதோ அல்லது இறக்கும் பொழுதோ இணைப்பில் இடப்பெயர்ச்சி ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் மாட்டும் பொழுது சரியான முறையில் மாட்ட வேண்டும். (படம் 3.)

முதலில் கப்ளிங் மறையாணிகளைக் கழற்ற வேண்டும். அடித்தளத்தின் மேல் பொருத்தப்பட்டிருக்கும் பேஸ் பிளேட்டின் மேல் பம்பையும், மோட்டாரையும் இணைந்த நிலையில் வைக்க வேண்டும். பம்பின் அச்சும் (Shaft) மோட்டாரின் அச்சும் சமதளத்தில் இருக்கும்படி பேஸ் பிளேட்டின் அடியில் (தேவைப்பட்டால்) ஆப்புகளை வைத்துச் சரி செய்ய வேண்டும். பின்னர் இரண்டு அச்சுக்களும், உராய்வின்றியும், தடங்கலின்றியும் சுற்றுகின்றனவா என்று கையால் அவற்றைச் சுற்றிப் பார்க்க வேண்டும். கப்ளிங் ஆணியொன்றைப் போட்டு, பம்பு கப்ளிங்கின் ஒரு பாதியும், மோட்டார் கப்ளிங்கின் ஒரு பாதியும் இணைந்து சுற்றுகின்றனவா என்று கவனிக்க வேண்டும். கப்ளிங்கின் இரு பகுதிகளும்




படம் 3.


1. பிராக்கெட்
2. டயல் கருவி

சமதளத்தில் இருக்கின்றனவா என்று படத்தில் காட்டியுள்ளபடி (படம் 3) டயல் கருவியைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும். சமதளத்தில் இல்லாமல் ஒன்றுக்கொன்று மாறுபட்ட தளத்தில் அல்லது சாய்தளத்தில் இருந்தால், பீலர் கருவி கொண்டு, வித்தியாசத்தைக் கணக்கிட வேண்டும். பீலர் கருவி கிடைக்காவிட்டால் பல கனங்களில் காகிதங்களை உபயோகிக்கலாம். வித்தியாசம் இருந்தால் பேஸ் பிளேட்டை மேலும் கீழும் நகர்த்தி, சரி செய்ய வேண்டும். பின்னர், கப்ளிங்கின் மற்ற மறையாணிகளையும் போட்டு நன்கு இறுக்க வேண்டும். எல்லாம் முடிந்து, கான்கிரீட் கலவையை அடித்தள மறையாணிகளைச் சுற்றிப் போடுமுன்னர் மறையாணிகளைச் சற்று இறுக்க வேண்டும்.

### பேஸ் பிளேடில் 'கான்கிரீட்' கலவையைக் கெட்டித்தல்

பம்புடன் குழாய்களை மாட்டுவதற்கு முன்னர், பேஸ் பிளேட்டுக்கும் அடித்தளத்திற்குமிடையேயுள்ள பாகத்தில் கான்கிரீட் கலவையைப் போட்டு நன்கு கெட்டியாக்கவேண்டும். இவ்வாறு செய்தால் பேஸ் பிளேட் திருகாமலும் பளு அதன் மேல் சீராக எல்லா விடங்களிலும் தொழிற்படுமாறும் செய்கிறது. மேலும் பம்பு ஓடும்போது அதிர்ச்சியைத் தடுக்கிறது. (படம் 4.)

மேற்கண்டவாறு கெட்டிக்க உபயோகப்படும் கலவை 3 பாகம் சிமெண்டையும் 2 பாகம் நல்ல மண்ணையும் தேவையான தண்ணீரையும் கொண்டதாகும். நன்கு எல்லா இடங்களிலும் பாயுகின்ற பதத்தில் கலவை கலக்க வேண்டும். அடித்தளத்திற்கும் பேஸ் பிளேட்டிற்கும், இடையுள்ள பாகம் அனைத்திலும் கலவை நன்கு பாயும்வரை புனல் (Funnel) [படம் 4] வழியாகக் கலவையை ஊற்றவேண்டும். கலவையினிடையே காற்றுப் பைகள் ஏற்படாவண்ணம் கம்பி கொண்டு நன்கு இடைவிடாமல் கெட்டிக்க வேண்டும். கலவை விரைவில் உலர்ந்து கீரல்களுக்கு உட்படாமல் கலவையின் மேற்பரப்பில் சாக்கைப் போட்டு தண்ணீர் தெளிக்க வேண்டும் கலவை நன்கு உறுதி பெற, குறைந்தது 48 மணி




படம் 4.

1. கலவை. 2. புனல்.
3. மரச்சட்டம். 4. அடித்தள மறையாணி.

நேரம் ஆகும். கலவையின் சொரசொரப்பான மேற்பரப்பை சிமிண்ட் பாலின் உதவியால் வழவழப்பாகத் தேய்க்க வேண்டும்.

கெட்டித்த கலவை மிகவும் அதிகமாகக் கடினத்துவம் அடைந்த பிறகு (72 மணி நேரம்) அடித்தள மறையாணிகளை நன்கு இறுக்கி மீண்டும் ஒரு முறை கப்ளிங்கின் இரு பகுதிகளும் சமதளத்தில் இருக்கின்றனவா என்று சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

### கடைசியாகச் சரிபார்த்தல்

பம்பு செட்டுடன் குழாய்கள் அனைத்தையும் இப்பொழுது இணைக்க வேண்டும். பம்பை ஓட்டுவதற்கு முன்னர் மீண்டுமொருமுறை பம்பின் அச்சை, கையால் சுழற்றி முன்போல் டயல் கருவி, பீலர் கருவி அல்லது பல கனங்களில் காகிதம் ஆகியவற்றால் கப்ளிங்கின் சமநிலையைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். மாற்றம் ஏதாவது செய்யவேண்டியது இருந்தால், செய்த பின்னர் பம்பை ஓட்டலாம்.

---

### "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" [24-ம் பக்கத் தொடர்ச்சி]

"இன்று பதக்கம் பெறுகிற இத்தம்பதிகள் பெற்ற மனப்பக்குவம், நமக்கெல்லாம் மகிழ்ச்சியை அளிக்கிறது; கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களின் வாழ்க்கை வளம்பெறுவதற்கு, மத்திய அரசாங்கம் ஒரு திட்டம்வகுக்க வேண்டும்; தொழில் துவக்கப் பண உதவி செய்தால், இத்தகைய கலப்புத் திருமணங்கள் பெருகும்", என மாண்புமிகு உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

மேதகு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் தமிழக அரசாங்கத்தை மிகவும் பாராட்டினார். "இந்து மதத்தினர் சாதிக் கொடுமைகளை எதிர்த்து நடத்திய புரட்சியால் உருவானதே சீக்கியமதம். சாதியை ஒழிக்க குருநானக் அரும்பாடுபட்டார். இருப்பினும், இப்பொழுது சீக்கிய மதத்திலும், கிறிஸ்துவ மதத்திலும் இஸ்லாமிய மதத்திலும், சாதிப் பாகுபாடுகள் தலைதூக்கியுள்ளன. இது வருந்தத்தக்கதாகும்" என்றார் அவர். பதக்கம் பெறும் தம்பதிகளை நீண்ட நாள் வாழ வேண்டுமென்று ஆசீர்வதித்தார் அவர்.

தமிழக அரசு உள்துறை துணைச்செயலாளர் திரு வி. வெங்கடாசலம் அவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்ட ஒவ்வொரு தம்பதிகளையும் பற்றிய சிறு வரலாறு படித்தார். முதலில் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், பிறகு செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் மேடை மீது வரிசையாக வந்து மேதகு ஆளுநர் அவர்களையும் மத்திய அமைச்சர்களையும், ஏனைய அமைச்சர்களையும் வணங்கி, ஆளுநர் அவர்களிடமிருந்து தங்கப் பதக்கம் பெற்றுக் கொண்டனர். ஆளுநர் அவர்கள் பதக்கம் அளித்து ஒவ்வொரு மணமகனையும் கைகுலுக்கி ஆசிர்வதித்தார். குழுமியிருந்த மக்கள் கைகொட்டி ஆரவாரம் செய்தனர்.

அரிசன நலத்துறை இயக்குநர் திரு. சங்கரன் அவர்கள் நன்றி கூறியபின், தேசிய கீதம் பாடப்பட்டுத் திருவிழா நிறைவெய்தியது.



### தமிழகத்தில் லட்சாதிபதிகள் [8-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர்கள் தலைமையில் "கிராம நலம்" உதவி ஆசிரியர் திரு வி. சம்பந்தமும், "கிராம நலம்" திரு எஸ். குமாரராஜாவும் இராஜாஜி மண்டபத்திலும், செய்தித்துறையைச் சார்ந்த திரு டி. கே. டி. துரைராசன் பாலர் அரங்கிலும் தமிழில் அறிவிப்புப் பணியைச் செய்தனர்!

#### சோதனையில் தோல்வி!

இதற்கிடையில், பாலர் அரங்கிற்கு வந்திருந்த பொது மக்களில் ஒருவருக்கு, ஒரு சிறு சந்தேகம் ஏற்பட்டது. 'எல்லா உருளைகளிலும் சரியான எண்கள் இருக்கின்றனவா என்பதைச் சோதித்துப் பார்க்கவேண்டும்" என்று அவர் விரும்பினார். நடுவர்கள் அதற்கு இசைவு தந்தனர். அந்தத் தோழர் மேடை ஏறி, தன் கைப்பட ஒவ்வொரு உருளையாகத் திறந்து, சோதனை செய்தார். முடிவு! அவரது சந்தேகத்துக்குத் தோல்வி!! உருளைகளுக்கு வெற்றி!! இந்த நிகழ்ச்சி, இக்குலுக்கல் முறையை வலிவுபடுத்துவதாக அமைந்தது.

ராஜாஜி மண்டபத்தில் மாலை 4 மணியளவிலும் பாலர் அரங்கத்தில் 7 மணியளவிலும் குலுக்கல் முடிவுற்றது. பரிசு எண்கள் பற்றிய செய்திகள், வானொலியிலும், பத்திரிகைகளிலும், தொலைபேசிகள் மூலமாகவும், தமிழகமெங்கும் பறந்தன. கோவை மாவட்டத்திற்கு மூன்றும், திருச்சிக்கு இரண்டும், மதுரை, நீலகிரி, சென்னை ஆகியவற்றிற்கு முறையே ஒவ்வொன்றுமாக மொத்தம் 8 அதிர்ஷ்டசாலிகள் இக்குலுக்களின் மூலம், லட்சாதிபதி நிலைக்கு உயர்த்தப்பட்டனர்!!

#### பரிசு வழங்கு விழா

பத்திரிகைகளில் லட்சாதிபதி என்று வந்தால் போதுமா? லட்சங்கள் அவர்களிடம் போய்ச் சேர வேண்டாமா? அதுவும், துரிதமாக, காலதாமதமின்றி! பரிசு பெற்றவர்கள், இந்தத் தீபாவளியை (1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் தேதி) இன்பத் தீபாவளியாகக் கொண்டாடவேண்டும் என்று விரும்பினார், அப்பொழுது நிதித்துறையின் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் மாதவன் அவர்கள். எனவே 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் தேதி அன்று, பரிசு வழங்கு விழா ஏற்படுத்தி அவ்விழாவில், முதலாவது (லட்ச ரூபாய்) இரண்டாவது (பத்தாயிரம் ரூபாய்) பரிசுகளை வழங்குவது என முடிவாயிற்று.

மாவட்டங்களுக்குத் தந்திகள் பறந்தன. 18-ம் தேதியும், 19-ம் தேதியுமாக பரிசு பெறுபவர்கள், சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள். இரண்டாவது பரிசு பெற்ற நண்பர் ஒருவர் மதுரையிலிருந்து விமானத்தில் பறந்தே வந்தார். கடைசி நேரத்திலாவது பரிசு விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் ஓர் ஏழைத்தாய் (இப்போது பத்தாயிரத்திற்கு அதிபதி) கைக்குழந்தையுடன் வந்து கலந்துகொண்டார்.

பலரிடம் ஏழ்மை தெரிந்தது. ஆனால், பெருந்தொகையைப் பரிசு பெறப்போகிறோம் என்ற பூரிப்பு, அந்த ஏழ்மையைச் சுக்குநூறாகச் சிதறடித்துவிட்டது.

* * * * *

1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் தேதி மாலை 5 மணி. மறுபடியும், ராஜாஜி மண்டபத்தில் விழாக் கோலம். மேடையில்நடு நாயகமாக, மேதகு தமிழக ஆளுநர் வீற்றிருக்கிறார். அவரது இருமருங்கிலும் மாண்புமிகு அமைச்சர்கள், திரு நெடுஞ்செழியன், திரு கோவிந்தசாமி, திரு மாதவன் ஆகியோர் அமர்ந்திருக்கிறார்கள். மண்டபத்தில் பார்வையாளர்கள் நிரம்பி வழிகிறார்கள். செய்திப் படப்பிடிப்பாளர்கள், புகைப்படக்காரர்கள் தங்கள் காமிராக்களுக்கு நல்ல வேட்டை என்று காத்திருக்கின்றார்கள். இத்துணை சூழ்நிலைக்குமிடையில், தங்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடங்களில், மன்னரிடம் பொற்கிழியைப் பெற ஆவலோடு காத்திருக்கும் மக்கள்போல், வீற்றிருக்கின்றனர், பரிசுப் பெற வந்திருந்த அதிர்ஷ்டசாலிகள்.

மாண்புமிகு அமைச்சர் திரு செ. மாதவன் அனைவரையும் வரவேற்றார். "மாநில அரசு பரிசுச்சீட்டு நடத்த அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறது. இதில் சிக்கல் எதுவும் கிடையாது. இத்திட்டத்தின்கீழ் பரிசு பெற்றவர்கள் எந்த வழியில் அந்தப் பணத்தைச் செலவிடலாம் என்பது பற்றி, அரசு ஒரு திட்டம் வகுத்து வருகிறது. அவர்கள் விரும்புகிறபடி விவசாயத் துறையிலோ அல்லது தொழில் துறையிலோ இப்பணத்தை முதலீடு செய்ய அரசு வழிவகுத்துக் கொடுக்கும்" என்று அவர் தெளிவுபடுத்தினார்.

மாண்புமிகு அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது தலைமையுரையில், "பரிசு பெற்றவர்கள் மகிழ்வுடன் அமர்ந்திருக்கிறார்கள்! பரிசு பெறாதவர்கள் சோகமாக இருக்காமல், இந்த முறை போனால், அடுத்த முறை என்று ஊக்கத்துடன் இருக்கிறார்கள். இங்கு நானும் பரிசு பெறத்தான் வந்திருக்கிறேன். அவர்கள் பெறுவது ஒரு லட்சம் என்றால், நான் பெறுவதோ சுமார் 50 லட்சம். அதாவது, இந்த குலுக்கலின்மூலம், செலவு போக, தமிழக அரசுக்கு கிடைப்பது ஏறக்குறைய 50 லட்சம் ரூபாய்" என்று பலத்த கைதட்டல்களுக்கிடையே அவர் தெரிவித்தார்.

"இப்போது 8 பேர்கள் லட்சாதிபதி பட்டம் பெறுகிறார்கள். இதேபோல் இனி, மாதந்தோறும் லட்சாதிபதிகளை உருவாக்குவோம்!" என்றும் அவர் குறிப்பிட்டார். அதன்பின் மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள், "பரிசு பெற்றவர்கள், பணத்தை அனாவசியமாகச் செலவு செய்துவிடக் கூடாது. சேமித்து வைக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் திரு மாதவன் கூறியபடி, இத்தொகையைக் கொண்டு, அவர்கள் சிறுதொழில் செய்வதற்கோ, வாணிபம் செய்வதற்கோ, அரசு அவர்களுக்கு ஆலோசனை கூறி, உதவவேண்டும்" என்று கேட்டுக்கொண்டு, பரிசுத் தொகையை அன்புடன் வழங்கினார்.

பரிசு பெற்றவர்களில் பலரும் அவ்விதம் தொழிலில் முதலீடு செய்யவும் விவசாயத்தில் ஈடுபடவும் ஆர்வமுள்ளவர்களாகவே தென்பட்டார்கள். "எனது குடும்பம் விவசாயக் குடும்பம்! எனவே, இப்பணத்தைக்கொண்டு நிலம் வாங்கி பெரிய அளவில் விவசாயம் செய்வேன்" என்று தெரிவித்தார் லட்சாதிபதி கருப்பையா. "நான் ஏழை. அன்றாட சாப்பாட்டிற்கே வழியில்லாமல் எங்கள் குடும்பம் தவித்தது. கடவுளே, தமிழக அரசு உருவில் வந்து, இப்பரிசை எனக்கு வழங்கி இருக்கிறார்" என்று உணர்ச்சி பொங்க கூறினார் பெயிண்டர் எட்வர்ட்.

சென்னையைச் சேர்ந்த திரு கண்ணுதல், "இப்பணத்தை முதலில் பாங்கில் போடுவேன், பிறகு தொழில் அபிவிருத்திக்குப் பயன்படுத்துவேன்" என்றார் அதோடு, சென்னை சாந்தோமில் அவர் படித்த பள்ளிக்கு, ஆயிரம் ரூபாய் நன்கொடை தந்து, பாராட்டுதலையும் பெற்றிருக்கிறார் அவர்.

* * * * *

**அமெரிக்காவில் இருந்து நமது முதல்வரின் மனமகிழ்ச்சி!**

தான் தோற்றுவித்த பரிசுத் திட்டத்தில் பல ஏழைகள் முதல் பரிசு பெற்ற செய்தியைக் கேட்ட போது, அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் மகிழ்ச்சியால் திளைத்தார். மனம் பூரித்து, அவர் கூறியதாவது :—

**" இந்தத் திட்டம், மேலும் நல்ல வெற்றி பெறும். தமிழ்நாடும், மக்களும் சிறந்த பயனை அடைவார்கள் ".**

ஆம்! அவர் ஆசை இன்று நிறைவேறி வருகிறது. மாதம் 4 தொடர்கள் என்ற நிலை, இன்று மாதம் 10-க்கும் மேற்பட்ட தொடர்கள் விற்குமளவுக்கு அதாவது மாதம் 10-க்கும் மேற்பட்ட லட்சாதிபதிகளைத் தோற்றுவிக்குமளவுக்கு—மக்களிடத்தே, இந்தத் திட்டத்திற்கு மாபெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. ஏழைகளின் வாழ்வு உயர, ஏணிபோல் அமைந்த இத்திட்டம் மேலும் உயர்வது உறுதி!

பொதிகை மலையின் புகழேபோல், தமிழகத்தின் இச்சிறப்புத் திட்டம் மேலும் வளர்ந்தோங்குக!!

---

**உணவுத் துறையில் காணும் வெற்றிதான் எல்லா வெற்றிக்கும் அடிப்படை.** [5-ம் பக்கத் தொடர்ச்சி]

வடகிழக்குப் பருவ மழை நன்றாகவே இருக்கும் என்று எண்ணலாம். ஏற்கெனவே பல இடங்களிலும் நல்ல மழை பெய்துள்ளது. இந்த மழையின் உதவியால் புஞ்சை நிலங்களில் வீரிய ஒட்டுக் கம்பு, கேழ்வரகு, எள்ளு, கொள்ளு, தனியா போன்ற பயிர்களைச் சாகுபடி செய்யலாம். நஞ்சை நிலங்களில் அமோக விளைச்சல் தரக்கூடிய குறுகிய கால சம்பா ரகங்களான கோ–29 கோ–32, ஏ. எஸ். டி. 5 போன்ற ரகங்களைச் சாகுபடி செய்யலாம். அடுத்துவரும் நவரைப் பட்டத்தில்தான் நமது கவனத்தைத் தீவிரமாகச் செலுத்த வேண்டும். இந்தப் பட்டத்தில் அமோக விளைச்சல் ரகங்களான ஆடுதுறை–27, ஐ. ஆர். 8, கோ–29 போன்ற ரகங்களை மிக அதிகப் பரப்பளவில் பயிரிட எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்காகத் தேவைப்படும் உரம், பூச்சி மருந்து முதலியவைகளையும் போதுமான அளவு ஆங்காங்கு சேமித்து வைத்துக்கொள்ளவேண்டும். விமானம் மூலம் மருந்து தெளிக்கும் பணியையும் தக்க இடங்களில் மேற்கொள்ளலாம்.

வீரிய ஒட்டுக்கம்பு, சோளம், மக்காச் சோளம் அமோக விளைச்சல் தரும் கோ–7 (கோ-8) ராகி இவைகளையும் அதிகப் பரப்பளவில் பயிரிட எல்லா உழவர்களுக்கும் வசதி செய்துதரப்படவேண்டும். இந்த ஆண்டு மணிலா சாகுபடிப் பரப்பு மிகவும் குறைந்துள்ளபடியால், பாசனப் பயிராக அதிக அளவு பயிரிட முயற்சிகள் செய்யப்படவேண்டும். நிலத்தின் வளத்தைப் பெருக்கத் தீவிரமாக பசுந்தாள் உற்பத்தித் திட்டத்தைச் செயலாக்க வேண்டும். உங்கள் மாவட்டங்களிலுள்ள வசதிகள் எல்லாவற்றையும் கருத்திற்கொண்டு, விவசாய உற்பத்திக்கு நீங்கள் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

---

## கிராம நலம்

**சந்தா விவரம் :**

**ஆண்டு சந்தா 2 ரூபாய்.**

**ஓர் ஆண்டுக்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது.**

**தனிப்பிரதி விற்பனைக்குக் கிடையாது.**

**சந்தா செலுத்துவோர் கவனிக்க:**

சந்தாத் தொகையை மேலே கொடுத்துள்ள முகவரிக்குத்தான் அனுப்ப வேண்டும். வேறு எந்த முகவரிக்காவது அனுப்பினால், பெற்றுக்கொள்ள இயலாது.


சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :
மக்கள் தொடர்பு அதிகாரி,
கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.





# நீர் உயர நெல் உயரும்

எம்.எஸ்எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இன்றியமையாதது தரமான வார்ப்பு இரும்பும் எஃகும் கொண்டு தொழில் நுணுக்கக் கட்டுப்பாட்டோடு அமைக்கப்பட்டது. எம்.எஸ் எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள், ஒரே சீரான நிலையில், தட்டுப்பாடின்றி நீண்ட நேரம் நீரை இறைக்க வல்லது. நேர்முக இணைப்புக் கொண்ட பம்ப் செட்டுகள் மட்டுமின்றி, தனி இணைப்புக்கான சக்கரங்களைக் கொண்ட பம்ப் செட்டுகளும் கிடைக்கும். எம். எஸ். எஸ். ஐ. ஸி. யின் உற்பத்திகளைப் பெற்று பயன் பெறுங்கள்.

M S S I C
PUMPSET



பழுதடைந்த விவசாய கருவிகளை செப்பனிட, உங்களுக்கு அருகாமையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் பட்டறைகளை அணுகுங்கள். மிகுந்த உத்தரவாதத்துடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும்.



M S S I C
DUSTER

எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் டஸ்டர், மனித சக்தியைக் கொண்டு எளிய முறையில் இயக்கக்கூடியது. இது, இடைவிடாது பூச்சிக் கொல்லியை பனி படலம்போல் தூவி, விவசாயிகளுக்கு எதிரியான புழு பூச்சிகளை அழித்து வேளாண்மையை விருத்திச் செய்ய உதவுகிறது. இது, ஒரே நேரத்தில் 25 சதுர அடிக்கு பூச்சிக் கொல்லியை தூவும் சக்தி வாய்ந்தது. இதன் கொள் அளவு 300 கன அங்குலம், எடை 5 கிலோ. பித்தளை மற்றும் அலுமினியம் ஆகிய உலோகங்களில் கிடைக்கும். இதர எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி, யின் விவசாயக் கருவிகள் நீடித்த உழைப்பும் நிகரற்ற உறுதியும் கொண்டவை.

MADRAS STATE SMALL INDUSTRIES CORPORATION LTD.

விவரங்களுக்கு அணுகவும்
நிருவாக இயகுனர்
**தமிழக அரசு சிறு தொழில் நிறுவனம்**
35/2, உட்ஸ் ரோடு.
சென்னை-2.

*With the best compliments of*

**REICHHOLD CHEMICALS INDIA LIMITED**

Post Bag No. 3

KANNABIRAN KOIL STREET, MADHAVARAM, MADRAS-60

*Tele*: 65551, 65552 & 65553 *Grams*: ' Beckacite '

*Manufacturers of the following synthetic resins* :

**Abrasives:** VARCUM Phenolic Resins

**Foundry:** FOUNDREZ Phenolic Resins for Shell moulds and cores

**Reinforced Plastics and Laminates:** POLYLITE Polyester Resins

**Paints and Printing Inks:** BECKOSOL alkyd Resins, STYRESOL styrenated alkyd Resins, BECKACITE hard resins, BECKAMINE urea-formaldehyde Resins and SUPER-BECKAMINE melamine-formaldehyde Resins

**Plywood, Particle Board and Furniture:** PLYAMINE and FORAMINE urea-formaldehyde Resins PLYOPHEN Phenolic Adhesives for Plywoods

PHONE { Office : 284 & 884, Residence : 871 GRAMS { "COOPSPIN" TIRUNELVELI

**THE SOUTH INDIA CO-OPERATIVE SPINNING MILLS LIMITED**

No. X-295

**TIRUNELVELI-4 (Madras State)**

"A" MILL : 17,600 SPINDLES
20s, 26s, 36s and 40s

"B" MILL : 12,096 SPINDLES
60s Indian Carded and Combed
60s, 80s, 100s and 120s
Foreign Sombed

SPINNERS OF HIGHEST QUALITY
INDIAN AND FOREIGN COTTON YARN COMMANDING
GOOD REPUTATION OF LONG STANDING.

**M. SOOSA**
*General Manager.*

**M. P. NACHIMUTHU**
*Chairman.*

கிராமநலம் பகுதி-2
GRAMANALAM PART-2

# ஊராட்சி அரசிதழ்

# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சித் திட்டங்கள்பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

---

## ஊராட்சி வானொலிப் பராமரிப்பு நிறுவனம்—ஊராட்சிகளுக்கான வானொலிப் பெட்டிகள்—அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை.

## Panchayat Radio Maintenance Organisation—Radio receivers for installation in Panchayats—Approval of sets—Revised Orders—Issued.

ஊராட்சிகளுக்குத் தகுந்த வானொலிப் பெட்டிகள், 'ரெகார்டு பிளேயர்'களின் [Record player] ரகம், இனம் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்குவதற்கென அரசால் ஏற்படுத்தப்பட்ட குழுவானது தற்போது கிடைக்கும் வானொலிப் பெட்டிகளின் நிலையை ஆலோசனை செய்து, ஓர் அறிக்கையை அரசிற்கு சமர்ப்பித்துள்ளது.

2. குழுவின் அறிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு, இவ்வாணையின் இணைப்பில் உள்ள வானொலிப் பெட்டிகளை குறிப்பிடப்பட்டுள்ள விலையில், ஊராட்சிகளில் அமைத்துக்கொள்வதற்கு அரசு அனுமதி வழங்குகிறது. இப் பட்டியல் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட வானொலிப் பெட்டிப் பட்டியல் அனைத்தையும் ரத்து செய்து விடுகிறது.

### இணைப்பு

| வரிசை எண். (1) | விநியோகிப்பவர். (2) | தயாரிப்பு மாடல். (Make and model.) (3) | ரகம் (Type). (4) | அருகிலுள்ள வானொலி மேற்பார்வையாளரின் அலுவலகத்தில் கொண்டு தருவதற்கான விலை. (5) | உறுதிப்பாடு. (Terms of guarantee) (6) |
|---|---|---|---|---|---|
| 1 | பிலிப்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை | பிலிப்ஸ் வாலியண்ட் 15RB 487 | ஏ. சி. | ரூ. 498 நிகரம். எல்லா வரிகளும் சேர்த்து | வால்வுகள், டயலில் உள்ள விளக்கு 3 மாதம் ; எஞ்சியவை 6 மாதங்கள். |
| 2 | பிலிப்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை | பிலிப்ஸ் வாலியண்ட் 15RC 489 | டிரான்சிஸ்டர் 9 வால்ட், டி.சி. | ரூ, 424 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து. (மின்கலம் இல்லாமல்.) | டிரான்சிஸ்டர். டயல் பல்பு 3 மாதம்—எஞ்சியவை 6 மாதங்கள். |
| 3 | முஹமது இபுருஹீம் அண்டு கோ[பி] லிமிடெட், சென்னை | மர்பி TAO776 | ஏ. சி. | ரூ. 449 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து (ரூ. 449·00) | வால்வுகள் டிரான்ஸிஸ்டர்கள் டயல் பல்புகள் 3 மாதம்; எஞ்சியவை ஓர் ஆண்டு. |
| 4 | ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி ஆஃப் இந்தியா [பி] லிமிடெட், சென்னை | GEC BC 5458 | ,, | ரூ. 412·96 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து | வால்வுகள், டிரான்ஸிஸ்டர்கள் 3 மாதம் ; எஞ்சியவை ஓர் ஆண்டு. |
| 5 | ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி ஆஃப் இந்தியா [பி] லிமிடெட், சென்னை | GEC BC 5358 | ,, | ரூ. 456·92 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து | ,, |

| வரிசை எண். (1) | விநியோகிப்பவர். (2) | தயாரிப்பு மாடல். (Make and model) (3) | ரகம் (Type). (4) | அருகிலுள்ள வானொலி மேற்பார்வையாளரின் அலுவலகத்தில் கொண்டு தருவதற்கான விலை. (5) | உறுதிப்பாடு. (Terms of guarant[ee]) (6) |
|---|---|---|---|---|---|
| 6 | ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி ஆஃப் இந்தியா [பி] லிமிடெட், சென்னை | GEC BC 823 | டிரான்சிஸ்டர் 9 வால்ட், டி.சி. | ரூ. 412·96 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து. (மின்கலம் இன்றி) | வால்வுகள், டிரான்சிஸ்டர்கள் 3 மாதம்; எஞ்சியவை ஓர் ஆண்டு. |
| 7 | ரீஸா கம்பெனி, மவுண்ட் சாலை, சென்னை | ரீஸா BS 67 | ஏ. சி. | ரூ. 455·80 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து | ,, |
| 8 | ரீஸா கம்பெனி, மவுண்ட் சாலை, சென்னை | ரீஸா TR 67 | டிரான்சிஸ்டர், 9 வால்ட், டி.சி. | ரூ. 455·80 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து. (மின்கலம் இன்றி) | ,, |
| 9 | ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸ் லிமிடெட், மவுண்ட் சாலை, சென்னை | நேஷனல் எக்கோ A 1514 | ஏ. சி. | ரூ. 435·00 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து | ,, |
| 10 | ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸ் லிமிடெட், மவுண்ட் சாலை, சென்னை | நேஷனல் எக்கோ BT 1506 | டிரான்சிஸ்டர். 9 வால்ட், டி.சி. | ரூ. 361·00 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து. (மின்கலம் இன்றி) | ,, |
| 11 | ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸ் லிமிடெட், மவுண்ட் சாலை, சென்னை | PYE 3040 | ஏ. சி. | ரூ. 435 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து | |
| 12 | ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸ் லிமிடெட், மவுண்ட் சாலை, சென்னை | PYE 3221 | டிரான்சிஸ்டர், 9 வால்ட், டி.சி. | ரூ. 361 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து | ,, |
| 13 | மதராஸ் ஏஜென்சீஸ், ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, சென்னை | எம்பயர் ER 5A [மெலடி] | ஏ. சி. | ரூ. 350 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து | ,, |
| 14 | மதராஸ் ஏஜென்சீஸ், ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, சென்னை | எம்பயர் நடராஜ் | ,, | ரூ. 540 நிகரம், வரிகள் அனைத்தும் சேர்த்து | ,, |
| 15 | மதராஸ் ஏஜென்சீஸ், ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, சென்னை | எம்பயர் கமல் | டிரான்சிஸ்டர், 9 வால்ட், டி.சி. | ரூ. 360 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து. (மின்கலம் இன்றி) | ,, |
| 16 | பாயல் எலக்டிரானிக்ஸ் ரிச்சி தெரு, சென்னை-2 | ஜெகோ: மேக்தூத் | ஏ. சி. | ரூ. 415 நிகரம். விற்பனை வரி தவிர. | ,, |
| 17 | யு.எம்.எஸ். ரேடியோ தொழிற்சாலை, கோயம்புத்தூர் | யு.எம்.எஸ். எலக்ட்ரோ 5040 | ,, | ரூ. 508·11 வரிகள் அனைத்தும் சேர்த்து | ,, |
| 18 | யு.எம்.எஸ். ரேடியோ தொழிற்சாலை, கோயம்புத்தூர் | யு.எம்.எஸ். எலக்ட்ரோ 3040 | ,, | ரூ. 422·80 நிகரம். வரிகள் அனைத்தும் சேர்த்து | ,, |
| 19 | மைசூர் சேல்ஸ் இன்டர் நேஷனல் லிமிடெட், மவுண்ட் சாலை, சென்னை-2 | ரெம்கோ ஆர். வி. 6425 | ,, | ரூ. 375·00 விற்பனை வரி தனி | ,, |
| 20 | மைசூர் சேல்ஸ் இன்டர் நேஷனல் லிமிடெட், மவுண்ட் சாலை. சென்னை-2 | ரெம்கோ ஆர். வி. 6415 | ,, | ரூ. 299 விற்பனை வரி தனி | ,, |

[கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 3—10—1968 நாளிட்ட அரசு ஆணை எண். 2520-ன் சுருக்கம்.




## முன்னாள் இராணுவத்தினர் நலன்—முன்னாள் இராணுவத்தினரின் மனைவியர், கைம்பெண்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டங்கள்.

## Welfare of Ex-servicemen—Scheme for training the wives and widows of Ex-servicemen.

முன்னாள் இராணுவத்தினரின் சீரமைப்பு, மறுவாழ்வுச் சிறப்பு நிதியிலிருந்து (Special Fund for Reconstruction and Rehabilitation of Ex-servicemen) கிடைக்கக்கூடிய பயிற்சி வசதிகளும், உபகாரச் சம்பளம்பற்றிய விவரங்களும் வருமாறு :—

| திட்டம். (1) | விவரம். (2) | கிடைக்கக்கூடிய உதவித் தொகை. (3) | ரூ. |
|---|---|---|---|
| 1. முன்னாள் இராணுவத்தினரின் கைம்பெண்கள், கைவிடப்பட்ட மனைவிகள் (ஒவ்வொரு பயிற்சிக்கும 10 பேர்கள்). | வீட்டுக் காரியங்களை நடத்தும் பொறுப்பு, விற்பனையாளர், உணவு அளித்தல் தாதிப் பணிக்குரிய பயிற்சி மற்றும் வரவேற்பாளர் ஆகியவற்றில் சென்னையிலுள்ள கில்ட் ஆஃப் சர்வீஸ் (சேவா சமாஜத்தில்) பயிற்சி பெறுதல். | மாதத்திற்கு ரூ. 60 வீதம் 12 மாதங்களுக்கு .. | 720 |
| | | உதவிச் சம்பளம், படுக்கை ஆடைகளைச் சேர்த்து கருவிகளுக்கு .. | 150 |
| | | மாதத்திற்கு ரூ. 5 வீதம் கைச் செலவிற்கு .. | 60 |
| | | மாதத்திற்கு ரூ. 10 வீதம் போக்குவரத்துச் செலவு .. | 150 |
| | | ஒருவருச்கு கிடைக்கக்கூடிய உதவித்தொகை—மொத்தம் .. | 1,050 |
| 2. முன்னாள் இராணுவத்தினரின் கைம்பெண்கள் கைவிடப்பட்ட மனைவிகள் (ஒவ்வொரு பயிற்சிக்கும் 10 போகள). | தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கர் துறையில் செயலாண்மைத் தொடர்பான (Secretarial Course) | உதவிச் சம்பளம் .. ரூ .. | 160 |
| | | கருவிகள், நூல்கள் முதலியன .. | 45 |
| | பயிற்சியை, சென்னையிலுள்ள கில்ட் ஆஃப் சர்வீஸ் [சேவை சமாஜத்தில்] பயிற்சி பெறுதல். | போக்குவரத்து செலவிற்கு மாதம் ரூ. 25 வீதம் .. | 300 |
| | | கைச்செலவிற்கு மாதம் ரூ. 5 வீதம் .. | 60 |
| | | ஒருவருக்கு கிடைக்கக்கூடிய உதவிததொகை—மொததம் .. | 565 |
| 3. முன்னாள் இராணுவத்தினரின் கைம்பெண்கள், மனைவிகள் [ஒவ்வொரு பயிறசிக்கும் 10 பேர்கள்] | ஆயா, சமையல்காரத் துறைகளில் சென்னையிலுள்ள கில்ட் ஆஃப் சர்வீஸில் [சேவா சமாஜத்தில்] பயிறசி பெற .. | மாதத்திற்கு ரூ. 50 வீதம் 6 மாதங்களுக்கு .. | 300 |
| | | ஆடைகள், படுக்கைக்கு .. | 60 |
| | | கைச்செலவிற்கென மாதம் . 5 வீதம் 6 மாதத்திற்கு .. | 30 |
| | | ஒருவருக்கு கிடைக்கக்கூடிய உதவித்தொகை—மொத்தம் .. | 390 |
| 4. முன்னாள் இராணுவத்தினரைச் சார்ந்திருப்பவர்கள். [ஒவவொரு பயிறசிக்கும 10 பேர்கள] | சென்னையிலுள்ள சமூகப்பணிகள் பள்ளியில் சமுதாய நலம் பற்றிய பட்டதாரி, மேல் படிப்பில் பயிறசி பெற [2 ஆண்டுகள்] | போதனைக் கட்டணம் ஆண்டொன்றிறகு .. | 320 |
| | | சிறபபுக்கட்டணம் .. | 100 |
| | | முகாம், மற்றும் சுற்றுலா .. | 250 |
| | | ஆய்வு கட்டுரைத் தயாரிப்பு .. | 200 |
| | | ஓர் ஆண்டிற்கு ஒருவருக்கு கிடைக்கக்கூடிய உதவித் தொகை—மொத்தம் .. | 870 |

[கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 124960-ன் சுருக்கம்].



நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
பன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி

Parry's

ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதருஸ்-1.

உரங்கள் ● பூச்சி நாசினிகள் ● வீரிய ஒட்டு விதைகள் ● ஸ்ப்ரேயர்கள் ● நிபுணத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை


பக்கம்


| | |
|---|---|
| மக்களுக்குச் செய்யும் மகத்தான சேவை | 2 |
| உணவுத் துறையில் காணும் வெற்றிதான் எல்லா வெற்றிக்கும் அடிப்படை | 4 |
| தமிழகத்தில் லட்சாதிபதிகள் | 6 |
| ஒருமைப்பாட்டின் அடிப்படை | 9 |
| காலத்தால் செய்த உதவி | 13 |
| விசையேற்றங்களை நிறுவுதல் | 15 |
| மலேசியாவில் கிராம வளர்ச்சிப் பணிகள். | 19 |
| 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' | 23 |
| மாவட்டப் பரிசு பெற்ற கிராமங்கள் | 29 |
| சீரிய பணியாற்றும் நகராட்சிகள் | 32 |

விவசாயக் கவி அரங்கம்—வேளாண்மைக் கவிஞர்களின் கவிதைகள்.
கவியரங்கக் கவிதை திரு. கா. வேழவேந்தன், எம்.எல்.ஏ.,
மனித வரலாற்றில் மாண்புமிக்க நாள்.
துடியலூர்—வேளாண்மை-கூட்டுறவு நிறுவனம்.
வெற்றி மாளிகையின் வாயிலிலே.
நமது தமிழகம் (சிறப்புக் கட்டுரைத் தொடர்).
சுகாதார நல்வாழ்வும் துப்புரவுப் பணிகளும்.
உணவுப் பிரச்னையைத் தீர்க்க மக்காச் சோளம்.
அமெரிக்க சமாதானத் தொண்டர் கருத்தரங்கு.
கிராம வானொலி மன்றங்கள்—பரிசளிப்பு விழா (சிறப்புக் கட்டுரை).



ஆசிரியக் குழுத் தலைவர் :
திரு. T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு. ஜி திருமால், எம்.ஏ., ஐ.ஏ.எ
ஆசிரியர் : திரு. எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madr
Edited by the Public Relations Officer and Published by the Director of Rural Development, Madras-9.
Chairman of the Editorial Committee Thiru T. A. S. Balakrishnan, I.A.S.
Wrapper printed at Vadapalani Press, Madras-26.


# அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்



சிவப்பு முக்கோணம் குடும்ப நல திட்டத்தின் சின்னம்

## குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

REGD. No. M. 7277

Stanes

ஸ்டேன்ஸ் நிறுவனத்தார் மகிழ்ச்சியுடன் அளிக்கும்

"கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு விதைகள்

உயர் விளைச்சலுக்கும், பெருகிய லாபத்துக்கும் உத்திரவாதமானவை.
நவீன முறையில் வெளிநாட்டு இயந்திரங்களில் பக்குவமாகி, அதிக முளைப்பு
வீரிய சக்தியும், அங்கீகரிக்கப்பட்ட இன சுத்தமும் பெற்றவை.


தற்போது வினியோகத்திலிருக்கும் எங்களது உன்னத ரகங்கள் :—

1. "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு சோளம் CHS-I
2. "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு கம்பு HBI-I
3. "கோல்டு ஸீட்" வீரிய மக்காச் சோளம்

(a) டெக்கான் (தக்ஷிண வீரிய மக்காச் சோளம்—மஞ்சள் ரகம்)
(b) கங்கா—3 (குறைந்த வயது—மஞ்சள் ரகம்)
(c) கங்கா சபேட்—2 (வெள்ளை ரகம்)
(d) ஹை-ஸ்டார்ச் (வெள்ளை ரகம்)

விதை உற்பத்தியாளர்கள் :—

போன் : 30442




தந்தி : "கோல்டுஸீட்"

கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்,
பேரூர், கோயமுத்தூர்-10.

உங்களது விதைத் தேவைக்கும், விபரங்களுக்கும் :—

டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி லிட்,
உர இலாகா, த. பெட்டி எண் 1312, கோயமுத்தூர்-18.

தந்தி : ஸ்டேன்ஸ். போன் : 23351, 23352, 23353, 23354.

தொழிற்சாலைகள் :—

| | | | |
|---|---|---|---|
| வளவனூர்,<br>விழுப்புரம்,<br>போன்-25 | துடியலூர்,<br>போன் : 25385 | ஆவன்யாபுரம்,<br>மதுரை,<br>போன் : 5533 | தச்சநல்லூர்,<br>திருநெல்வேலி,<br>போன் : 195 |

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |